www.padippakam.com

"UYARVOM" BULANAN

# உயர்வோம்

திங்களிதழ்

KDN:P/P8629/8/2001

மலர் 7 திருவள்ளுவராண்டு 2033 பங்குனி 01-04-2002 RM1.50 இதழ் 111

**திருக்குறள் படியுங்கள்**

திருக்குறள் ஒன்றே தமிழர்களின் மறைநூல், இறைநூல், வாழ்க்கை நூல்.

**உயர்வோம் மொத்த விற்பனையாளர்**

*MR. K.S. GANIS*
*MMS - MEDIA MARKETING SERVICES SDN. BHD.*
*NO.2, JALAN ABDULLAH OFF JALAN BANGSAR, 59000 KUALA LUMPUR*
*TEL: 03-2287 1714, 03-2283 6906*



மறைந்த பொதுச் செயலாளர் திரு. பி.பி. நாராயணன்

# மலை விழுங்கிய மகாராசாக்கள் இன்னமும் விழுங்கப் பார்க்கும் எமராசாக்கள்!

சந்தா மாதம் ரிங்கிட் 8 தொழிலாளர்கள் கொதிப்பு

சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை வெறும் 37663

சம்பளம் ரிங்கிட் 750 பெற்றுத் தரவேண்டும்

## போராட்டம் என்பது ஒரு போலியான விளம்பர யுக்தியாக இருக்கக் கூடாது. ஆக்ககரமான செயலுக்கு உரமாக அமைந்திருக்க வேண்டும்!



நிர்வாகப் பொதுச் செயலாளர் திரு. அ. நவமுகுந்தன்

### மாதச் சம்பளம் ரிங்கிட் 325 என்பது காலனித்துவ அடிமை ஆட்சியின் அவலத்திற்கு தோட்டத் தொழிலாளர்களை இழுத்துச் செல்கிறது!

தொடக்க காலத்தில் 3 1/2 இலட்சம் தோட்டத் தொழிலாளர்களில் 90 விழுக்காட்டினருக்கு மேற்பட்டவர்களில் தென்னிந்தியர்களே தொழிற் சங்கத்தில் அதிகமாக உறுப்பியம் பெற்றிருந்தனர். அதன் பிறகு கழுதைத் தேய்ந்து கட்டெறும்பானதுபோல் படிப்படியாகக் குறைந்து மார்ச் திங்கள் 2001-ல் தொழிற் சங்கத்தின் கணக்குப்படி 37663 தொழிலாளர்கள் மட்டுமே உறுப்பியம் பெற்றிருப்பதாக தே.தோ.தொ. சங்கத்தின் புள்ளி விபரம் காட்டுகிறது. (தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)



திரு. ஜி. சங்கரன்

## மாதச் சம்பளம் யாருக்கு வேண்டும்?

ரெ.சு. முத்தையா தலையிட வேண்டும்! கடைசிப் பக்கம் பார்க்க

### சிறந்த சிறுகதைகளுக்கு உயர்வோமின் பரிசளிப்புத் திட்டம்!

- பக்கம் 16

- டத்தோஸ்ரீயின் சாதனை
- எஸ். பக்தவசலம், ஆர்.ஆர். எம். கிருஷ்ணன்
- தினக்கூலி என்ற சொல் வரலாற்றுச் சாதனை
- இனி நாமே தரகர்களாக இருப்போம்!
- திராவிடர் கழகமா? கலகமா?

விழியும் ஒளியும் பக்கத்தைப் புரட்டுங்கள்!



கவிஞர் சூசை மாரிமுத்துவின் தத்துவக் கவிதைகள் நூல் வெளியீட்டுவிழாவின் போது மாண்புமிகு டத்தோ வீரசிங்கம் அவர்களால் சிறப்பிக்கப்படுகிறார்.

தமிழ் எங்கள் உயிர்; தமிழறம் எங்கள் நெறி

படிப்பகம்

www.padippakam.com



திறந்த உள்ளம்

# நான் ஏன் எழுதுகிறேன்?

**என் அன்பு உடன் பிறப்புக்களே!**

நான் ஏன் எழுதுகிறேன் என்ற தலைப்பில் மார்ச் திங்களிலும், பிப்ரவரி திங்களிலும் ஜாதியைப் பற்றியும் அன்பானந்தன் இல்லம் கட்டடத்தைப் பற்றியும் எழுதிய வற்றுக்கு நேரிடையாகவும், தொலைபேசி மூலமாகவும், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாசகர்கள் மூலமாகவும் கருத்துகள் தெரிவித்திருந்தனர்.

ஒரே ஒருவரைத் தவிர நூறு விழுக்காட்டினர் ஆதரவும் பாராட்டும் தெரிவித்து வரவேற்றிருந்தனர்.

## தமிழர்கள் நல்லவர்கள், வல்லவர்கள் இல்லை!

அவர்கள் கூறிய பாராட்டுகளும் கருத்துக்களும் எனக்கு மிக்க உற்சாகத்தையும் ஊக்கத்தையும், ஆர்வத்தையும் தந்தது.

என் உள்ளத்தில் மகிழ்ச்சியும் எழுச்சியும் உண்டானது.

நான் சிக்கல்களைத் தொட்டு எழுதுவதற்கு என்னுள் சற்று தயக்கம் ஏற்பட்டது உண்மை யேயாயினும் விழிப்புத் தன்மையை வரவழைத்துக் கொண்டு, உறுதியுடன் எழுதத் தொடங் கினேன்.

அதற்கு அடிப்படைக் காரணம் எனக்காக நான் எழுதவில்லை. சுயநல நோக்கத்தால் காழ்ப் புணர்ச்சி கொண்டு ஒரு குறிப்பிட்ட இனத்துக்கோ மதத்துக்கோ, ஜாதிக்கோ எழுதவில்லை. ஒட்டு மொத்த தமிழர் நலன் கருதி ஒரு கை தட்டினால் ஓசை கிளம்பாது. அனைவரும் கைதட்டினால்தான் ஓசை கிளம்பும் என்ற பொது நோக்கில் ஒரு ஜாதியினர் உயர்ந்து பிறிதொரு ஜாதியினர் தாழ்ந்து கிடப்பதாலும் , நன்மை பயக்காது. தமிழினம் அனைவருமே ஒன்றுபட வேண்டும் என்ற நன்நோக்கத்தைத் தலையாயக் கடமையாகக் கொண்டு எழுதினேன்.

அதன் பயனால் மிகப் பெரிய பேருண்மைகளைத் தெரிந்து கொள்கின்ற வாய்ப்புக் கிட்டியது தமிழர்களின் உள்ளுணர்வுகளைப் புரிந்து கொள்ளும் வடிகாலாக அமைந்தது. தமிழர்கள் நல்லவர்கள், வெள்ளை உள்ளம் கொண்ட அப்பாவிகள்.

அதற்கான காரணத்தைக் கீழே காண்போம் :

சுங்கைப்பட்டாணி கெடாவிலிருந்து ஒரு மடல் வந்தது. அதில், நான் கவுண்டன் என்று என் பெற்றோர் சொன்னது தெரியும். நான் அதற்கெல்லாம் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. காரணம் நான் பெரியார் கொள்கையை ஏற்றுக் கொண்டவன். ஆனால் என் சொந்தக்காரர்கள், ஜாதிக்காரர்கள் எல்லாம் என்னை ஜாதி சங்கத்தில் சேரும்படி வற்புறுத்தியதால் அதில் சேர்ந்தேன். என் ஜாதிக்காரர்கள் கொடுத்த ஆதரவினால் மயங்கி இருந்தேன்.

ஆனால் உயர்வோமில் வந்த செய்தியைப் படித்துப் பார்த்தேன். ஜாதி வழியில் பிரிந்து போகாமல் ஒற்றுமையாக இருந்தால் எப்படி இருக்கும் என நினைத்துப் பார்த்தேன். அப்போதே என் உள்ளத்தில் இருந்த கறையைத் துடைத்து விட்டேன். இனி என்னை யாரும் மாற்ற முடியாது என எழுதியிருந்தார்.

இன்னொருவர் பத்தாங் பெர் சுந்தையிலிருந்து எழுதியிருந்தார். மேல்மட்டத் தலைவர்களில் யாருமே பரிசுத்தமாக இல்லை என்பதை உணர்ந்து வருந்தினேன். உயர்வோம் என் கண்களைத் திறந்து விட்டது.

மற்றும் ஒருவர் ஜோகூரிலிருந்து எழுதி இருந்தார். ஜாதி சச்சரவினால் நாம் பிளவு பட்டுக் கிடக்கிறோம் என்பது உண்மை. இதற்கு யார் காரணம் என்று சிந்தித்துப் பார்த்தால் நமது இந்தியத் தலைவர்கள்தான் என்று கூற முடியும்.

ஆதலால் ஜாதி என்று சொல்லி வருகின்றவர்களை விரட்டி அடிக்க வேண்டும் என்று எழுதியுள்ளார்.

இன்னொருவர் கிள்ளானிலிருந்து எழுதியுள்ளார். நான் இதுவரை ஐ.பி.எப். கட்சியில் தீவிரமாக இருந்தேன். நீங்கள் எழுதியிருந்ததைப் படித்தப் பிறகு இனி ஜாதியே கூடாது என முடிவெடுத்துள்ளேன்.

ஓர் அம்மையார் பினாங்கிலிருந்து உருக்கமாக எழுதியிருந்தார்.

அன்புள்ள செங்கதிரோன் அண்ணா அவர்களுக்கு வணக்கம். நான் உங்கள் வாசகி. நான் உங்கள் கதைகளையும் கட்டுரைகளையும் விரும்பிப் படிப்பவள். நீங்கள் ஒரு தடவை வானொலியில் பேசியதைக் கேட்டு உள்ளம் சிலிர்த்துப் போனேன். அதன் பிறகு நீங்கள் உயர்வோமில் எழுதிவரும் அத்தனையும் ஒன்று விடாமல் படிப்பேன்.

மார்ச் மாதம் உயர்வோமில் நான் ஏன் எழுதுகிறேன் என்ற கட்டுரையைப் படித்து கண் கலங்கினேன். என் உள்ளத்தைக் கரைத்துவிட்டது. என்னிடம் இருந்து வந்த ஜாதி உணர்வுகளை அப்போதே தூக்கி எறிந்துவிட்டேன்.

தமிழர்கள் ஒன்று சேர வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சோங் மாலிமிலிருந்து ஒருவர் எழுதியிருந்தார் :

இந்தியத் தலைவர்கள் ஒன்று சேர்ந்து ஜாதி சங்கங்களைத் தடை செய்ய வேண்டும் என்று தாங்கள் விடுத்திருந்த கோரிக்கையை ஏற்று, தடை சட்டம் கொண்டு வர ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு நீங்கள் தந்திருந்த விளக்கத்தைப் படித்த பிறகு நம்ம சமூகத்தை எல்லா பயல்களும் ஏமாற்றிக் கொண்டிருக்கின் றார்கள் என்ற உண்மையையும் புரிந்து கொண்டேன்.

அம்பாங் தாசேக்கிலிருந்து ஒருவர் பின்வருமாறு எழுதியிருந்தார்.

எங்க ஜாதி சங்கத் தலைவரின் பேச்சைக் கேட்டு ஜாதிவெறிப் பிடித்து அலைந்து கொண்டிருந்தேன். அதனால் நீண்ட காலமா ஒன்னோடு ஒன்னா அண்ணன் தம்பிகளாகப் பழகி வந்த மற்ற ஜாதிக்காரர்களையும் பகைத்துக் கொண்டேன்.

அப்புறமா கொஞ்சநாள் கழித்து ஓர் ஆன்மீக சங்கத்தில் சேர்ந்தேன். அப்பதான் என் கண்கள் திறக்கப்பட்டன.

மனிதன் இறக்கும் முன்பு கர்மாவிலிருந்து விடுபட வேண்டும்; அதற்கு மனம் தூய்மை வேண்டும். பாவக் காரியங்களை விட்டொழிக்க வேண்டும். எல்லா உயிர்களையும் தன் உயிர்போல் போற்ற வேண்டும். அப்போது தான் கர்மாவிலிருந்து விடுபட முடியும். மனத்தில் உள்ள அழுக்கு நீங்கும்; அழுக்கு நீங்காமல் இருப்பதற்கு கெட்ட எண்ணங்களும், கெட்ட சிந்தனைகளுமே காரணம்!

அடுத்த பிறவி நாம் என்னவாகப் பிறக்கப் போகின்றோம். அது யாருக்குத் தெரியும்? அதனால் இப்பிறவியிலே ஜாதி மதங்களில் வெறி கொண்டு கடவுளை அடைவதற்குத் தடையாக இருக்கின்ற கர்மாவிலிருந்து விடுபட வேண்டும். மனிதனை மனிதன் பிரித்துப் பார்க்கக் கூடாது. அப்படிப் பிரித்துப் பார்ப்பார்களேயானால் ஒருகாலும் இப்பிறவியின் கர்மாவிலிருந்து விடுபட முடியாது.

ஆகவே, கர்மாவிலிருந்து விடுபட மனிதர்களை மனிதர்கள் மதிக்கவும் ஜாதி வேற்றுமைகளை ஒழிக்கவும் வேண்டும். ஆன்மநேய பலம் உண்டாகும். இப்பிறவியில் உண்டான கருமாவிலிருந்து விடுபட்டு இறைவன் அருளைப்பெற முடியும்; என்ற ஞான விளக்கத்தை என் குருவின் மூலம் பெற்றேன்.

இப்போது நான் என்னை முழுமையாக மாற்றிக் கொண்டேன். என் குடும்பத்தினரையும் மாற்றி விட்டேன். என் நண்பர்களையும் மற்றவர்களையும் என்னுடைய நிலைக்குக் கொண்டுவர முயன்று கொண்டிருக்கிறேன்.

எனவே, ஜாதி என்பது நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்ளும் ஒரு போலி. இதில் யாரும் மயங்க வேண்டாம். ஒரு சிலர் தங்கள் சொந்த ஆதாயத்திற்காக ஜாதி

## குண்டுமணிகள் மட்டுமல்ல ஒளிவீசும் வைரமணிகள்

யைக் காட்டி மக்களைக் கெடுக்கின்றனர் என்பதை எனக்குத் தெரிந்த அனுபவத்தைக் கொண்டு எழுதுகிறேன்.

இனியும் ஏமாறாதீர்கள் சகோதரர்களே!

ஐயா செங்கதிரோன் நீங்கள் எழுதியது அனைத்தும் உண்மை. இந்த மாதிரியான செய்திகளைத் துணிந்து எழுதுங்கள். என் போன்றவர்களின் ஆதரவு எப்போதும் துணை நிற்கும்.

மனித நேயம் வாழ்க!
கடவுள் நெறி உயர்க!

மேற்காணும் மடல்களில் வந்திருந்த கருத்துகளைப் பார்த்து உள்ளம் நெகிழ்ந்தேன்.

குப்பைகளிலும் குண்டுமணிகள் கிடைப்பதுபோல், சராசரி தமிழர்களிலும் குண்டுமணிகள் மட்டுமல்லாமல் ஒளிவீசும் வைரமணிகளும் இருக்கின்றனர் என்பதைப் புரிந்து கொண்டேன்.

யான் பட்டறிந்தவைகளின் மூலம் அறிந்த உண்மைகளை வைத்துப் பார்க்கும் போது, சராசரி தமிழர் இனத்தைக் குறை கூறுவதில் பொருள் இருப்பதாகத் தெரியவில்லை.

அதற்கு அடிப்படைக் காரணம் அவர்கள் வாழ்ந்த விதமும் வளர்ந்த விதமும் வேறானவை. வசதியற்ற சூழ்நிலையில் ஏழ்மை, வறுமை பற்றாக்குறை போன்ற வற்றால் பின்தள்ளப்பட்டவர்கள்.

இப்படிப்பட்ட தமிழரினத்துக்கு வழிகாட்டுவதாக ஆசைவார்த்தைகளால் கூறி, அவர்களிடையே இருந்து வந்த கொஞ்ச நஞ்ச மூளையையும் குழப்பி, குட்டிச் சுவராக்கியவர்களில் படித்தவர்கள் எனக் கூறிக் கொண்ட சில சந்தர்ப்பவாத முட்டாள்களும், பொது இயக்கங்களின் வழி சேவையாற்றுவதாகக் கூறிக் கொண்ட சில சுயநல அரைகுடங்களும் அரசியல்வாதிகள் என்று பறைசாற்றிக் கொண்ட பெரு பான்மை தலைவர்களின் தவறா வழிகாட்டுதல்களினாலே தான் சராச சாதாரண தமிழர்களின் பின்னடைவுச் காரணமாக இருந்திருக்கின்றன.



தங்கள் தனிப்பட்ட செல்வாக்க வலுப்படுத்திக் கொள்வதற்காக ஆதிச வெறிகொண்டு ஜாதி என்னும் நஞ்ச வெள்ளை உள்ளங்களில் விதைத்தனர்.

எதையும் சிந்தித்து சீர்தூக்க பார்க்கும் பக்குவம் இல்லாத சூழ்நிலைய வாழ்ந்து வரும் தமிழர்களிடையே சமயத்தி பேரால் தவறான கருத்துக்களைப் புகுத் மூட நம்பிக்கைகளை வளர்த்து வருவத ஒரு பெரிய காரணம் எனலாம். மேற்கானு இவற்றாலெல்லாம் தமிழரினம் பாதிப் குள்ளானது.

இந்தத் தமிழ்ச் சமுதாயத்தை வழிப்படுத்தவும் ஒன்றுபடுத்தவும் எவனுக் பரவலான - விசாலமான எண்ணங் உண்டாகவில்லை. பொதுநல உணர்வுட கூடிய நடு நிலைக் கண்ணோட் இல்லை.

இனம் பிணக்குறுவதால் உண்டா தீமை என்ன? ஒன்றுபடுவதால் உண்டா நன்மை என்ன? என்று கூற வேண் இடத்தில் பதவி சுகத்தோடு வாழ் கொண்டிருப்பவனெல்லாம் அந்தப் பா மக்களின் பல வீனத்தை தங்களுக் சாதகமாக்கிக் கொண்டனர்.

மக்களுக்கு உண்மையைச் சொ மறுத்து, நேரத்துக்கேற்ற மாதிரிய சந்தர்ப்பத்துக்கேற்ற மாதிரியுமே பே வந்துள்ளனர்.

தமிழர் உணர்வையும், தமிழ்மெ உணர்வையும், ஒற்றுமை உணர்வை முன்னேறுவதற்கான வழியையும் ச வந்திருப்பார்களேயானால், தமிழர் டையே பிற்போக்கு எண்ணங்களும் ஜ வெறிகளும் ஏற்படுவதற்கு வழியே இல்ல

உயர்வோமுக்கு தபால் மூ வருகின்ற கடிதங்களும், தொலைபே களும் நேரடி தொடர்புகளும் மேற்கா கருத்துகளைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளன.

தமிழர்கள் நல்லவர்கள்; வல்ல களாக இல்லை என்ற கருத்தை டாக்டர் வரதராசன் அவர்கள் உணர்ந்து கூறிய அமுத வரிகள் தமிழர்கள் அனைவருக் பொருந்துவனவாக உள்ளன.

என் அன்பு இனிய உடன் பிறப்புக நமக்கு மற்றவர்கள் வழிகாட்டுவார்கள் எதிர்பார்த்து, ஏமாந்தது போதும், இ நமக்கு நாமே பகுத்தறிவுடன் வாழ்வோம

படிப்பகம்

www.padippakam.com



"UYARVOM" BULANAN
திங்களிதழ்
# உயர்வோம்

## தேனினும் இனிய என் அன்பு உடன் பிறப்புக்களே!

;தான தமிழில் முத்தாக தங்கள் பொற்பாதங்களுக்கு வணக்கம் சாற்றுகின்றேன்.

ண்மைய உயர்வோமை பார்த்திருப்பீர்கள், படித்திருப்பீர்கள், சிலர் பார்த்தும் ங்காதவர்களாகவும் வாங்கியும் படிக்காதவர்களாகவும் அனேகர் இருக்கக்கூடும்.

ிலர் படிக்க நேரமே இல்லை என்போரும், சிலர் நுனிப்புல் மேய்வோரும் உண்டு.

று சிலர் இதைப் படித்து என்ன இருக்கிறது, தூக்கிக் குப்பையில் போடு என்போரும் ண்டு.

ன்னும் சிலர் நான் தமிழ்ப் பேப்பரையே படிப்பதில்லை என்றும் கூறிக்கொள்வர். ப்படிக் கூறிக் கொள்வதிலும் ஒரு பெருமை - ஒரு ஆத்ம திருப்தி. அதைக் காது ாடுத்து கேட்கின்றவர்கள் அதற்கு ஆமாம் போட்டு ஒத்துக்கு மத்தளம் அடிப்பார்கள். ற்கு எதிர்ப்பலைகளைத் திரட்டுவார்கள். சுருக்கமாகச் சொல்லப் போனால் ண்ணிக்கையில் அதிகமான தமிழர்களின் கருத்துக் கணிப்பு இந்த அளவிலேதான் நக்கிறது.

ிழைப் படிக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் வெறுத்தொதுக்குகின்ற ர் இனிய தமிழர்கள் பிற செயல்பாடுகளில் ஒழுங்கையும் நேர்மையையும் ாபற்றுகின்றார்களா? என்றால் அப்படி இல்லவே இல்லை. இருக்கவே முடியாது. படிப்பட்டவர்கள் சினிமா போன்ற கேளிக்கைகளில் ஈடுபடு கின்றவர்களாகவும் ாதைப் பொருட்களில் மிதக்கின்றவர்களாகவும் பிறமொழி பத்திரிகைகள் ங்குகின்றவர்களாகவும் தேவை இல்லாதவற்றில் மோகங் கொண்டு வீண் விரையம் ய்வதில் கவனம் செலுத்துகின்றவர்களாகவும் இருக்கின்றனர். அப்படியே தமிழ்ப் திரிகைகளையோ, புத்தகங்களையோ வாங்குபவராக இருந்தாலும் சினிமா போன்ற ாசக் களஞ்சியங்களையே விரும்பி வாங்குகின்றனர்.

; சிலரே விதிவிலக்காக ஒரு சில நல்ல புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து ங்குகின்றனர்.

ரும்பான்மையினர் அதற்கு முற்றிலும் மாறுபட்டவர்களாக இருக்கின்றனர்.

வ்வாறான சூழ்நிலையில் தமிழ்ப் படிக்க வேண்டும். தெரிந்து கொள்ள வேண்டும் ற எண்ணமோ! அறிவு சார்ந்த தரமான படைப்புகளைத் தேடிப் பார்த்து வாங்கிப் க்க வேண்டும் என்ற உணர்வோ அடிப்படையிலே இல்லாதவர்கள் குறை ுவதையே தொழிலாகக் கொண்டுள்ளனர்.

ழனாகப் பிறந்த ஒவ்வொருவனும் தன்னுடைய தாய் மொழியைப் படிக்கவும் ர்க்கவும் கடப்பாடுடையவனாக இருக்க வேண்டியவர்கள் யாருக்காகவோ, ற்காகவோ படிக்க வேண்டியவனாக இருக்கின்ற நிலையில் மற்றவர்கள் மேல் ையைப் போட்டுவிட்டு தான் ஒரு உத்தமன் போன்று பேசுவதும் நடந்து கொள்வதும் ழர்களுக்கே உரிய பழக்கமாகி விட்டது.

தகைய ஈனத்தனமான சிந்தனையும் செயலும் தமிழர்களிடம் மட்டும்தான் ;க்கும் என்ற நிலை தமிழர்களில் பரவலாகக் காணுகின்ற அவல நிலையாகும்.

ன் தமிழின் பெருமையை அறியாதவனாக முற்றிலும் தன் பழக்க வழக்கங்களை றிக் கொண்டு விட்டவன் சகட்டு மேனியாகத் தமிழ்ப் படிவங்களை வெறுப்பவனாக ;க்கிறான்.

ன்மையிலேயே தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுப்பவனாக ந்தால், முதலில் எல்லா நூல்களையும் கவனத்தில் கொண்டு தரமானவை எவை, ற்றவை எவை என அறிந்து, தெளிந்து நேர்ந்தெடுத்துப் படிக்கின்றவனே ழக்கு மகுடமாக அமைவான்!

ன்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
ாணென்ப வாழும் உயிர்க்கு"

வள்ளுவர் பெருமான் அருளியுள்ளார்.

ாணும் எழுத்தும் இவ்விரண்டும் கண் என்ப என்று கூறும் வள்ளுவர் வாழும் ிர்க்கு என்றுதான் கூறுகின்றார். வாழும் மனிதர்க்கு என்று கூறவில்லை. வாழும் ிர் என்றால் உயிரினங்களைக் குறிக்கும் என்பதால் அதற்கு மேம்பாடான தருலகம் எண்ணும் எழுத்தும் என வலிந்து வலியுறுத்துகிறது.

; மொழியில் படிப்பது என்ற கேள்வி எழும். தமிழ் மொழியில் இயற்றப்பட்டுள்ள க்குறள் தமிழர்களாகிய நாம் தமிழில் படிக்க வேண்டும் என்று சொல்லித் ிவதில்லை.

வகை எல்லாம் ஆராய்ந்திடின் வயிறு வளர்க்கவே உடல் எனின் அது மிருக லையைக் குறிக்கும்; அதனிலும் மேலான நிலையை அடைவதே மனித நிலை பதாகும். அதுவே வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் ்கப்படும் என திருக்குறள் வழிகாட்டுகிறது.

நகைய ஆறறிவுடைய மனிதன் பகுத்தறிவுடன் வாழ வேண்டும். அனைத்தையும் ிந்து கொள்ள வேண்டும்.

இந்த அடிப்படையில்தான் நல்ல எழுத்துப் படிவங்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டும். இன்று தமிழர்களிடை உள்ள பொதுவானக் கருத்து யாரும் உண்மையை எழுதுவதில்லை. பொய்யும் புரட்டும் புனை சுருட்டுகளுமே பெரும்பாலும் படைப்புகளாக வந்து கொண்டிருக்கின்றன.

மக்களின் மனநலன்கள் கெடுகின்ற படைப்புகளும் அயோக்கியர்களுக்குத் துணைபோகும் எழுத்துக்களுமே எழுதுகின்றார்கள். உண்மையை எழுதுகின்ற துணிவு எவனுக்குமே இல்லை என்ற குறைபாடு பலரிடம் இருக்கின்றது.

பொது மக்களுடைய எண்ணங்கள் சரிதான் என்றாலும் எல்லாவற்றையும் எழுதுகின்ற சூழ்நிலைகளும் அதற்கான வாய்ப்புகளும் இங்கு இல்லை என்ற உண்மை தெரிந்து கொள்ள வேண்டும்.

எனினும் தீமைக்குத் துணைபோய் கையூட்டு வாங்குகின்ற கீழான செயல்களில் இறங்காமல் இருந்தாலே அதுவே மிகப்பெரிய அறச் செயலாகும். அதற்கும் பஞ்சமாகி பஞ்சமா பாதகங்களில் ஈடுபடும் போதுதான் பத்திரிகை தர்மம் என்பது பாழ்பட்டு அதன் தனித்தன்மை சிதைக்கப்படுகிறது.

இங்கே இன்னொன்றையும் என் இனிய தமிழ்ப் பெருங்குடியினர் சிந்தையில் கொள்ள வேண்டும்.

ஒரு நடுநிலையான பத்திரிகையாளன் நடுநிலை கண்ணோட்டத்தோடு எழுதுகின்றபோது, அதை மக்கள் வரவேற்று ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்க வேண்டுமல்லவா என் அன்பு உடன் பிறப்புக்களே!

அந்தப் பணியில்தான் உங்களை நம்பி உயர்வோம் களத்தில் இறங்கி இருக்கிறது. வாசகர்களுக்கு உண்மை செய்திகளைக் கொடுக்க வேண்டும் என்பதில் விருப்பம் உடையவர்களாக இருக்கின்றோம். உண்மைகள் மறைக்கப்பட்டு அறியாமை இருளில் மெய்மைக்கும் பொய்மைக்கும் வேற்றுமைத் தெரியாமல்
எதார்த்தமாக நம்பி ஏமாற்றமடைகின்றனர். அப்படிப்பட்டவர்களுக்கு ஓரளவு தெளிவை உண்டாக்க வேண்டும் என்ற லட்சிய உணர்வோடு முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் உயர்வோம் துணிந்து செயலில் இறங்கியுள்ளது.

இத்தகைய அர்ப்பண உணர்வோடு எந்தவித படைபலமோ, பணபலமோ இல்லாமல் உண்மையையும் - உணர்வையும் - உறுதியையும் - ஆர்வத்தையும் மட்டுமே முதலீடாகக் கொண்டு எழுதுகோலை துணையாகக் கொண்டுள்ளோம். யான் உங்களிடம் எதிர்பார்ப்பதும் நீங்கள் செய்ய வேண்டியதும் ஒன்றே ஒன்றுதான். உயர்வோமை வாங்கிப் படியுங்கள்; மற்றவர்களையும் வாங்கும்படித் தூண்டு\ங்கள்; உங்களால் இயன்ற அளவுக்கு படிவங்களை வாங்கி மற்றவர்களுக்கும் கொடுத்துப் படிக்கச் சொல்லுங்கள்.

நல்லவை நடக்க வேண்டுமானால் நல்லதைச் செய்யுங்கள். தமிழர்கள் நலம் பெற வேண்டுமானால் நல்ல படைப்புகளைத் தாங்கி வரும் உயர்வோமை வாங்கிப் படியுங்கள்.

கதை, கட்டுரை, கவிதை, நேர்காணல், போன்றவையும் செய்திகள், நிகழ்வுகள் போன்ற உங்கள் கருத்துகள் எதுவாயினும் எழுதி அனுப்புங்கள், உயர்வோம் வரவேற்கின்றது.


**ஆசிரியர்,**
**செங்கதிரோன்**

## சிறந்த திறனாய்வுக்கு ரொக்கப் பணம் பரிசு!

திராவிடர்கழக தேசியத் தலைவர் திரு. ரெ.சு. முத்தையா அவர்கள் நல்லுள்ளத்தோடு திறனாய்வுக் கட்டுரைகளுக்கானப் பரிசுகளை வழங்க முன் வந்துள்ளார்.

உயர்வோமில் திங்கள் தோறும் வெளிவரும் சிறந்த திறனாய்வு படைப்புகளுக்கு முதலாம் இரண்டாம் மூன்றாம் பரிசாக ரிங்கிட் 100, 75, 50 என வழங்கப்படும்.

1.2.02-ல் உயர்வோமில் வெளியான படைப்புகளை தொடக்கமாகக் கொண்டு பரிசு போட்டிகள் தொடங்கப்படுவதால் வாசகர்கள் விரும்பும் ஏதாவது ஒரு தலைப்பை தேர்வு செய்து உங்கள் கருத்தை எழுதி அனுப்ப வேண்டும்.



ஒவ்வொரு திங்களும் நடைபெறும் இப்போட்டியில் நடுவர்களால் தேர்வு செய்யப்படும் படைப்புகளுக்கானப் பணத்தை தபாலில் அனுப்பி வைப்பதுடன், வாசகர்களின் சிறந்த கட்டுரைகள் உயர்வோமில் வெளியிடப்படும்.

விதிமுறைகள் :-

1. முழுப்பக்கத்தாளில் இரண்டு பக்கங்களுக்கு மேற்போகாமல் ஒரே பக்கத்தில் அடித்தல் திருத்தல் பிழையின்றி எழுதியிருக்க வேண்டும்.

2. புனைப் பெயரில் எழுதியிருந்த போதிலும் உங்கள் உண்மைப் பெயரையும் முகவரியையும் அனுப்பும் தேதியையும் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

3. ஒருவரே எத்தனை தலைப்புகளில் வேண்டுமானாலும் எழுதலாம். ஆனால், ஒவ்வொரு எழுத்துப் படிவமும் ஒரே தலைப்பை மட்டுமே கொண்டிருக்க வேண்டும்.

4. தொடக்கமாக 1.2.02-ல் உயர்வோமில் வெளியான படைப்புகளை 7.3.02-க்குள் எழுதி அனுப்ப வேண்டும்.

கடித உரையின் மேல் திறனாய்வுக் கட்டுரை என எழுத மறவாதீர்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி :-**
**ஆசிரியர் உயர்வோம்**
**எண். 34B, ஜாலான் பெட்டாலிங் உத்தாமா 9,**
**ஆ.:.ப் ஜாலான் கிள்ளாங் லாமா பத்து 7,**
**46000 பெட்டாலிங் ஜெயா,**
**சிலாங்கூர் டாருல் ஏசான்.**

படிப்பகம்

# விழியும் ஒளியும்

## கேள்வி - பதில்

**செங்கதிரோன்**

**ஆர். கணேசன், சுங்கைவே.**

**கே : பக்தவசலம் அவர்கள் அளித்த நேர்காணலில் தமிழ் இளைஞர் மணிமன்றத் தலைவர் ஆர்.ஆர்.எம். கிருஷ்ணன் பதவி விலக வேண்டும் என்று கூறி இருந்தும் அதைப் பற்றிய எந்த பதிலும் இதுவரை எழவில்லையே ஏன்?**

ப : தானாக வலையில் போய் சிக்கிக் கொள்ளாத சாணக்கியத்தனமாக இருக்கலாம்.

**கோ. பாபுச்சந்திரன், கெர்லிங்.**

**கே : டத்தோஸ்ரீ ச. சாமிவேலு அவர்கள் இந்தியர்களுக்காக செய்த சாதனைகளில் எதைப் பெரிய சாதனையாகக் கருதலாம்.**

ப : என்ன அப்படி கேட்டு விட்டீர்கள் பாபு. துணை அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள்; ம.இ.கா. துணைத் தலைவர், உதவித் தலைவர்கள் மத்திய செயலவை உறுப்பினர்கள், செனட்டர்கள், ஊராட்சிமன்ற உறுப்பினர்கள், மற்றும் கிளைத் தலைவர்கள் போன்றவர்கள் எல்லாரையுமே தன் சுண்டுவிரல் அசைவுக்குள் அடங்கி, ஒடுங்கி வாய் பொத்தி - கைபொத்தி நிற்கும்படி செய்திருக்கின்றாரே! இதற்குமேல் என்ன வெங்காய சாதனை வெண்டிக்கிடக்குது?



**கே : தே.தோ. தொழிற்சங்கத்தைப் பற்றி டத்தோஸ்ரீ அவர்கள் புகழ்ந்து பேசியுள்ளாரே, அதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?**

ப : ஆமாம்... ஆமாம்... நானும் பார்த்தேன். 1963-ம் ஆண்டு எனக்கும் தொழிற்சங்கத்தான்களுக்கும் மோதல் ஏற்பட்டது.அதில் என் தரப்பில் நியாயம் இருந்ததை உணர்ந்து, துன் சம்பந்தனார் இல்லத்திற்கு என்னை அழைத்துச் சென்றதும், அவரின் கட்டளைக்குட்பட்டு வழக்கறிஞரைப் பார்க்க டத்தோஸ்ரீ அவர்கள் சிரம்பானுக்கு மூன்று தடவை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றதும் இன்னும் என் நினைவில் இருக்கிறது.

**கண்ணன், தைப்பிங்.**

**கே : தைப்பிங் தமிழ்ச்சீலர் ம.செ. மாயதேவன் அவர்களை மறந்து விட்டீர்களே?**

ப : அவரையாவது மறக்கவாவது, 1956 -ம் ஆண்டு என்று நினைக் கிறேன். அவரால் அச்சேற்றி வெளிவந்து கொண்டிருந்த "திருமுகம்" என்ற திங்களேடு அமரர் ஆசிரியர் அன்ப ரசன் அவர்கள் மூலமாக எனக்கு அறிமுகமானது, அப்போது அவருடைய எழுத்துப் படிவங்களை விரும்பிப் படித்தவன்.

அதன் பிறகும் தமிழர் பொதுப் பேரவையின் மூலமாகவும் அவருடன் சேர்ந்து பணியாற்றுகின்ற வாய்ப்பும் கிடைத்தது. கடந்தாண்டும் அவர் இல்லம் ஏகினேன். எனக்கு உணவு அளித்து உறையுள் தந்து, உபசரித்தவர் எடுத்துச் சென்ற புத்தகத் திற்குப் பணமும் தந்து வழியனுப்பினார்.

அவர் தமிழ்ச் சீலர் மட்டுமல்ல, ஒழுக்கத்திலும் பண்பிலும் அன்பிலும் தமிழ் உணர்விலும் ஒழுக்கச் சீலர்தான்; அவரை எப்படி மறக்க முடியும்? கண்ணனார் அவர்களே?

**உ. கணபதி, செமினி.**



**கே : இந்து இளைஞர் சங்கத்தின் தலைவராக இருந்து வரும் ராஜரத்தினம் அவர்கள் சம்பு குல சத்திரியர் எனும் ஜாதி சங்கத்திலும் துணைப் பொதுச் செயலாளராக இரட்டை வேடம் போட்டுக் கொண்டிருக்கலாமா?**

ப : இருக்கலாமா? கணபதி; அதுதான் என் கேள்வியும் கூட.

**முனியாண்டி, சுங்கை பூலோ.**

**கே : இந்நாட்டில் திராவிடர் கலகம் தேவையா?**



ப : கலகம் தேவையில்லை. ஆனால், கழகம் தேவைதான். கழகக் கொள்கையைப் பின்பற்றி அதன்படி நடந்து மக்களுக்கு நன்மை செய்வார்களேயானால் கழகம் தேவை. ஆனால் அதற்கு முரண்பட்டு கலகம் செய்வதாக இருந்தால் தேவையில்லை.

**கே : தமிழர்கள்தான் திராவிடர் கழகத்தின் பேரை வைத்துக் கொண்டு கட்டி அழுது கொண்டிருக்கின்றனர். ஆனால், மலையாளிகள், தெலுங்கர்கள், கன்னடர்கள் தமிழர்களைப் பற்றி சிந்திப்பது இல்லையே ஏன்?**

ப: "எங்களுக்கென்ன தலை எழுத்தா? தமிழன் பின்னால் போறதுக்கு? அவனுங்களுக்குத்தான் பொழப்பு கெட்ட பொழப்பு" அப்படி ஒருவன் சொன்னதை என் காதினாலே கேட்டு வேதனைப் பட்டேன். அதனால் திராவிடர் என்ற பேரை மாற்றிக் கொள்வது நல்லதாக இருக்கும் என நினைக்கிறேன்.

**அ. சின்னசாமி, குவாந்தான்.**

**கே : சில அரசியல் கட்சித் தலைவர்கள் மாலை, பொன்னாடை போடுவதையே தொழிலாகக் கொண்டுள்ளனரே ஏன்?**

ப : அது ஒன்றுதானே அவர்களுக்குள்ள துருப்புச் சீட்டு, பெரியதா எதையும் எதிர்பார்க்கா விட்டாலும், பி.ஜெ.கே., பி.பி.என். னாவது கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புதான்.

**கே : பணம் சம்பாதிக்கணும். அதற்கு ஒரு வழி சொல்லுங்களேன்.**

ப : காவி உடையை மாட்டிக்கிங்க. அதோடு கொஞ்சம் தாடியும் வளரட்டும். இரண்டொரு மாதம் மற்றவங்க பார்வை யிலிருந்து மறைவா இருங்க, அப்புறம் வாங்க; காசி, ராமேஸ்வரம், ரிஷிகேசம் போயிட்டு வந்ததாகச் சொல்லுங்க, உங்க வாயிலிருந்து வருகின்ற வார்த்தைகள் எல்லாம் தேவ வார்த்தையா நினைத்து நம்புவாங்க; அப்புறம் பாருங்க, பணம் கொட்டோ கொட்டுன்னு கொட்டும். பிறகென்ன நீங்க சின்னசாமி இல்ல, பெரியசாமி.

**வே.அறிவழகன், பெட்டாலிங் ஜெயா.**

**கே : சிலர் பிரயோசனம் இல்லாமல் மணிக் கணக்கில் அளக்கிறார்கள். ஆனால், நல்ல பொதுக் காரியங்களுக்கு ஒத்துழைப்பு கொடுங்க என்று அழைத்தால், "ஆளை விடு" என்கிறார்களே அவர்களைப் பற்றி என்ன சொல்வது?**

ப : பயனில் பாராட்டுவானை மகன் எனல் மக்கட்பதடி எனல்" எனும் வள்ளுவர் குறளை நினைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

யாருக்கும் எந்தவிதப் பயனும் இல்லாமல் பேசுகின்றவனை மகன் என்று சொல்லாதே, பதர் என்று கூறு என்கிறார். நீங்கள் அப்படிப்பட்டவர்களை "மனிதப் பதர்" என்று ஒதுக்கி விடுங்கள்."

**பி. ராமநாதன், புக்கிட் சிராக்கா**

**கே : தினக்கூலி என்ற அவலத்தைப் போக்கி சாதனைபுரிந்த ஆண்டு 2001 என்று ஒரு வார ஏட்டில் பார்த்தேன். அப்படின்னா என்ன?**

ப : அடேயப்பா! எம்முட்டு பெரிய விஷயம்; வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவை.

**கே : அதே வார ஏட்டில் தரகர்களின் உதவியை நாட வேண்டாம் என்று கேட்டுக் கொ[ள்]ளப்பட்டிருக்கிறதே!**

ப : நாங்களே தரகர்களுக் கெல்லாம் தரகர்களாக இருந்து வருகின்றபோது இடையில் மற்றவர்கள் தரகர்களாக வருவதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? அவர்களுக்கு தலை குனிவை உண்டாக்காதா? என்னா ராமநாதன் விவஸ்தை இல்லாம கேள்வி கேட்கறீங்க.



**உ. ராஜகுமாரன், தெலுக் இந்தான்.**

**கே : இந்நாட்டில் இந்தியர்களில் தமிழர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தும் தொலைக் காட்சியில் இந்திக்குக் கொடுக்கும் வாய்ப்பு பஞ்சாபியர்களுக்கு வழங்கப்படுகின்ற முக்கியத்துவமும் நமக்கில்லையே ஏன்?**

ப : அதைத்தான் கேட்கிறேன் "நமக்கில்லையே ஏன்?"

தமிழர்கள் ஒரு இனமாக ஒற்றுமை இல்லாமல் இருக்கும்போது, மற்றவர்களுக்கென்ன தலையெழுத்தா? உரிமையைப் பற்றிப் பேசுவதற்கு தலைவர்கள் நிறம் மாறும் பச்சோந்திகளாக இருக்கும்போது, அதற்குநாம் என்ன செய்யலாம் ராஜகுமாரன்.



**பெரியவர் : "கிழமை வர்ற மாதிரி திட்டினா எப்படித் திட்டுவாங்க சொல்லு பார்ப்போம்?"**

**சிறுவன் : "சொன்னா பார்க்க முடியாது. கேட்கத்தான் முடியும்."**

**பெரியவர் : போடா "சனி" யனே!**

**தமிழை அழிக்கிறான்**

தமிழன் என்று கூறுவான் - இவன்
தலையைத் தாழ்த்தி வணங்குவான்

திக்கித் திக்கிப் பேசுவான் - இவன்
தமிழனைக் கெடுக்க நினைப்பான்

முக்கி முக்கி அளப்பான் - இவன்
முழுவதும் பொய்யை விதைப்பான்

விக்கி விக்கி அழுவான் - இவன்
விடியும் வரைக் குடிப்பான்

கூப்பிக் கூப்பி வணங்குவான் - இவன்
கோடரிக் காம்பாய் மாறுவான்.

தம்பித் தம்பி என அழைப்பான் - இவன்
தாய்த் தமிழைக் கெடுப்பான்.

குறளைப் படிக்க மாட்டான் - இவன்
குறளை ஒழிக்கப் பார்ப்பான்.

**சீனிவாசன், பிரிக்பீல்ட்ஸ்**

# அன்புச் செல்வனின் "சிறுகதைகள்" நூல் வெளியீடு கண்டது!

சமூக பண்பாட்டுப் பக்தி இயக்கத்தின் ஏற்பாட்டில் மு. அன்புச்செல்வனின் சிறுகதை வெளியீட்டின்போது பிடிக்கப்பட்ட படங்களைக் காணலாம்.




திரு. பழ. எ. அன்பழகன் அவர்களுக்கு, பக்தியின் தலைவர் திரு. மனோகரன் மாலை அணிவிக்கின்றார்.




சிலாங்கூர் மாநில பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் திரு. முனியாண்டி அவர்கள் நூல் வெளியீடு செய்கிறார்.

# வசந்தம் கானல் நீரானது

**சிறுகதை :**
**மலர்விழி த/பெ மேகநாதன்**
**தைப்பிங்**

கதிரவன் தன் ஒளிக்கதிர்களால் மியைச் சுட்டெரித்துக் கொண்டிருந் ான். அமுதா சாலை ஓரத்தில் உள்ள ஒரு டையில் நீர் அருந்த சென்று அங்கு கிடந்த ரு நாற்காலியில் அமர்ந்தாள். அவள் னதில் ஏற்பட்ட காயங்களின் ஆராத டுக்கள் நெஞ்சில் அழிக்க முடியா னைவுகளாய் இருந்தன. துன்பக் கனலில் வந்துக் கொண்டிருப்பதை அவள் முகம் ாட்டியது. முகம் உள்ளத்தின் கண்ணாடி. ;தயத்தின் எதிரொலி. ஆழ்மனத்தின் ஓர் ரத்தில் மலையாய் குவிந்திருந்த வதனையில் மூழ்கி மீள முடியாமல் வித்திருந்தாள்.

பத்தொன்பது வயது நிரம்பிய அழகு ாரகை அமுதா, பூங்காற்று வீச வேண்டிய வள் வாழ்வில் காரிருள் மட்டுமே குடி கந்திருந்தது. பௌர்ணமியாய் மலந் ருந்த அவளை துன்பம் என்னும் கரு மகங்கள் சூழ்ந்து கொண்டன. இதுவரை மைதியாக இருந்த கடல் திடீரென்று காந்தளிப்பில் திளைத்துக் கொண் ருந்தது போல விழிகளில் மல்கிய நீருடன் தனீரைப் பருகிவிட்டு கைகளில் வைத் ருந்த இரண்டொரு கோப்புகளுடன் டையைத் தொடர்ந்தாள். கடந்த கால ாழ்க்கையின் நினைவலைகளின் ஏடுகளை மல்லப் புரட்டினாள்.

ஆறு ஆண்டுகளுக்கு முன், டைநிலைப் பள்ளியில் நனி சிறந்த ணவியாகத் திகழ்ந்தாள். பல்கலைக் ழகத்தில் படித்துப் பொறியியல் ல்லுனராக பட்டம் பெற வேண்டும் என்ற னிமைக் கனவுகளில் மிதத்திந்திருந்தாள். னைத்துப் பாடங்களிலும் முதல் ணவியாக மிளிர்ந்தாள். ஆசிரியர்களின் ராட்டுகள் மலர் மாலைகளாய் குவிந்தன. தே சமயம் சில மாணவர்களின் ாறாமையும் இவளைப் பின்தொடரவே ெய்தன. இன்னல்களுக்கும் இடர்பாடு ளுக்கும் அவள் மனம் தளரவில்லை. பற்றிக் கனியைப் பெறவேண்டும் என்றால் திர் நீச்சல் போட்டுத்தான் வரவேண்டும் ாபதை தன் மனதில் பசுமரத்தாணி போல் ிய வைத்திருந்தாள். தனது இலட்சியப் ணத்தைத் தொடர்வதிலேயே முனைப்புக் ட்டினாள். கல்வியில் மட்டும் சிறந்தவள் ல்ல அமுதா. அன்பின் உருவமாய், பண்பின் ப்பிடமாய், பணிவின் உரைவிடமாய் கிழ்ந்து மணம் மொய்க்கும் எறும்புகள் ாலவும் தோழிகள் அவளை அனுதினமும் ூந்திருந்தனர். அழகிய வெண்ணிலாவைச் றி மின்னும் நட்சத்திரங்களாய் இவர்கள் கழ்ந்தனர். பூவோடு சேர்ந்த நாரும் ாக்கும் போது, இவர்கள் மட்டுமென்ன விதிவிலக்கா?

நாட்கள் விரைந்தோடின. மூன்றாம் படிவத்தில் காலடிப் பதித்தாள். அரசாங்க சோதனையை எதிர் நோக்குவதால் தனது முயற்சியை இரட்டிப்பாக்கினாள். வாழ வேண்டும், வளர வேண்டும், உயர வேண்டும்,



உய்ய வேண்டும், தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற கொள்கைகளுடன் பயின்றாள். பால் வெட்டுமரத் தொழிலாளி யாக இருக்கும் தன் பெற்றோரைப் போல் அல்லாது சிறந்த தொழிலில் அமர வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் அவள் மனதில் என்றும் ஒலித்துக் கொண்டிருந்தது. காத்திருந்த தேர்வும் வந்தது. சிறந்த மாணவியாதலால் தேர்வினைச் சிரமமின்றிச் செய்தாள். இத்தேர்வைச் சிறப்பாக செய்து முடித்து விட்டோம் என்ற மகிழ்ச்சியில் தேர்வு முடிவுக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தாள்.

சில மாதங்கள் கடந்தன. தேர்வு முடிவுகள் நாளை அறிவிக்கப்படும் என்று கூறப்பட்டது. அன்று மாலை அமுதா அவளது அறையில் நாவல் ஒன்றை வாசித்துக் கொண்டிருந்த வேளையில் "அமுதா, அமுதா" என்று அவளது தந்தை மாணிக்கம் அழைத்தார். "என்னப்பா, ஏன் கூப்பிட்டீர்கள்?" என்று கேட்டாள். தன் தந்தையின் பதிலைக் கேட்டவுடன் அந்த நிமிடம் அவளது இதயத் துடிப்பே நின்றுவிடும் போல் இருந்தது. நாளை இரவு உன்னைப் பெண் பார்க்க வருவதாகவும், அனைத்துப் பொருத்தமும் அமைந்திருந்தால் திருமணம் நடந்தேறும் என்ற பதில் அவள் மனதில் காயத்தை ஏற்படுத்தியது. நேற்றுவரை தென்றல் வீசிய பூச்சோலையில் திடீரென்று புயல் காற்று வீசத் தொடங்கிற்று. அன்றிரவு நெடு நேரமாகியும் அமுதா கண் அயரவில்லை. அவளது தந்தையே அவளின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு தூக்குக் கயிறாக அமைவதை எண்ணி வெதும்பி னாள். கீறல்கள் அவளது இதயக் கண்ணாடியை நொறுக்கின. உள்ளத்தை இரும்பாக்க முயன்றாள், பெண் மனம் அன்றோ? மேலும் காயப்பட்டதே தவிர, திடமாக முடியவில்லை.

காலைக் கதிரவன் எழுந்தான். உலகத்திற்கு ஒளியை அளித்தான். அவளுக்கு மட்டும் ஏனோ மறுத்தான். மனதில் இத்தனை சுமைகளுடன் பள்ளியை சென்றடைந்தாள். அவளது தோழிகள் பலர் பள்ளி வளாகத்தில் இருந்தனர். பள்ளியினுள் நுழைந்ததுமே அவளது வகுப்பாசிரியை "வாழ்த்துக்கள் அமுதா, பள்ளியிலே நீ தான் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளாய். நான்காம் படிவத்தை பட்டணத்தில் தொடரலாம்" என்று மகிழ்ச்சி பொங்க கூறினார். கையில் தேர்வு முடிவுச் சீட்டை வைத்திருந்தாள். தன் விழிகளிலிருந்து நீர்த்துளிகள் விரைந்தன. ஆனந்தத்தால் அல்ல, சிறப்பான முடிவினைப் பெற்றதன் பயன்தான் என்ன? தனது தந்தை கூறிய வார்த்தைகள் அவள் மனக்கண் முன் நிழலாடிக் கொண்டிருந்தது. "அமுதா, எந்தப் பள்ளியில் நான்காம் படிவத்தை தொடறப் போகிறாய்?" என்ற அவளது தோழி தேவியின் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. "தெரியவில்லை" என்று கூறிவிட்டு தனது உயிர்த் தோழி கயல்விழியைப் பார்க்கச் சென்றாள். மனதில் இருந்த சுமையினை அவளிடம் கொட்டித் தீர்த்தாள்.

ஆனாலும் தன் மனப் புண்ணுக்கு ஆறுதல் கூற வழி தெரியாமல் குழம்பினாள்.

கொஞ்சநேர அமைதிக்குப் பின் எதற்கும் நீ திரும்பிப்போய் உன் பெற்றோருடன் உன் எண்ணத்தை எடுத்து சொல், படிப்பின் அவசியத்தை உணர்ந்து, உன் எதிர்கால ஆசையைப் பற்றி ஒன்று விடாமல் சொல்லிவிடு. இந்த அளவுக்கு உன்னை படிக்க வைத்திருக்கும்போது நிச்சயம் ஒத்துக்கொள்வார்கள் என்று ஆறுதல் சொல்லி அனுப்பி வைத்தாள் தோழி.

அமுதா மன இறுக்கத்தோடு வீடு சென்றடைந்தாள். மகள் வெளியே சென்று நீண்டநேரம் ஆகியும் இன்னும் காண வில்லையே என எதிர்பார்த்துக் கொண் டிருந்த பெற்றோர் அவ்ளைப் பார்த்ததும் மகிழ்ச்சி அடைந்தனர்.

என்னம்மா, ரொம்ப சோர்வா இருக்கிறியே என்ன நடந்தது சொல் லும்மா, தாய்தான் கேட்டாள்.

"கல்யாணத்தைப் பற்றி சொன்னது பிடிக்கல போல..."

"ஆமாங்க, நல்லா படிக்கிற வயசுல கல்யாணம்னு வற்புறுத்துனா எப்படி?"

"இங்கப்பாருடி, என் தங்கச்சி மவனுக்கு கொடுக்கிறதா வாக்குக் கொடுத்திட்டேன்!"

"கொடுத்தா என்ன? பச்சைக் கொழந்தைய பிடிச்சுக் கொடுக்கணுமா?"

"இதப்பாரு, அது இதுன்னுப் பேசாத. நான் சொன்னா சொன்னதுதான். ஆத்தாளும் மவளும் என்னோட பேச்ச மறுத்திங்கன்னா இந்த வீட்ல பொணம்தான் விழும்."

தாயும் மகளும் மூச்சை அடக்கிக் கொண்டனர். இனியும் வாயைத் திறந்தா அடிதாங்காது. அதுக்கு முன்ன ஏற்பட்ட அனுபவங்களை வைத்து அப்படி மூச்சை அடக்கிக் கொண்டனர்.

இரண்டு மாதங்களுக்கிடையில் அமுதாவின் தந்தை நினைத்ததை சாதித்துக் கொண்டார்.

கண்ணீருடன் கழுத்தை நீட்டியதி லிருந்து அவள் நடைப் பிணமானாள். அத்தை மகன் என்பதைத் தவிர அவனிடம் எந்த நல்ல பழக்கமும் இல்லை என்பதை உணர்ந்து வருந்தாத நாளே கிடையாது. அத்தை கணவனை ஒரு விபத்தில் இழந்தவள். அவர் பெயரால் கிடைத்த பண்டு பணம் கொஞ்சம் இருந்தது. அதை வைத்து ஆடம்பர செலவு செய்தாள் அத்தை. மதியை இழந்து தாயும் மகனும் மதுவுக்கும் போதைப் பொருளுக்கும் அடிமையாகி இருந்தனர். ஒவ்வொரு நாளும் அந்த வீடு போர்க்களமாகிக் கொண்டிருந்தது.

செய்தி அறிந்த அமுதாவின் பெற்றோர் வருந்தினர். மகளை பாழும் கிணற்றில் தள்ளிவிட்டதாக வருந்தி னர். கண்கெட்ட பிறகு சூரிய வணக்கம் மாதிரி இனி வருந்தி என்ன செய்வது.

அவர்களால் சொல்ல முடிந்தது ஒன்றே ஒன்றுதான். நிச்சயம் திருந்துவாங்க. இன்னும் கொஞ்ச நாளைக்குப் பொறுமையா இரும்மா என்று மகளுக்கு ஆறுதல் சொல்லிச் சென்றனர்.

போதைப் பொருளுக்கு அடிமையாகி எலும்பும் தோலுமாக இருந்த தன் கணவனையும், அத்தையையும் போலீஸ் வேன் வந்து கைவிலங்கிட்டு அழைத்துச் சென்றபோது, விக்கித்து நின்றாள் அமுதா.

அவள் வாழ்க்கை பாலைவனமாய், கானல் நீராய் காட்சியளித்தது. ●

# மண்டை உடையும் என்பதா? வன்செயலைத் தூண்டும் கவிஞனின் வன்னெஞ்சம்

## ஐயா! இளங்கவிஞர் சி. வேலுசாமி அவர்களே!

யான் தங்கள் மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தவன்; உங்களுக்காக என்பதை விட நீங்கள் ஆற்றிவந்த தமிழ் இலக்கியப் பணிக்காகவும் சில நல்ல தமிழ்ப் படைப்புகளைத் தந்தருளியவர் என்பதற்காகவும் தாங்கள் எழுத்தாளர் சங்கத்தில் செயலாளராகவும் இருந்தவர் என்பதற்காகவும், நான் எழுத்தாளர் சங்கத்தில் உறுப்பினராக சேருவதற்கு நீங்கள் காரணமாக இருந்தவர் என்பதற்காகவும், நான் உங்கள் மீது அப்படி ஒரு பற்று இருந்தது, மதிப்பு இருந்தது.

நீங்கள் 8.3.02-ல் தேதியிட்டு உயர்வோமுக்கு எழுதி அனுப்பி வைக்கப் பட்டிருந்த கவிதையைப் படித்த பின்பு அந்தக் கணமே மதிப்பும் மரியாதைக் குரியவருமான அந்த வேலுசாமியின் கரவு மனத்தை மட்டுமே என்னால் காண முடிந்தது.

### சாதிச் சங்கம் சமூகத்துக்குக் கேடா?

சாதியை வேண்டா என்றிடத் தகுதி
தரணியில் எவர்க்குமே இல்லை
ஆதி முதலே அழிக்க முனைந்தும்
அருகாய் வளர்ந்தது தொல்லை!

வன்முறை வளர்ந்தது சாதியால்தானா?
மதியுள் எவர்களே! சொல்வீர்!
நன்முறை தமிழர்க் கேறாதொன்றும்
நாசமாய்ப் போவார் கொள்வீர்!

சாதிச் சங்கம் தோன்றித்தானா
தமிழரைத் தாழ்த்திய நண்ணே?
சேதி பார்த்துச் சிரித்துவிட்டேன்
சிறுபிள் ளைத்தனம் என்னே!

சாதிச் சங்கம் நிறுவித் தம்மைத்
தகவாய் உயர்த்தி விட்டார்
மோதி னாலே மண்டையுடையும்
முன்பின் யோசியும் ஓட்டார்

குலத்தார் ஒற்றுமை பேணிவளாக்
கூடியே யமைத்தால் சங்கம்
நலத்தை எண்ணிப் பாராமலுக்கு
'நக்கல்' எதற்காம்? பங்கம்!

சாதி யில்லாத் தமிழர்கள்யாரு?
தலைவர் ஆரு? அண்ணே?
ஏதிலி என்று எவருமேயில்லை
இயம்பிடில் நாறும்! முன்னே!

நடிப்புத் தமிழர் நாலில் மூன்றரை
நன்றாய்த் தெரிவீர் அண்ணே!
துடிப்பும் ஷெடிப்பும் துளிப்பயனில்லை
சொல்லி அலுத்தது முன்னே!

திட்டுக் கதைகள் போதும்இனியும்
'சுரணை' வரணும் தானாய்
குட்டை குழப்பல் பயனளிக்காது
கூறினேன் எண்ணி நானாய்

"இளங்கவிஞன்"
(சி.வேலுசாமி)

அவர் எடுத்து வைத்துள்ள கவிதை வரிகளுக்கு விளக்கம் காண்போம்.

சாதியை ஒழிக்கத் தரணியில் எவனுக்கும் தகுதி இல்லை என்றும் ஆதிமுதலே அழிக்க முனைந்தும் அருகம் புல்லாய் தொல்லை என்கிறீர்.

மகாத்மா காந்திக்குத் தகுதியில்லை, நேருக்குத் தகுதியில்லை, வள்ளுவருக்குத் தகுதியில்லை, அவ்வையாருக்குத் தகுதியில்லை, பெரியாருக்குத் தகுதியில்லை, பாரதி, பாரதிதாசனுக்குத் தகுதியில்லை, அம்பேத்காருக்குத் தகுதியில்லை, இவர்கள் எல்லாம் தகுதி இல்லா தண்டங்களா?

அருகம் புல்லாய் வளர்கிறதென்றால் உங்களைப் போன்று அழுக்குமனம் உடையவர்களாய் இருந்தால் அருகம் புல்லென்ன ஆலமரமாய் ஜாதி வளரத்தான் செய்யும். ஜாதியினால் பிரிவினை வாதமும் வன்செயல்களும் நடைபெறுவதற்குக் காரணம் இல்லை என்று பகர்கின்ற பெரியவரே நன்முறைத் தமிழர்க் கேறாதென்றும் நாசமாய்ப் போவாய் என்றும் கூறுகின்றாயே எதனால்?

சாதிச் சங்கம் என்றால், சிரித்து விட்டாய்; சிறுபிள்ளைத்தனம் என்னே என்கிறாய்? அம்மி அரைக்கும் மம்மிக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தால் மிளகாய் நெடிதான் வரும். தென்றலா வீசும்? குப்பைகளைக் கூட்டி வைத்து நன்மைகளைப் புறந்தள்ளிவிட்டு அறியாத மக்களின் உள்ளத்தில் நஞ்சை ஊற்றி வரும் உனக்கு ஒளியின் பெருமை எங்கே தெரியப் போகிறது.

சாதிச் சங்கம் நிறுவியதால் உயர்ந்து விட்டார் என்று கூறும் வேலுசாமியாரே! மண்டையுடையும் என வஞ்ச மனத்துடன் எழுதியிருக்கும் ஏதிலியே! உன்றன் கூற்றுக்கு நீங்களே உதாரணமாகி சான்றாகி விட்டப் பிறகும் ஜாதி சங்கம் பேசும் உன்போன்ற அறிவிலிகளுக்கு ஜாதி சங்கம் தேவைதான்;

நக்கலுக்கும் பங்கத்திற்கும் உரியவரே! சாதியில்லாத தமிழன் யாரு என்று கேட்கின்றாய்? இயம்பிடில் நாறும் என்கிறாய்?

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்

இவ்வையத்தில் இக்குறளைக் குறை கூறுவார் யாருமிலர்; குறையுடைய குறை மதியுடையோரே, குறை கூறுவர்; ஜாதி இல்லாத தமிழன் யாரு என்று கேட்கின்றீ குறளறியாதான் பிடிக்கும் எழுதுகோல் கொலைஞன் கையில் இருக்கும் கொலைக் கருவிக்குச் சமம் என்பது உம் கூற்றால் புரிய வைத்துள்ளீர் அதனால் நாற்றம் மூக்கைத் துளைக்கிறது.

நடிப்புத் தமிழர் நாவில் மூன்றரை என்கிறீர்; இல்லை... இல்லை... இல்லவே இல்லை. உம் நடிப்பைப் பார்த்த பின்பு மூன்றரை அல்ல, நான்குக்கும் நீரே பொருத்தமானவர்.

சுரணைப் பற்றிப் பேசுகின்றாய் சுரணை உள்ளவன் எவனும் சுரணையின்றி எழுத மாட்டான் உம்மைப் போன்று!

#### ஆரிய அடிவருடியே!

பிராமணன், சத்திரியன், வைசியன் சூத்திரன் என தமிழர்களை ஜாதியின் பேரால் பிரிவினைப் படுத்தியவர்கள் ஆரியர்கள் என ஆன்றோரும் சான்றோரும் தமிழர் நலம் பேணும் நல்லோரும் பாடிப் பாடி பகர்ந்திட்ட போதிலும்; ஆடி ஆடி அறைந்திட்ட போதிலும் அதன் உண்மை சூட்சுமத்தை அறிந்து, தமிழர்களிடையே உண்டாக இருக்கின்ற கொடுமைகளுக் கெல்லாம் ஆரிய பார்ப்பனியமே காரணம் என உணர்ந்து அதிலிருந்து அவர்களை மீட்டெடுக்க பெரியாரின் போராட்டத் திற்குப் பின்னும் இன்னமும் நல்லோர்களில் பலரும் கைபிசைந்து வேதனைத் தீயில் வெந்து கொண்டிருக்கின்ற வேளையில் வேலுசாமியே நீரே ஆரிய அடிவருடியாக குலத்தை க் கெடுக்க வந்த கோடரிக் காம்பாக மாறியது ஏன்?

உம்முடைய பிற்போக்குத் தனத்தை அறியும்போது, உம்மிடம் படித்த மாணவர் களின் நிலை எப்படி இருக்கும் என எண்ணத் தோன்றுகிறது. நீர் இதுவரை சமுதாயத்தில் நஞ்சை விதைத்து வந்திருக்கின்றீர். இன்று அதை, அறுக்கத் தொடங்கி விட்டீர் போலும் தமிழர்கள் எல்லாம் ஒரு தாயின் கீழ்ப் பிறந்தவர்களாக ஒன்றுபட்டு தமிழின உணர்வும், தமிழ்மொழி உணர்வும் உடையவர்களாக எல்லா நலன்களும் பெற்று உலகவானில் சிறந்து விளங்க வேண்டும் என எண்ணுவது எழுதுவதும் பேசுவதும் குற்றமெனில் அப்படிப்பட்ட மனித பிண்டங்கள் இவ்வுலகில் தோன்றா மறையட்டும்.

-ஆசிரியர்



நிகழ்வில் திரு.ம. இராமையா அவர்களுக்கு சிறப்பு செய்தது நினைவுப் பரிசு வழங்குதல் மு. வரதராசு அவர்கள்.




கூலாய் தமிழர் திருநாள் குழுவினர்கள். (மேலும் செய்தி படங்களை 14-ம் பக்கத்தில் காண்க)

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



(முதல் பக்கத் தொடர்ச்சி)

அதிலும் பாதிக்கு மேற்பட்டவர்கள் இந்தோனேஷியர்களும் பங்களாதேசிகளுமாக தோட்டங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் யாருக்காக மாதச் சம்பளம் என்ற கேள்வி இந்நாட்டில் குடியுரிமைப் பெற்ற நிரந்தரத் தோட்டத் தொழிலாளர்களிடையே புகைச்சலை உண்டு பண்ணிக் கொண்டிருக்கிறது.

அப்படியே அவர்களையும் உள்ளடக்கிக் கணக்கில் எடுத்துக் கொண்டாலும் குறைந்தது மாதச் சம்பளம் 750 ரிங்கிட்டாவது கிடைக்க வழிகாண வேண்டும்.

இன்றுள்ள விலைவாசிகளை கவனத்தில் கொண்டு பேச்சு வார்த்தை நடத்தி இருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் மாதம் 325 ரிங்கிட்டுக்காகப் போராட்டம் என்பதும், அதையே மாப்பா கொடுக்க மறுப்பதும் கேலிக்குரிய செய்தியாகும்.

இவ்விரு மாறுபட்ட கருத்துக்களையும் தூக்கி எறிந்துவிட்டு வேறு வழிகளில் தொழிலாளர்கள் கூடுதலான பலன்களைப் பெறும் முயற்சிகளில் அரசாங்கம் திட்டமிட வேண்டும். அதற்கு தொழிற் சங்கம் வழிவிட வேண்டும்.

சங்க செலவினங்களைக் கட்டுப்படுத்த இயலவில்லை என காரணம் காட்டி மாத சந்தா 5 ரிங்கிட்டாக இருந்ததை 8 ரிங்கிட்டாக உயர்த்துவதில் தீவிரம் காட்டி வருகின்றனர். இதைத் தொழிலாளர்கள் எதிர்ப்பதாக உயர்வோமுக்குக் கிடைத்த தகவல் கூறுகிறது. தொழிலாளர்கள் சிந்தும் வியர்வையிலிருந்து வசூலிக்கப்படும் பணத்தை சுளையாக மாத சம்பளம் பெறும் பொதுச் செயலாளர் ஜி. சங்கரன், நிர்வாகச் செயலாளர் அ. நவமுகுந்தன், சங்க உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் செலவினங்களைக் குறைக்கும் முயற்சியில் தாங்கள் பெற்று வருகின்ற சம்பளத்தை அர்ப்பன உணர்வோடு விட்டுக் கொடுக்க முன் வந்திருக்க வேண்டும் எனத் தொழிலாளர்கள் சிலரின் கருத்தாக இருந்து வருகின்றது.

மற்றும் சிலர் தொழிலாளர்களின் உதிரத்தில் வாங்கிய பெரும் பெரும் சொத்துக்களை எல்லாம் விற்றுத் தீர்த்துவிட்ட மலை விழுங்கிய மகாராசாக்கள் இன்னும் விழுங்கப் பார்க்கும் எமராசாக்களாக இருக்கின்றார்களே என உள்ளம் நொந்து கண்களில் நீர்மல்க கூறிவருகின்றனர்.

**(அடுத்த இதழில் முழுமையான விபரங்கள் வெளிவருகிறது படிக்கத் தவறாதீர்கள்.)**

## தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு மலேசிய இந்து இளைஞர் பேரவை ஏற்பாட்டில் 2002-ம் ஆண்டின் இளைஞர் கவிதைப் போட்டி

எதிர்வரும் மே மாதம் நாடு முழுவதிலும் கொண்டாடவிருக்கும் தேசிய இளைஞர் தின கொண்டாடத்தையொட்டி மலேசிய இந்து இளைஞர் பேரவை 2002-ம் ஆண்டின் இளைஞர் கவிதைப் போட்டி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. இப்போட்டியில் தேர்ந்தெடுக்கப்படும் அனைத்து கவிதைகளையும் தொகுத்து இளைஞர் கவிதை நூலாக தயாரித்து வெளியிட இந்து இளைஞர் பேரவை திட்டம் கொண்டுள்ளதாக அதன் தேசிய துணைப் பொதுச் செயலாளர் திரு. வெ. விஜயன் இதன்வழி தெரிவித்துக் கொண்டார்.

புதுக்கவிதை மற்றும் மரபுக் கவிதை எழுதும் போட்டியில் நாடு முழுவதிலுமுள்ள வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்கள் மற்றும் கவிஞர்கள் பங்கு கொள்ள அழைக்கப்படுகிறார்கள். எழுதப்படும் கவிதைகள் அனைத்தும் நம் சமூக, இளைஞர்களின் நிகழ்காலம், எதிர்கால வாழ்க்கை நிலையை உள்ளடக்கியதாகவும், சமூக சேவை, சமயம், மொழி, கலாச்சாரத்தில் இளைஞர்களின் ஈடுபாடு குறித்தும் மற்றும் சமூக சீர்கேடுகளால் ஏற்படும் விளைவுகள், விபரீதங்களைத் தெளிவுப்படுத்தும் கருத்துக்களை உள்ளடக்கியவைகளான கவிதைகளாக இருக்க வேண்டும். ஒருவர் அதிகபட்சமாக மூன்று கவிதைகள் எழுதி அனுப்பலாம். பிறரை காப்பியடித்து எழுதும் கவிதைகளை தவிர்க்கப்பட வேண்டும்.

தேர்வு செய்யப்படும் கவிதைகளுக்கு முதலாவது, இரண்டாவது, மூன்றாவது மற்றும் ஆறுதல் பரிசுகள் என்ற நிலையில் பரிசுகள் வழங்கப்படும். எழுதி அனுப்பும் கவிதைகளுடன் புனைப் பெயர், அடையாளக் கார்டு எண், முகவரி மற்றும் தொலைப்பேசி எண் ஆகியவற்றுடன் ஏப்ரல் மாதம் 30-ம் தேதிக்குள் இந்து இளைஞர் பேரவையின் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு ஏற்பாட்டுக் குழுவினர் சார்பாக தேசிய துணைப் பொதுச் செயலாளர் திரு. வெ. விஜயன் இதன் வழி கேட்டுக் கொள்கிறார்.

**அனுப்ப வேண்டிய முகவரி :**
**இளைஞர் கவிதைப் போட்டி**
**MALAYSIAN HINDU YOUTH COUNCIL (HYO)**
**SUITE 3-03, 3RD FLOOR,**
**NO. 116, JALAN TUANKU ABDUL RAHMAN**
**50100 KUALA LUMPUR.**
**TEL / FAX : 03-26943772**



"நான் கஷ்டப்படறேன்னு தெரிஞ்சா போதும்... உடனே என் மாமியார் ஊர்லேர்ந்து வந்திடுவாங்க..."

"உதவிக்கா?"

"வேடிக்கை பார்க்க..."

## இந்தப் பூவுலக வாழ்க்கை நமக்குக் கிடைத்த அற்புத வாய்ப்பு!

இனிய நண்பர்களே வணக்கம்,

உலகம் முழுவதும் வாழக்கூடிய மனிதர்களைப் பார்க்கிறேன். இவர்களில் படித்தவர்களும்சரி, படிக்காதவர்களும்சரி பொறாமைப்படுவதில் வேறுபாடு இல்லாமல் இருப்பதை காண்கிறேன்.

டை கட்டிக் கொண்டு மிக உயர்ந்த அலுவல்களில் ஈடுபட்டிருக்கிற எத்தனையோ பல அறிவாளிகள் தம்மைப் போன்றே படித்த அறிவாளிகள் மீது பொறாமைப்படுவதைக் காண்கிறேன். அதேபோல ஒரு நாள் உணவுக்கு வழியின்றி வாழும் ஐந்தடி மனிதனைப் பார்க்கிறேன். அவனும் தன் பக்கத்திலே பிச்சையெடுத்துக் கொண்டிருக்கிற இன்னொருவன் மீது பொறாமைப்படுவதைப் பார்க்கிறேன்.

இந்தப் பொறாமைப்படும் குணமிருக்கிறதே, இது முற்றிலும் தவறான குணம் என்று நான் சொல்ல விரும்பவில்லை. பொறாமைக் குணம் மனிதனுக்கு இருப்பதால்தான் இன்று உலக மனிதர்கள் போட்டிப் போட்டுக் கொண்டு வளர்கிறார்கள் என்பதில், எனக்கு மாறுபட்ட கருத்துக் கிடையாது.

ஆனால் இதே பொறாமை இன்னொருவர் வயிற்றில் அடிப்பதற்கும் இன்னொருவர் வாழ்வைக் கெடுப்பதற்கும் பயன்படுகிறது என்றால், இது பகுத்தறிவுள்ள மனிதனின் அறிவற்ற செயயலாகவே நான் கருதுகிறேன்.

இந்த உலகில் மனிதர்கள் ஒவ்வொருவருக்குமே ஒவ்வொரு விதமான வாழ்க்கைத் தரம் தகுதி, என்று அமைந்திருக்கிறது. அவரவர் தகுதியில் இருந்து செயல்பட்டு, தன்னுடைய தரத்தை வளர்த்துக் கொண்டு முன்னேற விரும்புவது ஒரு சரியான மனிதனின் சிறந்த நடவடிக்கையாகும்.

ஆனால், எந்த வகையிலேயும் பிறருக்கு ஈடாக தன்னுடைய தகுதியை வளர்த்துக் கொள்ளாத ஒருவன், இன்னொருவனின் தகுதியினால், உழைப்பால், அவன் அடையும் வெற்றியைக் கண்டு புழுங்குவதும், அவனுக்குக் கேடு விளைவிக்க நினைப்பதும் மனிதப் பிறவியாகப் பிறந்த ஒருவனின் நன்னடத்தையாக கருத முடியாத ஒரு செயலாகும்.

யார் யார் எங்கெங்கு, எந்தெந்த துறையில் நமது தகுதியை வளர்த்துக் கொண்டு உழைக்கிறோமோ, அதன் பயனே, நமது செல்வமாகும். நம்முடைய வளர்ச்சிக்குத் தடையாக, குறையாக, இருக்கக் கூடிய பலவீனங்களைக் களைந்து நம்மை எல்லா வகையிலேயும் செம்மைப்படுத்திக் கொள்ள முயற்சிப்பதே, ஒரு பகுத்தறிவுமிக்க மனிதனின் செயலாகும் என நான் கருதுகிறேன்.

ஒரு நாய், இன்னொரு நாயைப் பார்த்தால், அதற்கு எந்தத் தொடர்புமே இல்லாமல் குரைப்பதும் அதை சண்டைக்கு இழுப்பதும் இயல்பாகவே, அதன் குணமாக அமைந்திருக்கிறது. ஆனால் மனித வர்க்கமோ, "இன்னா செய்தாரையும் ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" என்ற பண்பாட்டின் அடிப்படையில் வாழ்வதாகும்.

ஆனால், இன்றைய இந்த உலகில் மனிதன் நாயினும் கீழாக, இன்னொரு மனிதனைப் பார்த்தால், அவனை எந்த வகையிலே வம்புக்கு இழுக்கலாம் என்று நினைக்கும் நாய்க் குணத்தோடு மட்டுமல்லாது, அவனைப் பற்றி இல்லாத ஒன்றை பொல்லாங்காகப் பேசி, அவனுடைய முன்னேற்றத்தைக் கெடுக்கும் நரிக் குணத்தையும் கொண்டிருக்கிறான்.

என் இனிய வாசகர்களே,

இந்தப் பூவுலகில் நாம், வாழ்வதற்கு அற்புதமானதொரு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த வாழ்க்கையில் பணம் என்ற ஒன்று, நூறு சதவிகிதம் தேவைப்படுகிறது என்பதை யாரும் மறுக்க மாட்டோம். அதைப் பெறுவதற்கு, நம்மாலான எல்லா முயற்சிகளிலும் நம்முடைய சக மனிதனுக்கு கடுகளவும் தீங்கிழைக்காமல் ஒழுக்க நெறியோடு, சம்பாதிக்க நினைப்பதே நியாயமான ஒன்றாகும். பிறருடைய வளர்ச்சியில் பொறாமை கொண்டு, அவர்களுக்குக் கேடு விளைவிக்க நினைத்தால், இந்தப் பிரபஞ்சத்தின் ஆக்க சக்தியானது, காலத்தால் கெடுமதியாளர்களை அழிக்கும் என்பது உறுதி.

நம்முடைய பேச்சும், நம்முடைய செயலும் நம்முடைய நடவடிக்கையும் முடிந்த அளவு, பிறருக்கு மகிழ்ச்சியும், நன்மையும் கொடுப்பதாக அமைய வேண்டும். நம்மால் பிறருக்கு எந்த நன்மை ஏற்படவில்லையாயினும் கடுகளவேனும் பிறருக்குக் கேடுவிளைவிக்காத நன்நெஞ்சம் நமக்கு வேண்டும்.

இன்றைய நம்முடைய எண்ணங்களும் - சிந்தனைகளும் - நடவடிக்கைகளும் - நம்முடைய குடும்பத்தின் வருங்கால சந்ததியினரைப் பாதிக்கிறது என்பதை மறக்க வேண்டாம். நம்முடைய எண்ணம்போல்தான், நம்முடைய வாழ்வு அமைகிறது என்பது முன்னோர் சொல். இன்று நம்மில், பலபேர், இன்றைக்கும் மகிழ்ச்சியில்லாமல் தம்மைச் சுற்றிலும் பகையாளர்களை உருவாக்கி மகிழ்ச்சியற்ற சூழ்நிலைகளை உருவாக்கி வைத்திருப்பதற்குத் தங்களுடைய சொந்த குணங்களே காரணமாகின்றன.

நம் எல்லோருக்கும் ஏதோ ஒன்று தேவைப்படுகிறது. அது என்ன என்பது, நம் நெஞ்சுக்குத் தெரியும். நம்முடைய மகிழ்ச்சி எங்கேயிருக்கிறது என்பதும் நம் மனத்திற்குத் தெரியும். அதை அடைவதற்கான முயற்சிகளில், நாம் பீடு நடைபோடுகின்ற வேளையில் நம்மைச் சுற்றிலும் நம்முடைய உடன் பிறப்புக்களாக நாம் மதிக்க வேண்டிய நம்முடைய சக தோழர்களிடத்தில் அன்பும், கனிவும், முடிந்தால் ஒத்துழைப்பும் வழங்கி இந்தப் பூவுலக வாழ்க்கையை இன்பமயமாக்கிக் கொள்ள வேண்டுகிறேன்.

**-அன்புடன், ரெ.கோ.**

படிப்பகம்

www.padippakam.com



# அரசியல் தாக்கம் சமூகப் பணியில் தேக்கம்

அரசியல் இயக்கங்கள் சமூக இயக்கங்களின் குரல்வளையை நெறித்து விட்டன. அரசியல் வல்லாண்மையை ஆட்டுவிக்கின்ற அதிகார தொனியும் ஆணவமும் மாந்த நேயத்தையும் திசை திருப்பிவிட்டது. அதன் வல்லமையில் கிடைக்கப் பெறுகின்ற சலுகையில் மக்கள் மயங்குகின்ற மனோபாவங்களும் சலனங் களுமே முதன்மை பெறுகின்றன.

சமூக சீர்திருத்தங்களும், பகுத்தறி வாதங்களும் மனித நேயங்களும் புறந்தள்ளப் பட்டு அற்ப ஆசைகளால் கவரவும் சமூக இயக்கங்களின் தன்னலமற்ற சேவைகளை புறக்கணிக்கவுமான நிலை ஏற்பட்டு விட்டன.

ஆனால், அரசியல் கட்சிகளுக்கும் சமூக இயக்கங்களுக்கும் உள்ள இடைவெளி மெல்ல மெல்ல நீண்டு கொண்டிருக்கின்றன.

மாந்தனின் பேராசைகளுக்கு அரசி யலே சிறந்த வடிகாலாக அமைந்தும், பணம் சுரக்கின்ற நீர் ஊற்றலாகவும் வயிறு வளர்க்க அது ஒன்றே தேவை என்ற எண்ணத்துள் பிற பண்புகள் யாவற்றையும் துரக்கத் தயாராகி விட்டது.

மக்களுடைய சிந்தனைகளும், செயல்பாடுகளும் அதையே நாடுகின்றன. நீதி நேர்மை, உண்மை, நடுநிலை என்பதெல்லாம் இரண்டாம் பட்சமாகி விட்டன.

ஆனால், சமூக இயக்கங்களின் பணி அவ்வாறான நோக்கத்தில் அமைவதில்லை. மாந்தனின் மதிகெட்டச் செயலை வேரறுத்து புறத்தூய்மையையும் அகத்தூய்மையையும்

பழமொழிகள் கேட்பதற்கும் ரசிப்பதற்கும் ஏற்புடையதாக இருக்குமேயல்லாமல் மாந்த நெறியோடு வாழ்வதற்கு முற்றிலும் முரண்பாடானக் கருத்து என்று ஒத்துக் கொள்ள வேண்டும்.

அதிலும் இருவகை உண்டு. சொல்லுவதைச் செய்தல், செய்வதைச் சொல்லுதல் என்பதாகும். அவ்வாறு இல்லாத யாவும் சொல்லலங்காரத்திற்காகச் சொல்லப்படும் இனிப்பு வார்த்தைகளேயன்றி வேறொன்றுமில்லை.

இன்றைய மனிதன் பொருள் மயக்கத் தில் வாழ்ந்து கொண்டிருக் கிறான். பணம் - பங்களா - கார் - நிலம் போன்றவை சராசரி மனிதனுக்குத் தேவையாக இருக்கின்றது.

இந்நிலை உருவாவதற்கு மூலமாக அமைந்து வழி நடத்துவது பேராசையின் வழிபட்டதெனினும் அதற்கு வடிகாலாக துணை நிற்பது அரசியல் கட்சிகள்தான் மக்களைக் கவர்ந்திழுக்கின்றன.

நடுநிலையற்ற இன அரசியல் சார்பிலான நடவடிக்கைகளால் வழி நடத்தப்படுகின்ற ஆட்சியில் சம அளவிலான பாகுபாடற்ற நியாயங்கள் வழங்கப்படு மென்று எதிர்பார்க்க முடியவில்லை. வலிமையற்ற சித்தாந்த போக்கினை மெய்போல் காட்டி ஏமாற்றும் நோக்கமே தலையாயக் கொள்கையாக இருக்கிறது.

தன்னார்வமும் - சுய சிந்தனையும் - உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் எவ்வகையிலேனும் துணிந்து தேவையைக்

**அறிவொளி**

கொண்டு அள்ளிக் குவிப்போரும், மதுகுடியினால் மயங்கிக் கிடப்போரும் சூதாடி பணத்தைத் தொலைப் போரும் அதிகார போதையில் பிறரை அடிமைப்படுத்துவோரும், வன்செயல்களில் இறங்குவோரும் பேராசையால்தான் என உணர வேண்டும்.

இன்றைய அறிவியலின் கண்டுபிடிப் பின் பயனால் சந்தைகளில் குவிக்கப்பட்டுக் கிடக்கும் பொருட்களின் தாக்கம் ஒவ் வொரு மனிதனையும் ஆட்டிப் படைக் கின்றது.

மேற்காணும் இத்தனை ஆசை களையும் அனுபவிப்பதற்கு தன்னம்பிக்கை தூண்டுகோலாக - மனிதனுடைய உணர்வு களையும் - உணர்ச்சிகளையும் கிளர்ச்சி செய்யும் நெம்புகோலாக தன்னம்பிக்கை மட்டும் காரணமாக இருந்தால் அதுவே மனித இனத்திற்கு நிறைவான வாழ்க் கையைத் தந்து விடுமா?

அறிவு அன்பு பண்பு ஒழுக்கம் நாணயம், நேர்மை, நீதி மரியாதை போன்றவை இருக்க வேண்டாமா?

"அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை, பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை யாங்கு" என்று வள்ளுவன் கூறிய இந்த ஒரே குறளை மட்டும் பலரும் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டிருக்கின்றனர்.

வள்ளுவன் கூறிய பொருளை மட்டும்

பொருளின் தேவை இக்காலத்தி மட்டுமல்லாமல் எக்காலத்தும் தேவைப் பவையாக இருந்து வந்திருக்கிறது பண பத்தும் செய்யும் பணம் பந்தியிலே குண குப்பையிலே, ஈட்டி எட்டியவரை பாயு பணம் பாதாளம் வரைப் பாயும் என் பழமொழிகள் தொடக்க காலத்திலிருந் இருந்து வருகின்றன. மக்கள் பணத்திற்கு கொடுக்கப்பட்டு வரும் மதிப் மரியாதையும் முக்கியத்துவமும் இதன் மூல நன்கு புலனாகும்.

உண்மை நிலை அவ்வாறு இருக்கு போது, மக்கள் பணம் ஈட்டுவதற்கா மேற்கொள்ளும் முயற்சியில் தவறு என் இருக்க முடியும் என்ற கேள்வி எழலாம்.

உண்மைதான். பணம் பெறுவதிலோ சேர்ப்பதிலோ எவ்விதத் தவறும் இல்லை ஆனால் அதற்காக பேராசையினால் வெ கொண்டு கீழான உணர்ச்சிகளுக் அடிமைப்பட்டு தவறான வழிகளி செல்வதோ வழிகாட்டுவதோ சரியா முறையாக அமையாது.

இதன் கூற்றுப்படி நோக்கினா பெரும் பணக்காரர்களும் சொத்துக்களுக் அதிபதிகளாக யாருமே தோன்றி இருக் முடியாதே என்ற கேள்வியும் எழலா நியாயமான கேள்வி என்பதை ஏற் கொள்ளத்தான் வேண்டும். நல்வழியி ஈட்டியப் பணத்தை நல்வழியி பயன்படுத்தப்படுகின்ற போது பலருக்கு பயன் கிட்டும்.

ஆனால், அதற்கு முரண்பட் பணத்தாசையால் சேர்த்தப்பணம் தவறா வழிகளில் செலவு செய்தும் வீணடிக்

# இரு நிலையாலும் தாழ்ந்து கிடக்கும் தமிழர்கள்

உண்டாக்குவதாகும். அறிவிழந்த அழிவில் மூளையைச் சலவை செய்வதாகும்.

அஞ்சானிக்கும் மெஞ்சானிக்கும், இம்மைக்கும் மறுமைக்கும் இதுவே வாசல். ஆத்மாவுக்கும் ஆன்மீகத்துக்கும் இதுவே பாதை.

இயக்கங்களின் வழி சேவை மனப் பான்மையில் நில்லாமல் அரசியல் வாழ்க் கையை வழிகாட்டியாக வடிவமைத்துக் கொண்ட ஒவ்வொரு மனிதனும் குற்றங்கள் நிறைந்த சாக்கடைகளாகி விட்டனர். மனிதனை மதிக்கும் மனித நேயமில்லாமல் பேராசையே அனைத்தும் என்றாகி விட்டது.

ஆனால், இன்றைய உண்மை நிலை என்ன? ஒவ்வொருவனும் பணம் பணம் என்றே பேசுகின்றான். பணம் இல்லாமல் வாழ முடியாது என்று கூறுகின்றான். மனித னுக்கு வேண்டியது பணம் என்பதில் உறுதிக் கொள்கிறான்.

அதை எப்படி சம்பாதிப்பது?
முயற்சி செய்ய வேண்டும்!
எப்படி முயற்சி செய்வது?
அதற்குப் பல வழிகள் உண்டு.

பல வழிகள் என்பதில்தான் மாந்தனின் மனம் தடுமாறும் நிலை ஏற்படுகின்றது.

எந்த வழியாக இருந்தாலும் பரவாயில்லை. பணம் வந்தால் போதும் என்ற சிந்தனை ஒருவனுடைய ஆழ்மனத்தில் பதிந்து விட்டால், அவன் என்னென்ன எல்லாம் செய்யப் போகின்றான் என்று யாருக்குத் தெரியும்.

தன்னம்பிக்கையை ஊட்டி விட்டால் வானத்தை வில்லாக வளைத்து விடலாம், மணலைக் கயிறாகத் திரித்துவிடலாம் என்ற

பூர்த்தி செய்து கொள்கின்றவர்களாக சீனர்கள் இருக்கின்றனர்.

தமிழர்களிடம் அவ்வாறான நிலை யில்லை. தன்னார்வமும் சுயசிந்னையும் இல்லாமல் உரிமையை விட்டுக் கொடுத்து அந்த நேர சலனங்களுக்கு அடிமைப்படும் இனமாக தமிழர்கள் இருக்கின்றனர்.

எதற்கும் வளைந்து கொடுக்கும் இனம் கணநேர உதவி பெறும் சலனங் களுக்காக அரசியல்வாதிகளையே சார்ந்து நிற்பதும் பற்றாக்குறை தேவை களுக்காக பேராசை யில் முனைப்புக் கொண்டு அடிப்படை நன்னெறிக் கோட்பாடுகளை மறந்து பொருளாசையில் எதையும் செய்கின்றவர் களாகவும் இருக்கின்றனர்.

அறியாத மக்களின் அறியாமையை யும் மூட நம்பிக்கையையும் சாஸ்திர சம்பிர தாயங்களையும் முதலாக்குகின்றனர். குறுகிய காலத்தில் கோடீஸ்வரர்களா வதற்கு பேராசைக் கொண்டலை கின்றனர். வணிகர்கள் என்ற போர்வையில் ஏமாற்றும் இன துரோகிகள் என மற்றவர் களால் வண்ணம் பூசுவதை அவர்கள் கண்டு கொள்வதே இல்லை. இவ்வாறான சூழ் நிலைகளில்தான் தமிழர்களின் செயல் பாடுகள் சென்று கொண்டிருக்கின்றன.

இவை சராசரி மனிதனுக்கு வேண்டும் ஆசை என ஒத்துக் கொண் டாலும் இதைவிட மேலாகவும் பங் களாக்கள், கார்கள், நிலங்கள் பல இலக்கங்களில் பணம் வேண்டும் என பேராசைக் கொண்டலைவோரும், பெண்ணாசை கொண்டு அலைவோரும், ஆடம்பரப் பொருட்களில் மோகம்

விடாமல் பற்றிக் கொண்டிருக்கின்றவர்கள் அருளின் சிறப்பினால் ஏற்படும் நன்மையை ஏற்க மறுக்கின்றனர். அருள் என்றால் என்ன? அருளினால் என்னென்ன நன்மைகள் விளையும் என்பதை எல்லாம் உணர மறந்தும் மறுத்தும் விட்டனர்.

இந்த ஒரு குறளைத் தவிர்த்து பிற குறள்கள் மாந்தருள்ளத்தைப் பண்படுத்தி - நெறி சார்ந்த அறவாழ்க்கையைப் பற்றிக் கூறும் கருத்துக்களை மக்கள் படிக்கவும் - சிந்திக்கவும் தவறி விடுகின்றனர். இந்நிலை யிலிருந்து விடுபடுவதற்கு சமுதாய இயக்கமே நன்மை பயக்கும், தன்னலமற்ற சேவையை வழங்கும், இதற்கு அர்ப்பண உணர்வு வேண்டும்; பணம் பண்ணும் இயக்கமாக இல்லாததால் இதற்கு மக்கள் ஆதரவு வழங்குவதில்லை. சேவையாற்ற முன்வரத் தயங்குகின்றனர். இதில் வந்தால் என்ன கிடைக்கின்றது என்ற எண்ணம் முதியோர்களைவிட வளர்ந்து வரும் இளையத் தலைமுறையினரிடையே வேரூன்றி விட்டது.

அதனால் கட்டொழுங்குமிக்க சமுதாய இயக்கங்களால் சாதிக்க முடியாத எதுவும் இல்லை. மக்கள் நலன்களே தன்னலங்களாகக் கொண்டு வழி நடத்தும் நேர்மையான தலைவராகவும், அத்தகைய தலைவர்களின் தலைமையை ஏற்று தொண் டாற்றும் நம்பிக்கைக்குரிய தொண்டர்களும் இருப்பார்களேயானால் அப்படிப்பட்ட இயக்கங்களால் மக்கள் நலம் பெறுவர் மாந்தனின் நலவாழ்வுக்கு இவை இன்றி யமையாமை என்பதை அனைவருமே ஆதரிப்பர்;

பண்புநெறி கெடும் சூழ்நிலை உண்டா போது அப்படிப்பட்ட பணத்தைப் பெறுவதி யாருக்கும் எந்தவித நன்மையும் கிடை வழியில்லை.

இதிலே கூடுதலாகப் பண ஈட்டுகின்றவர்களாக இருந்தாலும் குறைவாக ஈட்டுகின்றவர்களாக இரு தாலும் நோக்கம் நல்லதாக இருக் வேண்டும் அதுவே நல்ல இலக்க நோக்கிச் செல்லும். அதனால் இன்றை நிலை என்ன? பணம் ஒன்றே கண்களை திறக்கின்றன. பிறவற்றில் கண்கள் மூடப் கின்றன.

தமிழர்களிடையே இதுகாறு இருந்துவரும் பலமும் பலவீனமும் இருவக யானவை.

நெறியான வாழ்க்கையைப் பேணு போது, அதோடு பணமும் சேர்க்க வேண் என்ற எண்ணம் இருப்பதில்லை. பணத்தாசை ஏற்படும்போது நன்னெறிகளை மறந் வன்மமான முறையில் பொருள் தே நினைக்கும் இவ்விரண்டு நிலைகளு கடந்து வந்த பாதைகளில் கண்டு வ நெறிகளாகவும் பணமும் நெறியும் அளவில் இருக்க வேண்டுமென்பதில் சீர சிந்தனையும் கோட்பாடும் இரு வேண்டும்.

**இந்நாட்டில் தொடக்கக் காலத் சீனர்களில் பலரும் நெறிபிறழ் பணத்தாசைக் கொண்டிருந்தன இன்றைய நிலையில் பொருளாதார தன்னிறைவு பெற்றவர்கள், பணம்**

(9-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



**வரத்துக்கான வழிகளைக் கண்டறிந்து அதில் தங்களை அமர்த்திக் கொண்டவர்கள் இன்று இரு நிலைகளாலும் வளமானவர்களாகவும் நெறியான வாழ்க்கை வாழ்கின்றவர்களாகவும் தங்களை அடையாளம் காட்டிக் கொண்டிருக்கின்ற னர்.**

**மலாய்க்காரர்கள் தொடக்கத்தில் முன்னேற்றமில்லாத சமுதாயமாக இருந்தனர். நாடு சுதந்திரம் பெற்றதனாலும் அரசியல் உதவி போன்ற இரு நிலைகளாலும் பொருளாதாரத்திலும் நன்னெறியாலும் உயர்வான சமுதாயமாக மதிக்கப் படுகின்றனர்.**

இதில் இந்தியர்கள் என்று சொல்லத்தக்கவர்களில் தமிழர்கள்தான் இரு நிலையாலும் தாழ்ந்து கிடக்கின்றனர். இம்மாதிரியான காரணங்களால் நாட்டின் துரித வளர்ச்சியில் அனுபவித்துக் கொண்டிருந்த கொஞ்ச எஞ்ச உரிமைகளையும் இழந்து தடாகத்துத் தாமரைத் தண்ணீர் போல் தடுமாறும் சூழ்நிலையில் பிற இனங்களின் முன்னேற்றத்திற்கு ஈடு கொடுக்க முடியாத நிலையும் அந்த இனங்களுக்கு ஒப்பீடான வாய்ப்பு வசதிகள் இல்லாமல் வறுமைக் காட்டில் உழல் கின்றனர். சிலர் மட்டும் இன்றில்லாமல் பலருக்கும் இதே நிலைதான்; இப்படித்தான் வாழவேண்டுமென்ற வரம்பில்லாமல் எப்படியும் வாழலாம் என்ற முடிவுக்குத் தள்ளப்பட்டனர்.

அரசியலில் இந்தியர்களைச் சார்ந்த தலைவர்களின் வழிகாட்டுதல்கள் அனைத்தும் தவறான பிரதிபலிப் பையே உருவாக்கித்தந்தன. அரசியலில் உரிமைகள் பெறுவதற்கு சகல உரிமை களையும் பெறுவதற்கான தகுதியுடைய இனமாக இருந்து அதைப் பெற்றுத் தருவதற்கு திராணியற்றவர்கள் தங்களைச் சார்ந்த இனத்தின் பலவீனத்தைப் பயன் படுத்தி திட்டங்கள் என்ற பெயரால் சுரண்டத் தொடங்கினர்.

அதனால் ஏமாற்றத்துக்குரிய மக்களிடையே எதிர்ப்புக் குரல் எழுந்த போதெல்லாம் அதைத் தடுக்கவும் ஒடுக்கவும் பொய்யும் புரட்டும் சொல்லி தவறான முன்னுதாரணங்களாகத் தமிழர் தலைவர்கள் நடந்து கொண்டனர்.

**இதனால் ஒழுங்கான வடிகால் இல்லாத சமுதாயம் மனம்போன போக்கில் யார் என்ன சொன்னாலும் அதில் உண்மை இருக்கிறதா இல் லையா? ஏற்புடையதா ஏற்கத் தகாதவையா? என்றெல்லாம் அறிவுப் பூர்வமாகவும் ஒழுக்கப்பூர்வமாகவும் சிந்தித்தறியும் அறிவின்மையால் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற போக்கில் தடம் புரண்ட வாழ்க்கையில் உழல்கின்றனர்.**

தமிழர்களிடையே சிந்தனைவாதி கள் பொதுநலவாதிகள் - சீர்திருத்தவாதி கள் பல இயக்கங்களிலும் கட்சிகளிலும் பங்கு பெற்று தொண்டாற்றியவர்கள்; அதில் தங்களை அடையாளம் காட்டிக் கொண்டி ருந்தவர்கள் இதனால் பட்டறிந்தவைகளை நிறைவான ஆராய்ச்சியில் தெளிவின்றி நாட்டின் துரித வளர்ச்சியின் தாக்கத்தால் பணமே முக்கியம் என்பதை உணர்ந்த வர்களில் பலரும் கொண்ட கொள்கையில் தடம் புரண்டனர்.

அதில் பல துறைகளிலும் பிற இனங்களோடு போட்டியை எதிர்நோக்க வேண்டிய நிலையிலும், அரசியல் சலுகைகள் பெற தவறுகின்ற காரணத்தாலும், தன் சுய வாழ்க்கையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியைத் தவிர்க்க வேண்டிய கடப்பாடும் உண்டாகின்றன.

அதன் அடிப்படையில் முன்னேற வேண்டும். சுயகாலில் முன்னேற வேண்டும். தமிழ்ச் சமுதாயம் முன்னேற வேண்டு மானால் ஒவ்வொருவரும் தன்னம்பிக்கை யோடு பாடுபட வேண்டும் என்ற பேச்சாற்றல் எனும் ஊக்கச்சக்தியை மாத்திரைகளாக்கிக் காட்டினர்.

தமிழர்களுக்கான தளம் ஒரு குறுகிய வட்டத்துக்குள்ளேயே சுழன்று கொண்டி ருக்கிறது. அதிலிருந்து கொண்டு பெரிய அளவில் மனக்கோட்டைகள் கட்டிக் கொண்டிருக்கலாமே தவிர, விசாலமான பார்வையாலும் செயல்பாடுகளாலும் வெற்றிக் கோட்டைத் தாண்டுவதென்பது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவதற்கு ஒப்பாகும்.

இரைத்த குட்டையிலும் குழம்பிய குட்டையிலும் மீன் பிடிப்பதென்றால் பலன் எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழர் சமுதாயம் என்பதும் அது போன்ற நிலைதான், வறண்டு குழம்பிக் கிடக்கின்றது.

அவ்வாறான சரிந்த நிலையிலும் இந்தியர்களைப் பிரதிநிதிப்பதாகக் கூறிக் கொள்ளும் அரசியல் தலைவர்களும் தொழிற்சங்கவாதிகளும் சுரண்டலில் சுரண்டல் என்னும் பேரால் வசூலை நடத்தி வந்தனர். இன்னும் அதன் தொடர் ஓட்டம் முடியவில்லை. மூன்றாம் நிலையைச் சார்ந்தவர்கள் திடீர் பலகாரமாவு விளம்பரம் போல் திடீர் பணக்கார்கள் ஆகும் திட்டம் போடுகின்றனர்.

அதற்கு உந்துதல், முந்துதல், வேகப்படுதல், விழிப்புணர்வை ஏற்படுத்துதல் பொதுவில் தன்னம்பிக்கை என்கின்றனர். இவை ஓரளவு சாத்தியம் என்றாலும் அதுவே அத்தனை கூறுகளையும் நிறைவு செய்வதாக அமைந்துவிடாது. ஒரு முகச் சிந்தனை போல் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தை முதன்மைபடுத்தி பிறநற்பண்பியல்புகளை மறக்கடிக்கப்படு கின்ற சூழ்நிலை உண்டாகின்றன.

மேலும் ஒரு ஆபத்து தமிழர் சமுதாயத்தைப் பேரழிவுக்கு இட்டுச் செல் கின்றன. மதப்புராணீகர்கள் - பழைய சாத்திர சம்பிரதாயங்களைப் பொறுக்கி எடுத்து தூசு தட்டி புதிய புதியக் கோணங்களில் அர்த் தப்படுத்தி வானொலி தொலைக் காட்சி களில் வணிக விளம்பரங்கள் செய்கின்றனர். கண்மூடித்தனமான நம்பிக்கையில் மத உணர்வுகளைத் தூண்டி விடுகின்ற காரணத் தால், அதையே உண்மை என நம்பும் மக்கள் பணத்தை தண்ணீராய் செலவழிக் கின்றனர். ஆத்ம திருப்திக்காக செய்யப்படும் காரியங்கள் என்று நம்புகின்றவர்களுக்குப் பலன் ஒன்றுமில்லை.

ஆனால், திட்டமிட்டு பணம் பண்ணும் நோக்கத்திற்காக செயல்படும் வணிகத் தரகர்களும் முதலாளிகளுமே கொள்ளை லாபம் பெறுகின்றனர் என்ற உண்மையை அறியாதவர்களாக இருக்கின்றனர்.

மேற்காணும் காரணங்களே தமிழினத்தின் சுற்றுச் சூழலையும், பொருளாதாரம் போன்ற பிற யாவற்றையும் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன எனலாம்; இவையாவும் சமுதாய முன்னேற்றத்திற்கு உகந்தவை. இதனால் தமிழர்களால் உடலை வறுத்திப் பெறப்படும் கொஞ்ச நஞ்ச பணத்தையும் மேற் சுட்டிக்காட்டிய வழிவகைகளில் வழிபறிக் கொள்ளையர்களின் செயல் போலன்றி உருப்படியாகத் தெரியவில்லை.

**இந்நிலைகளால் அரசியல் சமூக இயக்கங்களின் தன்முனைப்பு, சமயம் ஆகியவையாகும். இவற்றுள்ளும் அரசியல் குடியாட்சி மரபுரிமைக்கு அப்பாற்பட்டு இனவாதத்தில் கட்டுப் படுத்தப்பட்ட உரிமையே தமிழர்கள் எதிர்நோக்கும் முதற்சலுகைகளாகும்.**

இரண்டாவது நிலை சமூக இயக் கங்கள்

ஒருமைப்படாத - புரிந்துணர்வற்ற உணர்ச்சியின்பால் எடுக்கின்ற எண்ணங் களும், செயல்பாடுகளும் முக்கியத்துவம் தருவதும் இன வளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சிக்கும் கேடு விளைவிப்பதுமே இயக் கங்களில் தொடர்ந்து நிலவும் வரலாறு களோடும்.

தொலைநோக்கின்மையும் குறுகிய மனப்பான்மையுமே தமிழர்களின் பிறப் புரிமைகளாக இருந்து வந்திருக்கின்றன. சுய லாபங் கருதி சந்தர்ப்ப சார்பு நிலைக்கு உட்பட்டு கடமை தவறுகின்றவர்களே அதிகமாக இருக்கின்றனர். ஒழுங்கான செயல்பாடுகளில் கவனம் செலுத்தாமல் போட்டியும் பொறாமையும் கீழறுப்புமே இவர்களின் நிரந்தர பழக்கமாக இருந்து வந்திருக்கின்றன. நல்ல காரியங்களை தானும் செய்ய மாட்டான், மற்றவர் களையும் செய்யவிட மாட்டான்.

இவற்றுக்கு அப்பாலும் ஒரு இயக்கம் இயங்குமேயானால் அணிபிரிந்து பிணியாகி அதன் தோற்றம் முடக்கப்பட்டு விடும்.

மூன்றாவது நிலை சமயம் :-

சமயம் மக்களை நல்வழிப்படுத்தவே எனினும், அதன் உண்மை தோற்றத்தையும் புனிதத்தையும் வெளிக் கொணர்ந்து மக்களின் அறியாமையை அகற்றி அறிவொளி தந்து நற்குடிமக்களாக்கு வதற்கே சமயம் பாடுகள் ஆற்ற வேண்டும் என மெய்யன் பர்களும் ஆன்மீகவாதிகளும் உண்மை இறைவாக்குரைப்பவர்களும் கூறிவருகின்றனர்.

ஆனால் அண்மைக்கால பழக்கங்கள் அவ்வாறின்றி வெளித்தோற்றத்தில் பக்தி வேடமிட்டு உள் மனத்தில் சுயலாபம் கருதியே இல்லாததையும் பொல்லாத தையும் எடுத்துச் சொல்லி மக்கள் மனத்தில் நஞ்சை விதைக்கின்றனர். பல வழிகளாலும் பல வீனப்பட்டுக் கிடக்கும் தமிழரினம், கடவுள் மீது கொண்ட அச்சத்தினால் உடன் படுகின்றனர். சந்தையில் விலை போகாத தையெல்லாம் சாமியின் பேரால் விலை போகச் செய்து குறுக்குவழியில் கொள்ளை லாபம் அடைகின்றனர். இந்நிலையாலும் தமிழர்களின் பகுத்தறி வாதம் தடைபட்டு சீரழிவை நோக்கிப் போய்க் கொண் டிருக்கின்றனர்.

நான்காவது நிலை தன்னம்பிக்கை (மோட்டிவேஷன்)

மேற்காணும் மூன்று நிலைகளாலும் விரக்தி - உளைச்சல் - வெறுப்பு - தோல்வி போன்றவற்றிற்கு - ஊக்கம் ஊட்டும் உற் சாகத் தளமாகத் தன்னம்பிக்கை கருதப் படுகிறது.

கீழான எண்ணங்களின் அதிர்வு களைப் போக்கி மகிழ்ச்சியாக இருக்கவும் பொருளாதாரத்தில் முன்னேறவுமான வழிகளைக் காட்டுவதாகக் கூறி மக்கள் மனங்களைக் கவர்கின்றனர்.

அண்மைய சில ஆண்டுகளாகவே பல கோணங்களில், பல முறைமைகளில் சில றால் நடத்தப்பட்டு வருகின்றன.

உதய மூர்த்தி போன்றவர்கள் கூற்றி னையும் வேறுபல அணுகு முறை களையும் கையாண்டு மனிதன் முன்னேறுவது எப்படி என்றும் அதற்கு அவர்களுக்கு இயல்பாக அமைந்த சூழ் நிலைகளாலும், பட்டறிவின் மூலம் தெரிந்து கொண்ட உத்திகளினாலும் பிறரை ஈர்க்கச் செய்தும் அதன் மூலம் தங்கள் வாழ்க்கையையும் திடப்படுத்திக் கொள்ளும் முயற்சியிலும் தங்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

வேறு சிலர் (ஹிப்னாடிசம், மெஸ் மரிசம்) அதாவது வெளிமனம் ஆழ்மனம் என்றும் காந்த சக்தியை தன்னுள் உள்வாங்கிக் கொண்டு

கொண்டு, தன் சுயானுபவத்தில் மற்றவர்களைக் கவர்ந்திழுத்திழுப்பது.

மற்றும் சிலர் ஆன்மீக பெரு நிலையை வளர்த்துக் கொள்ளும் முறைமைகளை தியானம், பிரணயாமம் ராஜயோகம் பக்தி யோகம் கன்மயோகம் சித்தியோகம் என்றெல்லாம் கூறி தங்கள் வழிபாடுகளுக்கு வலிமை சேர்த்துக் கொண்டிருக்கின்றனர். இவை இச்சையின்பால் எழுகின்ற கட்டு களைத் தகர்த்தெறிந்து துறவறத்தின் பேரின்ப நிலைக்கு வழிகாட்டுவதாகும். இவற்றால் மனிதரினத்திற்கு கேடு விளை விக்கும் தீயக்காரியங்கள் நடைபெறுவதற்கு வழி யில்லை. ஒழுங்கான முறையில் ஒழுங் கானவர்களால் நடத்தப்படுமேயானால் உயர்நிலையை அடைகின்றவர்களுக்கு யாரும் தடையாக இருக்கப் போவதில்லை.

இந்நிலையைத் தவிர்த்து பிற இரு நிலையும் அதாவது தன்முனைப்பு, காந்த சக்தியைக் கொண்டு வாழ்வை வளம் பெறச் செய்வது போன்ற வழிகாட்டுதல்களால் "எப்படியும் முன்னேறுவோம்" என்ற உந்துதலின் தாக்கம் பலரின் உள்ளங்களில் கிளர்ச்சியை உண்டு பண்ணுவதாகவே அமைந்துள்ளன.

மேலே காட்டியுள்ள நான்கு நிலை களான வட்டத்துள்தான் தமிழர்கள் முன்னேற தமிழர்கள் கண்முன் தெரியும் தளம். அது இரைக்கப்பட்டு குழப்பியக் குட்டை அதிலிருந்து அவனுடைய எதிர்ப் பார்ப்பு வெற்றியடைய வழி இல்லை.

முன்னேற வேண்டும் என்ற எழுச்சி முழக்கம் அந்தச் சிறிய வட்டத்தை உடைத்து வெளியேற வேண்டும்.

விசாலமான இடைவெளிக்குள் தளம் அமைத்துக் கொண்டு பிற இனங்களின் கோட்டைக்குள் நுழைந்தாக வேண்டும். அது இலகுவானக் காரியம் அல்ல, ஆனாலும் சிலர் முயன்று கொண்டிருக்கின்றனர். பலவிதமான போராட்டங்களையும் எதிர் கொண்டு வெற்றிபெற வேண்டுமென்ற உள்ளத்தின் உறுதியால் எதையும் செய்ய துணிந்தவர்களாகின்றார்.

முன்னேற வேண்டும் என்ற பொருளாதார சிந்தனை பேராசையாக மாறி அதன் பொருட்டு எதற்கும் துணைபோகின்ற வர்களாக மாறி விடுகின்றனர்.

நன்னெறிகளை மறந்து பணம் என்ற நோக்கில் அவன் கவனம் செல்கிறது. பொருளாதார வளமும் வேண்டும் நன்னெறி யிலான செம்மையான வாழ்வும் வேண்டும் அதுதான் நல்வாழ்க்கை என் பதற்கு மாறாக ஒன்றை மறந்து இன் னொன்றை பற்றும் முயற்சியும் தோல்வி காணும் சமுதாயமாக தமிழரினம் உருக் குலைந்து கிடக்கின்றது. குடிகாரர் களாலும், கொள்ளைக்காரர் களாலும் கொலைகாரர்களாலும் பல தவறுகளைச் செய்து வருகின்ற சமுதாய மாகவும் மொத்தத்தில் வன்முறை கலாச் சாரம் நிறைந்த இனம் என்ற முத்திரைக் குத்தப்பட்டுள்ளது.

இந்நிலையிலிருக்கும் தமிழரினம் காப்பாற்றப்பட வேண்டும். பொருளாதாரத் தில் தன்னிறைவு பெற்ற இனமாகவும் நன்னெறி கோட்பாடுகளில் அன்பும் அமைதியும் கட்டொழுங்கும் உள்ள சமுதாயமாக இருத்தல் வேண்டும். அதை மாற்றி அமைப்பதற்கு பெரிய ஆராய்ச்சிக் கண்கொண்டு துப்பு துலக்காவிட்டாலும், அரசியல் சார்பற்ற பொது இயக்கங்களால் பங்காற்ற முடியும்.

திராவிடர் கழகம், தமிழர் பொதுப் பேரவை, தமிழ் இளைஞர் மணிமன்றம் போன்றவை பங்காற்ற முன்வர வேண்டும். இவற்றிலும் பெரும்பாலோர் தலைவர்கள் உட்பட பலரும் அரசியலிலும் பொறுப் பாளர்களாக இருக்கின்றனர். அரசியல் லாபம் கருதி தலையை நுழைத்துக் கொண்டிருப்பவர்கள் சமூக இயக்கங்களின் குறைபாடுகளைக் கலைவதற்காக போராடும் ஆற்றலுடையவர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

அதில் திராவிடர் கழகத்தைச் சார்ந்தவர்களில் சிலர் அரசியலில் இருந்த போதிலும், அதன் தலைவர் ரெ.சு. முத்தையா அவர்கள் அரசியலில் பங்குபெறவில்லை என்பது மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

**(11-ம் பக்கம் பார்க்கவும்)**

படிப்பகம்

www.padippakam.com



# தமிழக ஆட்சியும் - மக்களும்

சென்னை நிருபர்

திராவிடர்கழகத் தலைவர் கி. வீரமணியின் அறிவிழந்த செயலை மேலும் தோலுரித்துக் காட்டப்படும் என கடந்த இதழில் முடித்திருந்தேன்.

அதன் முடிவாக அவரின் மனித நேயமற்ற விலங்கு குணத்தை கலைஞர் கருணாநிதி கைது செய்யப்பட்ட போது அவர் வெளியிட்டிருந்த அறிக்கையின் மூலம் காண முடிந்தது.



கலைஞர் கைது செய்த விதம் குறித்து தாய்த் தமிழகத்தில் மட்டுமின்றி தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழுகின்ற நாடுகளில் எல்லாம் பொங்கி எழுந்தனர்.

ஜெயலலிதாவின் அரக்கக் குணத்தையும் கொடுங்கோண்மையும் கண்டனம் செய்தனர். தமிழனுக்கு - தமிழுக்கு செய்யும் இழுக்கு என துடி துடித்து உள்ளம் கொதிப்படைந்தனர்.

ஆனால் கி. வீரமணி அவ்வாறு பொங்கி எழ வேண்டாம். கண்டனம் செய்ய வேண்டாம். அனுதாப வார்த்தைகளைக் கூறி அனுதாபம் காட்ட வேண்டாம்.

அவரிடம் அவ்வாறு எதிர்பார்க்க முடியாதுதான்.

ஆனால், அதற்கு மாறுபட்டு கருணாநிதி, பெரியார் பாசறையில் வளர்ந்தவர் என்பதற்காகவும் அவரிடம் உள்ள தமிழ்ப் புலமைக்காகவும் வயதைக் கவனத்தில் கொண்டும் பேசாமல் இருந்திருக்கலாம்.

வீரமணியைப் பற்றிய கணிப்பில் கொஞ்சம் மரியாதையாவது மிஞ்சி இருக்கும்.



அவற்றையெல்லாம் சிறிதளவும் நினைத்துப் பார்க்க மனமில்லாதவர் கலைஞரை வலுக்கட்டாயமாகவும் காட்டுமிராண்டித்தனமாகவும் அராஜக ஆட்சியில் கைது என்ற பெயரால் தூக்கிச் சென்றதை நியாயப்படுத்தி பதில் சொன்ன விதம் குறித்து தமிழுணர்வும் தமிழின உணர்வும் உள்ளவர்களின் நெஞ்சங்களில் நச்சரவமாய்ப் பாய்ந்தன.

பெரியாரின் பாசறையில் வளர்ந்தவர் அவருக்குப் பிறகு அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர வேண்டிய வீரமணியா இப்படிப் பேசுகின்றார், எழுதுகின்றார் என்ற ஆதங்கமும் அருவருப்பும் நல்லவர்களின் உள்ளங்களில் கேள்விக்கணைகளாய் எதிரொலித்தன.

• அவர்கள் இருவருக்கிடையே தனிப்பட்ட முறையில் காழ்ப்புணர்ச்சி இருக்கலாம். யார் பக்கம் உண்மை இருக்கிறது, யார் பக்கம் உண்மை இல்லை என்ற விபரங்கள் மற்றவர்களுக்குத் தெரிய நியாயமில்லாமல் இருக்கலாம்.

ஆனாலும் அவருடைய வயதுக்கும் தமிழ்ப்புலமைக்கும் முதலமைச்சராக இருந்தார் என்பதற்காகவும் மதிப்பளித்திருக்க வேண்டும்.

அப்படி ஆதரிக்கும் பெருந்தன்மை இல்லாவிட்டாலும் அநியாயத்தை நியாயப் படுத்தாமலாவது இருந்திருக்கலாம். அவ்விரு நோக்கமும் இல்லாமல் விலங்கிலும் கொடிய உள்ளமுடையவராக இருந்திருக்கின்றார் வீரமணி என நினைக்கும் போது, தமிழர்களில் கடைநிலைத் தமிழன் இவர் தான் என்பதை மெய்ப்பித்துக் காட்டியுள்ளார்.

மேற்காணும் இவற்றிற்குப் பின்பும் ஜெயலலிதாவின் பாதந்தாங்கியாகத் தொடர்ந்து ஆதரவு அறிக்கை வெளியிட்டு சோரம் போன வீரமணி என்ற முத்திரையைப் பதித்துக் கொள்ளத் தவறுவதே கிடையாது.

ஜெயலலிதாவுக்கு ஆதரவான தீர்ப்புக் கிடைத்த போதும், கண்ணகி சிலை பெயர்த்தெடுக்கப்பட்ட போதும் வீரமணியின் கரவு மனத்தைக் காண முடிந்தது.

இம்மாதிரியான சூழ்நிலையில் திராவிடர் கள் என்ற போர்வையில் தமிழர்களே உறுப்பினர்களாக இருக்கின்ற திராவிடர் கழகத் தில்....

இனமானமும் மொழிமானமும் சுயமரியாதையும் அற்ற கி. வீரமணி, பாப்பாத்தி ஜெயலலிதாவின் ஊது குழலாகவும், முந்தாணை முடிச்சாகவும் இருந்து கொண்டிருப்பதில் எள்ளளவும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கி. வீரமணியின் தலைமைத் துவத்தை மாற்றி அமைக்க வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்குகின்றவர்களே உண்மையானத் தமிழர்களாகவும் பெரியார் பாசறையில் வளர்ந்த வர்கள் என்றும் கூறிக் கொள்ளும் தகுதியுடையவர்கள்.

அவ்வாறான மாற்றத்தைக் கொண்டு வராதவரை திராவிடர் கழகம் என்பது ஒரு மாயத் திரையே! ஊருக்கு மாரடிக்கின்ற உதவாக்கரை கள்தான், தமிழினத்திற்கும், சுயமரியாதைக்கும், பகுத்தறிவுக்கும் எதிரான விரோதப் போக்குடையவர்கள்.



வீரமணியின் தரங்கெட்டச் செயலால் உண்மைத் தொண்டர்கள் கொதிப்படைந் துள்ளனர் என்றாலும், அதற்கு மாற்று வழிகாணத் துணிவின்றித் தயங்குகின்றனர்.

அதற்கு அடிப்படையான முக்கியக் காரணங்களில் ஒன்று பெரியார் சேர்த்து வைத்துச் சென்ற சொத்து; பலரின் கவனம் அதன் மீது விழுந்துள்ளது. அதனால் தயங்குவதாகக் கேள்வி. இப்போதெல்லாம் அன்பு - பண்பு - பழக்கம் - ஒழுக்கம் - நீதி, நியாயம், நேர்மை, உண்மை, நன்னெறி என்பதெல்லாம் கூர் மழுங்கிப்போன சரக்காகி விட்டது.

எவ்வளவுக்கெவ்வளவு அவமரியாதைக் குரிய காரியங்களைச் செய்கின்றார்களோ, அவர்களுக்குத்தான் மாலை மரியாதை ஆள் படை பரிவாரங்கள் எல்லாம்.



அன்பு நெறியோடு பண்புநெறிபேணி அறநெறியில் வாழ்ந்து கற்பு நெறியோடு வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்க்கும் நல்ல மாதர்குல மாணிக்கங்களுக்கு மவுசு குறைவாகத் தான் இருக்கின்றன.

அதே சமயத்தில் படிதாண்டிய பத்தினியாக நடித்து மக்களும் நாடும் தலை குனிகின்ற காரியங்களைச் செய்துவிட்டு பதிவிரதை என வேடமிட்டுத் திரிகின்ற பெண்களுக்கு பதவியும் பணமும் அதிகாரமும் இருக்கின்ற காரணத்தால் அப்படிப்பட்டவர் களுக்கு ஏகப்பட்ட மரியாதை வரவேற்பு எல்லாம் தட்புடலாக நடந்தேறுகின்றது. பிற நாடுகளில் எப்படியோ, இந்தியாவில் தமிழ் மாநிலத்தில்தான் இந்த மாதிரியான அருவருக்கும் அசிங்கங்களைக் காண முடிகிறது.



தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் ஜெயலலிதா ஒரு நடிகை மற்ற நடிகைகளைக் காட்டிலும் எம்.ஜி.ஆரோடுதான் அதிகம் ஆடிப்பாடி கட்டிப் புரண்டதெல்லாம். அதனால் அவர் மீது தமிழக சினிமா வெறியர்களுக்கு ஒரு மாயை; எம்.ஜி.ஆர். மீது கொண்டுள்ள பற்று பாசத்தினால் அண்ணி என்ற அடைமொழியைக் கொடுத்து தமிழகத்தில் ஒரு சக்திமிக்கவராக தமிழக மக்கள் உரு வாக்கிவிட்டனர்.

அவர் அரசியலில் பண்ண குளறுபடிகள் கொஞ்ச நஞ்சமல்ல. இன்று சட்டமன்றத்தில் சபா நாயகராக இருக்கின்ற காளிமுத்து ஜெயலலிதா வைப் பார்த்து உன்னைப் பார்த்தால் அழைக்கத் தோணுது, ஜானகி அம்மாவைப் பார்த்தால் கும்பிடத் தோணுது என்றார். அந்த அளவுக் குத் தரக்குறைவான வார்த்தைகளால் அர்ச்சித்தவர்தான் காளிமுத்து.

அதைவிடவும் மோசமாக ஜெயலலிதாவை இன்றளவும் விமர்சனத்துக்குக் காரணமாக இருப்பவை; கன்னட நடிகர் சோபன் பாபுவோடு குடும்பம் நடத்தி ஒரு குழந்தைக்கும் தாயாகி அதையும் இன்னொருவனுக்குக் கட்டிக் கொடுத்து விட்டதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தொடக்கத்திலிருந்தே சொல்லிவரும் செய்தியாகும்.

அதற்கு ஜெயலலிதாவும் இன்றளவும் மறுப்புத் தெரிவிக்கவில்லை. இந்த அளவு
கோளாறான கன்னடத்து பிராமணத்தியைத்
தலையில் தூக்கி வைத்துக் கொண்
தமிழர்கள் வெட்கமில்லாமல் ஆட்ட
ஆடுகின்றனர்.

மேல்மட்டத் தலைவர்கள் என யாரை
எல்லாம் பெரியவர்கள் என்று மதிக்கி
றோமோ அவர்களில் பலரும் ஜெய
லலிதாவின் காலில் விழுந்து
ஆசி பெற்ற வரலாறுகளைக்
காண முடிகிறது.

தற்காலிகமாக
பொம்மை முதலமைச் சரா
இருந்த மானங்கெட்ட பன்னீ
செல்வமும் அவர் காலில்
விழுந்து வரலாறு படைத்தவ
தான்.

ஜெயலலிதா கிரிமினல்
மைண்டை
கொள்முதலாகக்
கொண்டுள்ளவர். எல்லா
விதமான ஊழல்களையும்
அராஜகங்களையும் செய்து தமிழகத்தை
நாற அடித்தவர்.

அப்படிப்பட்டவரை முதலமைச்சராக்
இருக்கின்ற தமிழ்நாட்டு மக்களைப் போல
காட்டுமிராண்டிகள் உலகத்தில் வேறெ
குமே காணக் கிடையாது.

கருணாநிதியை வைத்துக் கொள்
வோம். அவரும் ஊழல் செய்தார், அவ
செய்த ஆட்சியும் சரியில்லை என்றே
வைத்துக் கொள்வோம். அவரைத் தவிர்த்து
தமிழ் நாட்டில் தமிழர்களில் ஒருவன் கூடவ
யோக்கியன் இல்லை.

கற்புக்கரசி கண்ணகி பிறந்
நாட்டில், தமிழனைத் தாழ்த்திப் பேசி
காரணத்தால் வட்நாடு சென்று கன
விசயர்களை வென்று அவர்கள் தலையில்
கல்லை சுமந்து வந்து கற்புக்கர
கண்ணகிக்கு சிலை வடித்தான் சேர
செங்குட்டுவன் என்று வீர காவியங்களை
படிக்கின்ற தமிழகத்தில்....

தெய்வம் தொழா அள் கொழுந
றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யு
மழை என்று கற்புக்கரசிகளுக்கு மகுட
சூட்டி பெருமை படுத்தும் குறளோவியத்தி
மாண்பினை இவ்வையம் போற்று
மாட்சிமினைப் பெற்ற தமிழகத்தில்.
நன்னெறிகளுக்குக் கொஞ்சமும் பொரு
தமே இல்லாத ஜெயலலிதாவின் காலி
விழுவதும் முதலமைச்சராக்கி மகிழ்வதும் எ
மறவர்கள் என போற்றிப் புகழும் மதுரை
மண்ணில் நடைபெறு கிறது என்றா
இதைவிடவும் தலைகுனிவு வேறென்
வேண்டும்?

இளங்கோவடிகள் வடித்துத்தந்
சிலப்பதிகாரக் காப்பியத் தலைவி "பெ
ணின் பெருந்தக்க யாவுள" என்னு
கற்புக்கரசி கண்ணகி சிலையை
பெயர்த்தெடுத்து மறவர்குல தமிழ்ப் பெ
களுக்கே இழுக்கைத்தரும் மாபாதகத்தை
செய்த ஜெயலலிதாவை மீண்டும் முதலமை
சராக்கி இருக்கின்றார்கள் என்றால் என்
அர்த்தம்? கற்புக்கரசிகளை ஓரங்கட்டுவது
பெண்ணினத்திற்கே இழுக்கைத் தே
நடத்தைக் கெட்டதுகளை தலையில் தூக்
வைத்துக் கொண்டு பெருமைப் பாராட்
புகழ்கின்றார்கள் என்றால், ஒட்டு மொத்
மாக தமிழகப் பெண்களையே சந்தேகிக்கு
அளவு தமிழகத்தின் தரம் தாழ்ந்து விட்ட
என்றுதான் சொல்ல வேண்டும்.

-தொடரும்

படிப்பகம்

www.padippakam.com



# வாசகர் களம்!

**வீ. சுந்தரி, சிரம்பான்.**
தமிழர்களிடையே வளர்ந்து வந்த சாதிக் கொடுமை இந்த அளவுக்கு மோசமாக இருக்கும் என்று எதிர்பார்க்கவே இல்லை. மேல்மட்டத் தலைவர்களே அதற்குக் காரணமாக இருந்திருக்கின்றார்கள் என நினைக்கும் போது மனசுக்கு ரொம்ப வேதனையாய் இருந்தது.

**ஏ. மாணிக்கம், பிடோர்.**
உயர்வோமை வாங்கிப்படித்து மகிழ்ந்தேன். அதே சமயத்தில் அதிர்ச்சியும் அடைந்தேன். இந்நாட்டில் தமிழர்கள் குறைவாக இருக்கின்றோம்; நம்ம எல்லாம் ஒன்று சேர்ந்தாதான் உரிமையைக் கேட்டுப்பெற முடியும். இங்கு தமிழர்கள் ஒற்றுமையா இருந்தால்தான் முன்னேற முடியும்; தமிழர்கள் போற போக்கைப் பார்த்தா, எல்லா உரிமைகளையும் இழந்திடுவோம் போல இருக்கு.

**ஆர். பெரியசாமி, கிள்ளான்.**
செங்கதிரோன் பதில் சூப்பர் போங்க; ஒவ்வொரு கேள்விக்கும் சாட்டை அடி கொடுத்திருக்கீங்க! உங்களுக்கு என் நன்றியும், பாராட்டுகளும்.

**ரவிக்குமார், பினாங்கு.**
அன்பானந்தன் இல்லம் சமாதியானது என்ற தலைப்பைப் பார்த்துக் கண் கலங்கினேன். தமிழ் இளைஞர் மன்றம் உருவாவதற்கு அரும்பாடுபட்ட சமூகக் கலைமாமணி அன்பானந்தன் கட்டிடத்தையே விற்று விட்டார்களே பாவிகள்.

**க. மாரிமுத்து, கோலசிலாங்கூர்.**
"கழகத்துக்காரர்கள் திருந்த வேண்டும்" நேர்காணல் படிக்க சுவையாகவும் பொருள் உள்ளதாகவும் இருந்தது. திராவிடர்கழகக் கண்ணோட்டம் உண்மையை அப்படியே படம் பிடித்திருக்கின்றீர்கள்; இதைப் படித்தாவது கழகத்துக்காரர்கள் திருந்த வேண்டும்.

**கோ. புண்ணியகோடி,**
**சுங்கை சிப்புட்.**
அன்பானந்தன் இல்லத்தை விற்றுவிட்டார்களா? நம்ப முடியவில்லையே! தமிழர்கள் தொடங்கும் கூட்டுறவுகள் எல்லாம் இப்படியா இருக்க வேண்டும்; தமிழக ஆட்சியும் மக்களும் நமது நிருபர் சரியாக சொல்லியிருக்கிறார். ஜாதி வெறியை பொசுக்கும் மனித நேயத்தைப் போற்றுங்கள் துணிவுடன் சொல்லி இருக்கின்றீர்கள். உயர்வோமுக்கும் அதன் ஆசிரியருக்கும் நன்றி.

**வி. தனபாலன், தம்பின்.**
பெற்றோர் மீது பழிபோடும் ஆசிரியர்களே என்ற தலைப்பில் கட்டுரை எழுதியுள்ள எஸ்.வி. முத்து சொல்லியிருப்பது நூற்றுக்கு நூறு உண்மை. இதைப் படித்தப் பிறகாவது ஆசிரியர்கள் திருந்த வேண்டும்.

**எம். மணிமேகலை, கெப்போங்.**
வழிதவறும் தாய்க்குலத்தைப் படித்தேன்; உண்மையை அப்படியே படம் பிடித்திருக்கின்றீர்கள்; இதைப் படித்தாவது தாய்க்குலம் திருந்த வேண்டும்; விடுதலைப் புலிகளும் தமிழர்களும் கட்டுரையும் அருமையிலும் அருமையாக இருந்தது.

**எல். வீரசேனன், போர்ட்டிக்சன்.**
பெரிய மனிதர்கள் என்ற போர்வையில் வேஷம் போட்டுத் திரியும் சிலருடைய சாயத்தை வெளுக்கச் செய்திருக்கிறீர்கள். டத்தோஸ்ரீயும் - டத்தோக்களும் தலையிட வேண்டும் என்ற கோரிக்கை வெற்றியடைய வேண்டும்.

**உ. பன்னீர்செல்வம், போர்ட்டிக்சன்.**
உயர்வோமில் வெளிவந்த அனைத்துமே பயன் உள்ளவைகளாக அமைந்துள்ளன. மக்கள் பிரச்சினையைத் தொட்டுத் துணிவுடன் எழுதியிருக்கின்ற உங்களுக்கு எனது ஆதரவு எப்போதும் இருக்கும்.

**சு. ஏகாம்பரம், சுங்கைவே.**
அவனைத் தெரியாது என்ற சிறுகதை உள்ளத்தை நெகிழச் செய்தது. அந்தக் கதையில் வரும் பாத்திரப் படைப்புகள் நிஜ வாழ்க்கையிலும் உண்டு. இதே போன்று இன்னும் நிறைய எழுத வேண்டும். எழுத்தாளர் பத்துமலைக்கு எனது வாழ்த்துக்கள்.

**எ. பனிமலர், பூச்சோங்.**
உயர்வோமில் வெளிவரும் அத்தனையும் அற்புதமாக இருந்தது. "நான் ஏன் எழுதுகிறேன்" என்பதைப் படித்து உள்ளம் சிலிர்த்துப் போனேன். விழியும் ஒளியும் கேள்வி பதில் நன்றாக இருக்கிறது.

**உ. முனியாண்டி, சிரம்பான்.**
நான் இதுவரை ஜாதி சங்கத்தில் இருந்தேன். நானாக விருப்பப்பட்டு சேரவில்லை. மற்றவர்கள் தூண்டுதலில் சேர்ந்தேன். செங்கதிரோன் அண்ணா அவர்கள் எழுதியிருந்ததைப் படித்த உடனே, என்னை மாற்றிக் கொண்டேன்.

## "உதைபடுபவனாக ஊளையிடுவான்"

சென்னை நிருபர் தந்த "தமிழக ஆட்சியும் மக்களும்" படைப்பு படிக்க நெஞ்சை எரிக்கிறது. "தமிழினத் தளபதி" என்றும் "தமிழினக் காவலர்" என்றும் போற்றப்படும் கி. வீரமணியார் தம் தனிப்பட்ட மன எரிச்சலாலும் கலைஞர் மேலுள்ள காழ்ப்பாலும் - சினத்தாலும் தமிழின இரண்டகராக மாறியுள்ளார். வெறும் ஐந்து இலக்க ரூபாய்க்காக மட்டும் அவர் ஜெயலலிதாவின் முந்தானையைப் பற்றி முடங்கவில்லை. அதற்கும் அப்பாற்பட்ட பலநூறுகோடி ஏய்ப்புகளுக்கும் சுரண்டல்களுக்கும் பார்ப்பனிய பரிவட்டம் அவருக்குத் தேவைப்படுகிறது.

மேலும் வீரமணி சொல்வதெற்கெல்லாம் கலைஞர் செவி சாய்த்து தலையாட்டியாக இருப்பாரேயானால், நாளையே வீரமணியார் "பார்ப்பனத்தியே பதவியை விட்டு ஓடு" என்று வீர மறியல் நடத்துவார்.

தமிழர் தளபதியாக தான் மட்டுமே போற்றப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் வீரமணியாரிடம் உண்டு. எனவே, கலைஞரை விஞ்சும் திராவிடத் தளபதியாக மதிக்கப்பட வேண்டும் என்ற மன உளைச்சலே இன வீழ்ச்சிக்கு வித்திடும் வினைகளில் வீரமணியாரை ஈடுபட வைத்திருக்கிறது என்பதையும் சென்னை நிருபர் கருத்தில் கொள்ள வேண்டும்.

அடுத்து துக்ளக் இராமசாமியைப் பற்றிய செய்தி. தமிழனத்தை காலமெலாம் அடிமைப் படுத்தி வைத்திருக்கும் பார்ப்பனிய ஆதிக்க வெறித்தன காவலனாக இருப்பவர் துக்ளக் அவர், மராட்டிய நடிகன் ரஜினிகாந்தை மூன்றாம் அணிக்குத் தலைமை ஏற்க அழைத்தது பார்ப்பனத்தி மீது கொண்ட பகைமையாலோ வெறுப்பாலோ அல்ல.

மராட்டிய நடிகன் கலைஞருக்கு ஆதரவாக குரல் கொடுத்தாலும், செயல்பட்டாலும் அது பார்ப்பனிய ஆதிக்கத்தை அசைக்கும், ஜெயலலிதாவின் வெற்றியைப் பாதிக்கும். தமிழகமும் டமிழர்களும் மூடர்களும் - உணர்வற்ற முண்டங்களும் மராட்டிய நடிகனை தமிழக முதலமைச்சராக்கவும் முனைப்பு காட்டுகின்றனர்.

எனவே, ரஜினிகாந்தை கலைஞரிடம் அண்ட விடாமல் தடுக்கவும் பார்ப்பனியம் தமிழக ஆட்சியைக் கைப்பற்றும் வாய்ப்பைப் பெருக்கவும் ரஜினியை அழைத்தார். அப்படியே ரஜினி மூன்றாவது அணிக்குத் தலைமை ஏற்று வாக்குகளைப் பெற்று தமிழக அரசைக் கைப்பற்றினாலும் அதுவும் பார்ப்பனிய அடிமை ஆதிக்க அரசாக அமையுமேயன்றி "அது" தமிழினக் காப்பு ஆரசாக அமையாது. இருக்காது.

ரஜினி தமிழின மானம் காக்கும் தளபதியல்ல. பார்ப்பனிய நெறியிலும், கொள்கையிலும் ஊறிப் போனவர். அவன் ஆட்சி அமைத்தால் அதுவும் பார்ப்பனிய ஆட்சியாகவே அமையும். இராகவேந்தரும், காஞ்சிக்கிழவருமே வழிநடத்துவார்கள். ஆகவேதான் துக்ளக் ரஜினியை அழைத்தார்.

பெரும்பான்மையானத் தமிழ்நாட்டுத் தமிழன்களுக்கு தன் நாட்டைத் தான் ஆளும் அறிவும் ஆற்றலும் இல்லை. தமிழராகிய வீரமணிக்கே அந்த ஆற்றல் இல்லை என்கின்ற போது யாரை நொந்து கொள்வது?

தமிழ் நாட்டுத் தமிழன் எவனாவது தன்னைத் தமிழன் என்று ஒப்புக் கொள்கிறானா?

தமிழின உணர்வு இல்லாத முண்டங்கள் சாதியைத்தானே முன் வைக்கின்றன! சாதி மீது உள்ள வெறியும் பற்றும் இனத்தின் மீதும், மொழியின் மீதும் இருப்பதில்லையே. சாதிவெறி பிடித்தவர்கள் தலை நிமிர்ந்து வாழும் வரையில் தமிழுக்கோ, தமிழனுக்கோ தமிழ் நாட்டில் விடிவு பிறக்கப் போவதில்லை.

தமிழ் நாட்டிலென்ன, இந்த மலேசிய நாட்டிலும் சாதிப் பற்றிச் சரிந்துவிழும் தமிழர்கள் வாழும் வரையில் தமிழன்களுக்கு விடிவும் வாழ்வும் அதன் வழிஏற்படப் போவதில்லை.

அரசியலில் சாதியத் தலைமை தலைவிரித்தாடுவதால் தமிழனின் தாழ்வைத் தடுக்கவே முடியாது. அரசியல் தலைவர்கள் தம் சாதி நலன் கருதி உறவினர்களை மட்டுமே உயர்த்திக் கொண்டிருக்கும் வரை தமிழன் உயரான் - உருப்படான். உதைபடுபவனாகவே ஊளையிடுவான்.

-தமிழன், கோலாலம்பூர்.

**ஆர். ஏமுமலை, பெந்தோங்.**
ஜாதி வெறியர்களுக்கு நீங்கள் எடுத்துக் காட்டியுள்ள விளக்கத்தைக் கண்டு அதிர்ந்து போனேன். எந்தத் தலைவர்களிடம் இருக்கிறது பரிசுத்தம் என்ற கேள்வி சரியான சாட்டையடி. எந்தத் தலைவர்களிடமும் உண்மை இல்லை. பிறகு ஏன் அவர்களைப் பின்பற்ற வேண்டும். தொடர்ந்து எழுதுங்கள் எங்கள் ஆதரவு எப்போதும் உண்டு.

**பி. வரதன், ஈப்போ.**
உயர்வோம் சரியான நேரத்தில் சரியானக் கருத்துக்களைத் தாங்கி வெளிவருகிறது. வெறும் சினிமா போன்ற செய்திகளை எழுதி மக்களைக் கெடுத்துக் கொண்டிருக்கின்றவர்கள் மத்தியில் நீங்கள் ஒரு விடிவெள்ளி. உண்மைகளை அப்படியே படம் பிடித்துக் காட்டி இருக்கின்றீர்கள். ஆசிரியர் செங்கதிரோனை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம்.

**ஆர். பாலா, தைப்பிங்.**
உயர்வோமில் வருகின்ற அத்தனை படைப்புகளும் அர்த்தம் உள்ளதாக இருக்கிறது. சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், கேள்வி-பதில் அனைத்தும் படிக்கப் படிக்க நெஞ்சில் தேனூறுகிறது. தொடர்ந்து ஆசிரியர் இவ்வாறான படைப்புகளையே வெளியிட்டு வரவேண்டும்.

**எம். வினோத் குமார், குவாந்தான்.**
தமிழ்ப் பத்திரிகையைப் படிக்கவே கூடாதென வெறுப்படைந்திருந்தேன். ஒருவரின் மூலம் உயர்வோமை வாங்கிப் படித்தேன். மெய் சிலிர்த்தது. இதுவரை யாரும் தொட்டெழுதாத, எழுதுவதற்கும் அஞ்சும் செய்திகளை துணிவோடு எழுதி இருக்கின்றீர்கள். எல்லாவற்றுக்கும் காரணம் மேல்மட்டத் தலைவர்களும் அரசியல்வாதிகளும்தான். சொந்த ஆதாயத்திற்காக ஜாதியை வளர்க்கின்றார்கள். இதைப் படித்தாவது மக்கள் திருந்தட்டும்.

**எ. மீனா, நிலாய்.**
"வழிதவறும் தாய்க்குலம்" வழிதவறும் பெண்களுக்கு செருப்படியாக அமைந்துள்ளது. "தாலி மட்டும்தானா? "மீண்டும் அறிவானந்தன், "பொன்மனம்" ஆகிய கதைகள் படிக்க சுவையாக இருந்தது. இலக்கியக் கட்டுரைகளும் உயர்வோமின் தரத்தை வெகுவாக உயர்த்தியுள்ளது.

## உயர்வுக்கான ஊக்கமுடன் உழைக்கவேணும்

ஆக்கம் வேண்டுமெனில் - அறிவை
அடைய ஆசிப்போமாகில்
ஊக்கம் வேண்டும்பா - ஓயாது
உழைக்க வேண்டும்பா!

மன்னும் சுதந்திரத்தை - நாம்
மகிழ்வாய் அடைந்ததினால்
பொன்னை மழையாக - வானம்
பொழிந்து வாழ்ந்திடுமோ!

பால்சொட்டும் தோட்டமரம் - தானே
பாலை கொடுத்திடுமோ?
சேலை சேலையாகப் - பருத்தி
சேர்ந்து காய்த்திடுமோ!

உண்ணும் உணவுக்கும் - நன்றே
உடுக்கும் ஆடைகட்கும்
மண்ணில் அந்நியரை - நம்பி
மன்றாடல் வாழ்வாகுமா?

நெற்றியில் வியர்வை - நிதமும்
சுற்றி நிலத்தில் வீழ்தல்,
சற்றும் நாம் வாடிடாமல் - உழைக்க
சந்ததி நிமிர்ந்திடுமே!



சாதி சண்டைகளெல்லாம் - ஓய்ந்து
சரிதை படைக்க வேணும்
நீதி நெறிகளெல்லாம் - நிலைத்து
நிற்க விவேகம் வேணும்!

உலக மக்களெல்லாம் - அன்போடு
ஒரு தாய் மக்களைப்போல்
கலகமின்றி வாழ - மலையத்தில்
கங்கணங் கட்ட வேண்டும்

ஒற்றுமையில் உழைப்போம் - நாம்
உற்றதுணைவராவோம்
வெற்றுரை மறந்துவிட்டு உண்மை
பற்றுடன் தொழில் கற்றிடுவோம்!

-தமிழ் ஞானப்பித்தன்

படிப்பகம்

www.padippakam.com



# என்னை எரித்த அந்த இரவு

பேரா. நீல. பழநிவேலன்

செந்தமிழ் இயக்கம் ஏற்பாடு செய்திருந்த முத்தமிழ் மாநாட்டில் கலந்து கொண்ட நான், இடியென முழங்கிய அந்தக் குரலைக் கேட்டதும் திடுக்கிட்டு விழித்தெழுந்தேன். அதற்கு முன்னர் உரையாற்றிய பேச்சாளர் எங்களுக் கெல்லாம் உறக்கத்தை உருவாக்கியிருந் தார். அவர் என்ன பேசுகிறார் என்பதைப் புரிந்து கொள்வதற்கு முன்னரே சலிப்பை ஏற்படுத்தி தூங்க வைத்தார்.

"விழித்தெழு தோழா விழித்தெழு - தமிழ் வீணரை வீழ்த்திட விழித்தெழு" என்ற அந்த முழக்கம் என் செவியில் நுழைந்து நெஞ்சில் சாட்டையயடி என விழுந்தது. ஒரே வரிசையில் உட்கார்ந்திருந்த நானும் என் தோழிகளும் நிமிர்ந்து உட்கார்ந்தோம்.

என் உடல் என்னையறியாமலேயே நடுங்கியது. பக்கத்திலிருந்த தோழி பனிமலரின் கையை இருகப்பற்றினேன். என் நடுக்கத்தை அவள் உணர்ந்து கொண்டாள்.

"ஏண்டி, ஏன் உன் கை நடுங்குது? உனக்கு என்னாச்சி?" பனிமலரின் கேள்விக்கு என்னால் உடனடியாகப் பதில் சொல்ல முடியவில்லை.

யாரைத்தேடி இந்நாட்டிற்கு நான் ஓடிவந்தேனோ, யாரைப் பார்க்க வேண்டும் என்று கடந்த பத்தாண்டுகளாகத் தேடினேனோ அவரை அந்த மேடையில் பார்த்த போது, அந்த இடிமுழக்கக் குரலைக் கேட்ட போது என் உள்ளம் சிலிர்த்தது, உடல் நடுங்கியது.

முத்தமிழ் மாநாட்டு மேடையின் இலக்கணமாக அவர் நின்று முழங்கிய அந்த முழக்கம் தமிழ் நாட்டு அரசியல் மேடைப் பேச்சாளர்களை நினைவூட்டியது.

சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் அவரை நான் சந்தித்ததும் ஒரு மேடையில்தான். அது திருக்குறள் விழா விற்காக ஏற்பாடு செய்யப்பட்ட உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி.

பேச்சுப் போட்டியில் நானும் கலந்து கொண்டேன். எனக்குக் கிடைத்த தலைப்பு "திருக்குறள் போற்றும் பெண்மை" எனக்கு மிகவும் பிடித்தமானத் தலைப்பு. போட்டியில் பேசுவதற்காக முன்கூட்டியே நான் எழுதி தயார் செய்து கொண்டிருந்தேன்.

போட்டி நிகழ்ச்சிக்கு "கலையரசன்" தலைமை தாங்கினார். அவரின் தலைமை யுரை என்னை மிகவும் கவர்ந்தது. அவரின் பேச்சிலேயே நான் பேசுவதற்குரிய சில பயனுள்ள குறிப்புகளையும் எடுத்துக் கொண்டேன்.

பாவேந்தர் பாரதிதாசனிடம் அவருக்கு நல்ல ஈடுபாடு இருந்ததை அவரின் பேச்சு தெளிவுபடுத்தியது. பெண்களின் விடுதலைப் பற்றிய பாவேந்தரின் கருத்துக்களை விளக்கிப் பெண்கள் ஆண்களுக்கு நிகராக எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டு தங்களின் திறனை வெளிப்படுத்தி முத்திரைப் பதிக்க வேண்டும். இங்கே இந்த திருக்குறள் விழா பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ள வந்திருக்கும் பெண்கள் பாரதிதாசன் கண்ட அமுதவல்லிகளாக இனம் மானம் காக்க முன்வர வேண்டும் என்று அவர் பேசியபோது நான்தான் முதன் முதலில் கைத்தட்டி கலகப்பை ஏற்படுத்தினேன்.

பேச்சுப் போட்டியில் பேசிய நான் தலைவர் கலையரசர் அவர்களின் கருத்தை




மேற்கோள் காட்டி முதல் பரிசைத் தட்டினேன்.

தலைவர் கலையரசன் பேச்சுப் போட்டியில் சிறப்பாகப் பேசிய என்னை வெகுவாகப் பாராட்டினார். அன்று முதல் நான் அவரின் ரசிகை ஆனேன். அவரும் என் ரசிகர் ஆனார்.

அதன் பின்னர் வேறு பேச்சுப் போட்டி களில் நான் கலந்து கொள்வதென்றால், அவரிடம்தான் பேசுவதற்குரிய கருத்துக் களையும் குறிப்புகளையும் பெறுவேன். அவரும் எனக்கு மேடையில் எப்படிப் பேசி பார்வையாளர்களை ஈர்ப்பது என்பதைத் தெளிபடுத்தினார். அவரிடமிருந்த தமிழ் இலக்கிய ஈடுபாடு அறிவாற்றல், இனமான உணர்வு, நாவண்மை அவற்றிலும் மேலாக கனிவு, எளிமை ஆகியன என்னை மிகவும் கவர்ந்தன. தமிழ் இலக்கியங்களில் எனக்கு ஏற்படும் ஐயங்களை அவரிடமிருந்தே கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்ளும் அளவிற்கு நெருக்கம் ஏற்பட்ட போது, அவரை என் ஆசிரியராக மதித்துப் போற்றினேன்.

அவரிடம் பயிற்சி பெறுவது இனிமை யாக இருந்தது. அவரை ஓர் இலக்கியவாதி யாக சிறந்தப் பேச்சாளராக மட்டுமே தெரிந்து கொண்டிருந்த நான், அவர் எழுத்துத் துறையிலும் சிறந்து விளங்குவதை அறிந்து பெருமிதம் கொண்டேன். கலையரசன் ஆகிய அவர் , பல் வேறு புனை பெயர்களில் கதைகளும், கவிதைகளும் கட்டுரைகளும் எழுதுகிறார் என்பதை தந்தை தான் எனக்கு விளக்கினார். அவர் என் தந்தையின் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரியவராக அவர் இருந்ததில் எனக்குப் பூரிப்பு.

எனக்கு நல்ல அறிமுகம் ஏற்பட்ட போது அப்பாவின் நண்பர் என்ற முறையிலும் அடிக்கடி என் இல்லம் வரலானார். எனக்கு நல்ல நண்பரானார்.

குறுகியகால நட்பு மிக நெருக்கமாகி இறுகியபோது, புதியதோர் போராட்டம் என்னுள் உருவாகியது.

நாடறிந்த இலக்கியவாதி, சிறந்த பேச்சாளர், வளமான கவிஞர், புகழ்பெற்ற எழுத்தாளர், அவர் எனக்கு மிகவும் வேண்டியவர் என்று சொல்லிக் கொள் வதிலே எனக்குத் தனிப் பெருமையும் பூரிப்பும் இருந்தது. அவரை நான், சார் என்றுதான் அழைப்பேன். என்னைவிட 13 ஆண்டுகள் மூத்தவர். ஆனால் பார்ப்பதற்கு மிகவும் இளையவராகவே தெரிந்தார். என்னைவிட பதின்மூன்று ஆண்டுகள் மூத்தவர் என்பதை ஒப்புக் கொள்ள முடியாத அளவிற்கு இளமையாகத் தெரிந்தார்.

சார் என்று அழைக்கும் வரை "அண்ணா" என்று அழைக்கலாம் என்றுகூட நான் எண்ணினேன். ஆனால் ஏனோ என்னால் அவரை அண்ணா என்று அழைக்க முடியவில்லை. அவரும் என்னை தன்னுடைய மாணவியாகக் கருதாமல் நண்பரின் மகளைப் பார்த்து வாங்க போங்க என்று மரியாதைக் கொடுத்து அழைத்ததில் அண்ணன் அடிப்பட்டுப் போவதையும் உணர்ந்தேன்.

அந்த நிலையில் நாளேட்டில் வந்த ஒரு கவிதை என்னை திகிலடைய வைத்தது. அது காதல் கவிதை.

அது அவர் எழுதிய கவிதை. அதுவும் என்னைக் கருவாக வைத்து எழுதப்பட்டக் கவிதை. நீலமலர் என்ற என் பெயரைச் சுட்டியே எழுதியிருந்தார். ஆனால் நல்ல வேளை அக்கவிதைக்குப் புகழ்பெற்ற அவரின் பெயரைப் பயன்படுத்தவில்லை. வேறொரு புதிய புனை பெயரைப் பயன்படுத்தியிருந்தார். அக்கவிதையைப் படித்த என் அம்மாவும், ஐயப்பட்டுக் கேட்டார். "என்னம்மா நீலமலர் உன் பெயரைப் பயன்படுத்தி யாரோ கவிதை எழுதியிருக்கிறாங்க போலிருக்கே, யாரவன்?" ஒரு வினாடி ஆடிப் போன நான், என்னைக் காப்பாற்றிக் கொள்ள அம்மாவிடம் சமாளித்தேன்.

"ஏம்மா இந்த சிங்கப்பூர்ல நான் ஒருத்தித்தான் நீலமலரா? இந்தப் பெயர்ல வேறு எவரும் இருக்கக் கூடாதா?" "இருக்கலாம்; ஆனால் அவளுக்கு உன் குணங்களும் கொள்கைகளும் இருக் கணும்னு கட்டாயம் எதுவும் இல்லையே..." அம்மாவிற்கு ஐயம் வந்துவிட்டது என்பதைச் சொல்லாமல் வெளிப்படுத்தினார். அந்தக் கவிதையின் கருப்பொருள் என் அறிவையும் ஆற்றலையும் புகழ்ந்து என்னையே தன் வாழ்க்கைத் துணைவியாக அடையத் தவம் இருப்பதாகவும், நானில்லாமல் அவரால் இனி வாழ முடியாது என்றும். பாவியத்தின் வழி தூதனுப்பியிருந்தார்.

நான், காதல் உணர்ச்சிக்கு அப்பாற்

(13-ம் பக்கம் பார்க்க)

# மொழியும் பண்பாடும் நிலைத்து வாழ குடும்பங்கள் ஆற்ற வேண்டிய பங்கு!

(பூங்குழலி வீரன்)

மொழியும், பண்பாட்டு பழக்க வழக்கங்களும் ஓரினத்தை வளர்க்கும் அடிப்படை கூறுகளாகும். தொன்மை வாய்ந்த தமிழினத்திற்கு இவ்விரு கூறுகளும் இரு கண்களைப் போன்றவை. ஆனால், இப்பெருமை மிக்க தமிழினத்தில் பிறந்த நாம் எப்படி வாழ்கிறோம்? நமது மொழியும் பண்பாடுகளும் நிலைத்து வாழ நமது பங்கினை ஆற்றுகிறோமா?

தமிழ்க் குடும்பங்கள் அதாவது தமிழர்கள் என்றால் இப்படித்தான் வாழ வேண்டும் என்று ஒரு நெறிமுறை உண்டு. உடை அணிவதில், உணவுப் பழக்கத்தில் இன்னும் சொல்லப் போனால் தமிழர்களின் வாழ்க்கை முறை தனிச்சிறப்பு மிக்கது எனலாம். ஆனால் இன்றைய நிலையில் "வாழ்க்கை முன்னேற்றம்" என்ற பெயரில் எத்தனையோ தமிழர்கள் தங்கள் மொழியையும் பண்பாட்டு பழக்க வழக்கங்களையும் கூறு போட்டு விற்று வருகின்றனர். இவர்கள் தங்கள் பிள்ளைகளைத் தமிழ்ப் பள்ளிக்கு அனுப்புவதில்லை. அவர்களுக்கு பண்பாட்டுப் பழக்க வழக்கங்களைப் போதிப்பதில்லை. இவை எல்லாம் ஒரு இனத்தை அழிக்கும் செயலே தவிர வளர்க்கும் செயல்களல்ல. எனவே, மொழியும் பண்பாடுகளும் நிலைத்து வாழ வேண்டுமெனில் உங்கள் பிள்ளைகளைத் தமிழ்ப் பள்ளிக்கு அனுப்பி தமிழ் நிலைக்க உங்கள் பங்கினை ஆற்றுங்கள்.

இன்று பெரும்பாலான தமிழ் இளைஞர்களைப் பாருங்கள். காதிலே வளையம் மாட்டிக் கொண்டு, முடியை வளர்த்துக் கொண்டு திரிகிறார்கள். கேட்டால் காதிலே கடுக்கன் போட்டுக் கொண்டு இருந்த நமது மூதாதையர் கோவணமும் கட்டி இருந்தனரே! அதைப்பின்பற்றுவார்களா இவர்கள்? தமிழன் என்பதை உறுதி செய்ய நல்ல தமிழில் பேசுவதில்லை. கொச்சைத் தமிழையே பேசுகின்றனர். இவர்களைப் போன்ற இளைஞர்களால் மொழியும் பண்பாடும் தரங்கெட வாய்ப்புண்டு. இன்றைய இளைஞர்கள்தான் நாளைய குடும்பத் தலைவர்கள். நாளைய தங்கள் பிறங்கடையினர் (தலைமுறை) மொழியும் நல்ல பண்பாடுகளும் கொண்ட ஒரு இனமாக வாழ, இந்த இளைஞர்கள் மாற வேண்டும். இதன் மூலம் அவர்கள் இனம் வளர பங்கு ஆற்றியவர்களாவர்.

உடை அணிவது கூட ஒரு பண்பாடுதான். மொழி சார்ந்ததுதான். உடை அணிவதிலும் இன்றைய தமிழ்ப் பெண்கள் தங்கள் பண்பாட்டைச் சீரழிக்கின்றனர். நமது பண்பாட்டு உடையான சேலையை அணியும் பெரும்பாலான பெண்கள் தங்கள் பண்பாட்டைச் சீரழிக்கின்றனர். உடை என்பது உடலையும் மானத்தையும் மறைக் கத்தான் என்பதை மறந்து விடுகின்றனர். இன்று வழி தவறிப் போகின்றனர். தமிழ்ப் பெண்களும் அவர்களின் பண்பாட்டு உடைகளும் இப்படித்தான் உடைக் குறைப்பைக் கொண்டது என மற்ற இனத்தவர்கள் இழிவாகப் பார்க்கும்படி செய்கின்றனர். "பெண்களே பண்பாடுகளின் சின்னங் கள்" என்பதை மறந்து விடாதீர்கள். இன்றே திருந்தினால் நாளையாவது தமிழினம் மீட்சிபெறும்.

தமிழர்களே, உங்கள் மொழியும் பண்பாடுகளும் நிலைத்து வாழ நீங்கள் விரும்பினால் அதன் மேல் பற்று வையுங்கள். அந்தப் பற்று வலுப்பெற உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் தமிழராய் வாழ வையுங்கள். இதன் மூலம் மொழி வளரும், பண்பாடு சிறக்கும், பயனும் பல விளையும்.

www.padippakam.com



பட்டவள். காதல் உணர்வை கயவர்களின் காம விளையாட்டாகக் கருதுபவள். காதல் ன்றாலே எனக்கு வேம்புதான். காதல் என்ற சொல்லை உச்சரிக்கவே அச்சப்படுபவள் ான். என் மீது அவருக்குக் காதலா? ன்னால் அதை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

ஆனால், அவர் மீது ஏனோ எனக்குக் கோபமும் வரவில்லை. ஏனெனில் அந்தப் ாவியத்தில் என்னை அவர், மிகவும் யர்வாகப் புகழ்ந்திருந்தார். வள்ளுவர் கண்ட வாசுகியாக, தெய்வப் பெண்ணாக ருவகப் படுத்தியிருந்தார். அவர் மீது எப்படி கோபம் வரும்?

அந்தப் பாவியத்தை எத்தனை முறை டித்தேன் என்பதும் எனக்கு நினைவும் இல்லை. படித்துப் படித்து மகிழ்ந்தேன். ரிப்படைந்தேன். ஒரு புகழ்ப்பெற்ற ழுத்தாளரின் காவிய நாயகியாக உலா ருவதில் பெருமையும் கொண்டேன். அதற்காக அவரின் காதலியாக, காதல் துணைவியாக நான் துணை நிற்க முடியுமா?

என் வாழ்க்கை நோக்கமே டிப்புத்தான். அப்பாவின் லட்சியமும் ன்னைப் பட்டதாரி ஆக்க வேண்டும் ன்பது. கலை இலக்கியத்தில் பட்டம் பெற வேண்டும் என்பதே என் குறிக்கோள். அதனால் காதலுக்கோ திருமணத்திற்கோ ன் நெஞ்சில் இடமில்லை.

படிப்பு முடிந்த பின்னர் கூட திருமணம் செய்து கொண்டு வாழ வேண்டும் என்று நான் ிரும்பியதில்லை. மாறாக குமுகாயப் ணிகளில் ஈடுபட வேண்டும் என்பதே நாக்கமாக இருந்தது. அதற்குக் கரணியம் ிருமணம் செய்து கொண்டு இல்லற ாழ்க்கையில் ஈடுபட்ட பல பெண்களின் ாழ்க்கை பரிதாபத்திற்குரியதாக இருந் தே. இல்லறக் கொடுமைகளில் பெண் ளின் வாழ்வு சீர்கெட்டு அழிந்திருப்பதை றிந்த பின்னர் எப்படி இல்லற வாழ்க்கையில் டுபட ஆசைவரும்? மேலும் பெண்கள் டுதலைக்காகப் போராட வேண்டும் என்று ண்ணம் கொண்டுள்ள என்னால், எப்படி ருவரைக் காதலிக்க முடியும்?

அவரோ நேரடியாக என்னிடம் காதல் ற்றியெல்லாம் பேசவில்லை. அவரை ஏன் ப்படி எழுதினீர்கள் என்று கேட்கவும் ணிச்சலில்லை. ஏனெனில் அவர்தான் ப்படி எழுதுவதாக குறிப்பெதுவும் ாட்டாத கள்வராக இருந்தார்.

நான் கேட்கும்போது அதை நான் எழுதவில்லை என்று எளிதாகத் தப்பித்துக் கொள்ளலாம் அல்லவா?

ஆனால், அவரோ தொடர்ந்து என்னைக் குறியாக வைத்தே கவிதைகளும் கதைகளும் எழுதிக் கொண்டிருந்தார். அம்மா அவற்றையெல்லாம் படித்து பெரு மூச்சு விட்டுக் கொண்டிருந்தார். அவற்றை எல்லாம் எழுதிக் கொண்டிருப்பவர் கலையரசன்தான் என்பதை அம்மா புரிந்து கொள்வாரா என்பதும் எனக்குத் தெரியாது.

அவர் மீது அன்பும் மரியாதையும் நிரம்பவே இருந்தது. ஒவ்வொரு நாளும் அவரைப் பார்க்க வேண்டும், அவருடன் பேச வேண்டும் என்ற ஏக்கமும் இருந்தது. ஆனால் அது காதல் உணர்வால் ஏற்பட்ட தாக்கமா என்பது எனக்குப் புரியவில்லை. ஏனெனில் காதல் சொல்லையே வெறுப்பவளாக நான் இருந்தேன்.

காதல் எனக்கு ஒவ்வாத உணர்வு. காதலைப் பற்றிச் சிந்திக்கும் பருவமும் எனக்கில்லை. அப்படி இருக்கும் போது அவர் மீது மட்டும் எனக்கு எப்படிக் காதல் வரும்? நான் ஆரம்பக் கல்வியிலிருந்து உயர்நிலைக் கல்வி வரையில் படித்துக் கொண்டிருப்பதில் பெண்கள் மட்டுமே படிக்கும் பள்ளிக் கூடத்தில்தான். எனவே ஆண்களோடு சேர்ந்துப் படிக்கும் வாய்ப்பு எனக்கில்லை.

ஆண்களுடன் பேசிப் பழகும் வாய்ப்பு எனக்கு அறவே இல்லை. எனக்கென்று அத்தை மாமன் மகன்கள் என்ற உறவுத் தொடர்பும் இல்லை. அப்பாவும் அம்மாவும் கட்டுப்பாடு மிகுந்தவர்கள். பள்ளித் தோழிகளின் இல்லங்களுக்கும் நான் செல்வதில்லை. வயது வந்த ஆண்களுடன் பழகுவது ஒழுக்கக் கேடானது என்ற எண்ணம் கொண்டவள் நான். அத்தகைய உணர்வுடைய நான் அவரைக் காதலிப் பேனா?

எனக்கு வயது பதினான்குதான். கண்ணகிக்கு திருமணம் ஆனபோது, அவருக்கு வயது ஒன்பது என்ற கலையரசன் அவர்களே இலக்கியப் பேச்சு ஒன்றில் குறிப்பிட்டிருந்தார். நானும் அந்தக் குறிப்பை ஏதோ ஒரு ஏட்டில் படித்திருந்தேன்.

என் அப்பாவின் நண்பர் ஒருவரின் மகளுக்கு பதினான்கு வயதில் திருமணம் நடந்தது. இந்த வயதில் இவருக்கு ஏன் திருமணம் செய்து வைக்கிறார்கள் என்று நான் சினம் கொள்வதும் உண்டு. எனக்கு வயது பதினான்குதான். இன்னமும் நான் சிறுமி என்பதே என் எண்ணம். என் மீது அவருக்கு எப்படிக் காதல் வந்தது?

அது கிடக்கட்டும், ஒரு மாணவியான என்னைக் காதலிக்க அவருக்கு எப்படி எண்ணம் வந்தது? நான் ஒன்றும் அழகியல்ல. ஆனால், என் நிறம் மட்டும் கொஞ்சம் எடுப்பானது. அவரே பாராட்டினாரே அந்தக் கவிதையில் "மாந்தளிர் மேனி" என்று. அந்த நிறத்தைவிட வேறு அழகு எதுவும் என்னிடம் இருப்பதாக நான் கருதவும் இல்லை. அவர் என்னிடம் எதை எதிர்பார்த்து மயங்கினார், ஏன் மயங்கினார் என்று என்னையே நான் கேட்டுக் கொண்டு விடை தேடினேன். அவரை என்னவும் வெறுக்கவும் முடிய வில்லை.

அவர் ஒரு கவிதையில், அவரின் காதலை ஏற்றுக் கொள்ளவில்லையானால், தற்கொலை செய்து கொள்ளப் போவதாகக் குறிப்பிட்டிருந்ததைப் படித்ததும் அதிர்ச்சி யில் உறைந்து போனேன்.

என் உடன்பாடு இல்லாமல் என்னைக் காதலிப்பதும், காதலித்த பின்னர், நான் உடன்படவில்லையானால் தற்கொலை செய்து கொள்ளவதாக மிரட்டுவதும் என்ன முறை? என்னைக் காதலிக்கும் படி அவரிடம் நான் தூது அனுப்பினேனா?

அவரிடம் சண்டை போட வேண்டும் என்ற எண்ணம் என்னை உலுக்கியது. அப்போதுதான் என் தங்கை என்னை எச்சரித்தாள். "அவர் கவிஞர், அவர் எழுது வது கவிதை" கவிஞர்கள் எதை எப்படி வேண்டுமானாலும், கற்பனை செய்து எழுதுவார்கள். அவர் உன்னைத்தான் கருவாக வைத்து எழுதுகிறார் என்று எப்படி நீ அர்த்தப்படுத்திக் கொள்ளலாம். வேறு எவளையாவது மனதில் எண்ணிக் கொள்ள லாம் அல்லவா?"

என் நெற்றிப் பொட்டில் அறைந்தது போல் இருந்தது. இவ்வளவு நாள் அவர் என்னைப்பற்றித்தான் எழுதுகிறார் என்றல் லவா பெருமைப்பட்டுக் கொண்டிருந் தேன். அவர் வேறு ஒருத்தியை மனதில் எண்ணி எழுதுகிறாரா? அது எப்படி முடியும்?

என்னால் அதை செரிமாணிக்க முடிய வில்லை. ஒவ்வொரு கிழமையும் என்னைப் பற்றி அவர் எழுதிய கவிதை வருகிறதா? கதை வருகிறதா என்ற ஆர்வத்துடிப்பில் அதிகாலையிலேயே இதழ்களை வாங்கிப் பெருமைப்பட்டுக் கொண்டல்லவா இருந்தேன்.

"இல்லை இல்லை அவர் வேறு ஒருத்தியைப் பற்றி எழுதுகிறார் என்பதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். அவர் என்னைப் பற்றியே எழுதுகிறார்" என்றேன். என் தங்கை என்னையே வெறிக்கப் பார்த்தாள்.

என் தங்கை என்னைவிட இளைய வள்தான் என்றாலும் சிலவற்றை விரைவாகப் புரிந்து கொள்வதில் கெட்டிக்காரி.

காதல் உணர்வை வெறுக்கும் என் உள்மனத்தில் அவர் வாழ்ந்து கொண்டிருக் கிறார் என்பதை எனக்குப் புரிய வைத்தாள். ஆம், என்னை அறியாமலேயே என் உள்மன உணர்வுகளில் அவர் உறைந்து கொண்டி ருக்கிறார். ஒவ்வொரு நாளும் அவருடன் பேச வேண்டும். அவரைப் பார்க்க வேண்டும் என்று நான் எதிர்பார்த்ததன் பொருள் நான் அவரைக் காதலிக்கிறேன் என்பதுதானா?

ஆம், காதல் உணர்வை வெறுத்த நான் அவரைக் காதலிக்கிறேன். அவர் மீது ஏற்பட்ட காதலே அவரின் படைப்பிலக்கியங் களின் மீது ஆர்வத்தை வளர்த்திருக்கிறேன்.

பட்டதாரியாக வேண்டும் என்ற அப்பாவின் இலட்சியமும், என் கனவும் நொறுங்குவதைப் போல் ஓர் அச்சமும் என்னைஆ உலுக்கியது. என்னுடன் வாழத் துடிக்கும் அவருக்கு நான் வாழ்வு கொடுக்க வேண்டுமானால் என் படிப்புக்கு நான் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். புதிய குழப்பம் என்னை திணற வைத்தது.

கவிதைகளில் காதல் தூது விடுத்துக் கொண்டிருக்கும் அவர் என்னிடம் நேரில் வந்து சொல்லக் கூடாது? முதன் முதலாக மனம் ஏங்கியது. அந்த ஏக்கத்தை எப்படி அவரிடம் வெளிப்படுத்தும்படி "என்னை நீங்கள் காதலிக்கிறீர்களா?" என்று கேட்பதற்குக் கூட எனக்குத் துணிவில்லை. அப்படிக் கேட்பதே என்னை நான் தாழ்த்திக் கொள்வதைப் போன்ற அச்சம், அதையும் ஒழுக்கக் கேடாகக் கருதியது மனம். எனினும் அவரை தனியாக சந்திக்கவும் மனம் தூண்டியது.

அவர் உண்மையாகவே என்னைக் காதலிக்கிறாரா? திருமணம் செய்து கொள்ள விரும்புகிறாரா? அல்லது இலக்கியம் படைக்க வேண்டும் என்பதற் காக அப்படியெல்லாம் எழுதுகிறாரா? அவரின் உயிரோட்டமான இலக்கியங்களின் கருப் பொருளாக மட்டும்தான் என்னைப் பார்க்கிறாரா? அவரை ஆழம் பார்க்க வேண்டும் என்று உந்துதல் என்னை உசுப்பி யது.

பெண் துணிந்தால்தான் எதையும் செய்வாளே.

"தமிழர் வாழ்க்கை முறையும் வழிகாட் டும் குறள் நெறியும்" என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதி அவரிடம் திருத்தம் பெற எடுத்துச் சென்றேன்.

அவர், தன் அலுவலகத்தில் இருந்தார். கனிவான அவரின் வரவேற்பில் நான் கரைந்து போனேன். அதற்கு முன்னர் அவருடன் பேசும் போதெல்லாம் தலை குனியாத நான், நிமிர்ந்து நின்றே பழக்கப்பட்ட நான், அவரை நிமிர்ந்து பார்க்க முடியாமல் தலை குனிந்தேன்.

"தனியாக வந்திருக்கிறீர்களே, தங்கை உடன் வரவில்லையா?" அவர்தான் முதலில் பேசினார்.

"இல்லை. அவளுக்கு இன்று நேர மில்லை"

-தொடரும்

**(9-ம் பக்கத் தொடர்ச்சி)**

தமிழர் சமுதாயம் சரியான திக்கை நோக்கி நடைபோட வேண்டுமானால் பொது இயக்கவாதிகள் அரசியலிலிருந்து ிலக வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் கூழுக்கும் ஆசை ீசைக்கும் ஆசை என்பதுபோல் ஆர்.ஆர். ம். கிருஷ்ணனும், ஜோசப் ராஜா போன்றவர்களும் பொது இயக்கங்களின் னித்தன்மையைக் கெடுக்கக் கூடாது. இரண்டு எஜமானர் களுக்கு ஒரு வேலைக்காரன் போல் இல்லாமல் ஒரே லைமைத்துவத்தில் பொறுப்புணர்வுடன் செயலாற்ற வேண்டும்.

அப்படிப்பட்டவர்களால் மட்டுமே டமையுள்ளத்தோடு பணிபுரிய முடியும் . பொது இயக்கங்களின் வழி இனம்மொழி ல்வி கலை பொருளாதாரம் போன்றவற்றின் ளர்ச்சிக்காகப் பாடுபடவும் சமுதாயத்தில் ருவாகிக் கொண்டிருக்கின்ற சிக்கல் ளுக்கு தீர்வு காணவும் முடியும்.

இந்திய சமுதாயத்திலே ஊறிக் டக்கின்ற வன்முறைக் காலாச்சாரங்கள் ழிக்கப்படுவதற்கு சமுதாய இயக் கங்கள் ளரவும் ஒன்றுபடவும் தலைவர்களும் தொண்டர்களும் அர்ப்பண உணர்வோடு ன்வர வேண்டும்.

அரசியலில் தேனெடுக்க சுயநல நாக்கங் கொண்டு நுழைவதை பொது இயக்கவாதிகள் தவிர்க்க வேண்டும்.

## தமிழ்ச்சான்றோர் வழிநின்று சூளுரைப்போம்!

தித்திக்கும் தேன்மொழியாம் தமிழே போற்றி
திருவருளை வேண்டுகின்றேன் அருள்வாய் தேவி
எத்திக்கும் புகழ்மணக்கும் சுறவ நாளில்
எடுத்தியம்பும் பேறுபெற்றேன் வாழ்த்து வீரே!
பத்துக்கும் மேற்பட்ட படைகள் சேர்த்து
பண்பாட்டு விழாவிற்குச் சிறப்புத் தந்து
எத்திக்கும் போற்றுகின்ற பேறு பெற்ற
எமதருமைத் தமிழ்மகனாம் இந்தச் சாமி!

அந்நாளில் முரசுகொட்டி வாழ்ந்த தாலே
அரங்கிலின்று பாவினிலே வாழ்த்து கின்றேன்!
எந்நாளும் இவர்பெயரும் ஓங்கி நிற்கும்
ஏடுகளும் இவர்புகழைத் தாங்கி நிற்கும்!
அந்நாளில் செந்தூல்வாழ் குமர னன்றோ
அழகுத்தமிழ்த் திருநாளைப் படைத்த வீரர்!
கண்ணாகப் பலரிருந்து காத்த தாலே
கனிவாகத் தலைமையேற்று ஏற்றம் தந்தார்!

தமிழுக்குத் தூணாக நின்ற நல்ல
தமிழ்ச்சான்றோர் பரம்பரைக்கு வாழ்த்துச் சொல்வோம்!
உமியாக ஊதிநம்மை விசு வோரை
உறுதியான நெஞ்சுரத்தால் எதிர்த்து நிற்போம்!
தமிழுக்குத் தோள்கொடுத்து தூக்கி நிற்போம்
தமிழ்ச்சான்றோர் வழிநின்று சூளு ரைப்போம்!
தமிழ்த்திருநாள் பெருமைகளைப் பேசி இங்கே
தமிழினத்தின் உணர்வுகளை ஊக்கு விப்போம்!

பெரியவரை வாழ்த்துகின்ற அவையில் நின்று
பெருமைகளைப் பேசுகின்ற பேறு பெற்றேன்!
அறிந்துவைத்த செய்தியாலே வாழ்த்துச் சொல்ல
அகவைகூட வில்லையம்மா நீயே வாழ்த்து!
சிறியவர்கள் சீறியெழ தாக்கம் கொண்டு
சிறந்தபணி யாற்றிவிட ஊக்கம் தந்த
பெரியவரின் பொற்பாதம் வணங்கு கின்றேன்
பெருமைதரும் அவையினரே வாழ்த்திச் செல்க!

-கோமகள்

(முச்சங்கம் கொண்டாடிய 2002-ம் ஆண்டு தமிழர் திருநாளில் திரு.பி.ஜி. கோவிந்தசாமி அவர்களைப் பாராட்டிச் சிறப்பிக்கப்பெற்ற கவிதை)

படிப்பகம்

www.padippakam.com



# "மலேசியத் தமிழனாக வாழ்வோம்" என்ற கருப்பொருளுடன் கூலாய் நகரில் இரண்டாவது ஆண்டாக தமிழர் திருநாள் கொண்டாடப்பட்டது.

கூலாய் நகரில் 20.1.2002-ல் நடைபெற்ற தமிழர் திருநாள் விழாவில் சிறியோர் முதல் பெரியோர் வரை கிட்டதட்ட நானூறு பேருக்கு மேல் கலந்து கொண்டு சிறப்புச் செய்தனர்.



நிகழ்வில் நடனமாடிய பெண்மணி

தமிழர் திருநாள் விழாக் குழுவின் தலைவர் திரு. ஆர்.ரவி தன் உரையின் போது "தமிழர் திருநாளுக்கு செலவிடப்படும் நிதி வீண் போகாமல் பல நற்காரியங்களுக்குப்



விழாக் குழுத் தலைவர் ஆர். ரவி அவர்கள் கூலாய் மாவட்ட கல்வி அதிகாரிக்கு நினைவுப் பரிசு வழங்குதல்.

பயனாக அமைகிறது. இந்நிகழ்வு கூலாய் தமிழ் இளைஞர்களிடையே உள்ள சமூக உணர்வையும் கடப்பாட்டையும் செயல் திறமையும் வெளிக் கொணர்ந்துள்ளது.

எதற்கெடுத்தாலும் குறை சொல்லும் போக்கை கைவிட்டு "செயல் ஒன்றே சிறந்த சொல்" என்ற வரலாற்று நாயகர்களின் கூற்றின்படி இவ்விழாக் குழு செயல்படும். எதிர்ப்பு நிலையைத் தாண்டி, அதற்கான தீர்வுகளை நோக்கிய புயணத்தை, சிந்தனைப் போக்கை எமது குழு கைகொள்ளும் என்று தமதுரையில் விரிவாக எடுத்துக் கூறினார்.

பல்வேறு பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளுடன் கோலாகலமாக தொடங்கிய இவ்விழாவில் கோலாட்டம், சிலம்பம் மற்றும் கலாசார நிகழ்வுகள் பொது மக்களைப் பெரிதும் கவர்ந்தன.

சிறப்பு அங்கமாக யு.பி.எஸ்.ஆர். மற்றும் எஸ்.பி.எம். தேர்வுகளில் சிறப்பு மதிப்பெண்களைப் பெற்ற முப்பது மாணவ மாணவியர்களையும் அவர்களது பெற்றோர் களையும் கூலாய் மாவட்ட கல்வி அதிகாரி தமது இல்லத்தரசியுடன் வருகை புரிந்து பரிசுகளை வழங்கி கௌரவித்து சிறப்



பூச்சரம் தொடுக்கும் பெண்கள்

பித்தார்.

கடந்தாண்டு விழாவில் கூலாய் வட்டார முன்னாள் தலைமையாசிரியர்



கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர்.

களுக்கும், கலை, இலக்கியத்துறை முன் னோடிகளுக்கு "தமிழ்வேள்" விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது போல் இவ்வாண்டும் ஜொகூர் மாநிலத்தைச் சேர்ந்த ஐந்து மூத்த எழுத்தாளர்களுக்கு "தமிழ்வேள்" விருது வழங்கி சிறப்பிக்கப் பட்டதுடன், கடந் தாண்டைப் போல் இவ்வாண்டும் சிறப் மலர் வெளியிடப் பட்டது.

நிகழ்வினைக் காண சிறப் விருந்தினராக சிலாங்கூர் மாநில தமிழ சமூக நல மேம்பாட்டுக் கழகத் தலைவ திரு. க. மதியழகன் அவர்களும், மாசா பொது நலத் தொண்டர் திரு. சே புருஷோத்தமன் மற்றும் கங்கார் பூலா தமிழர் திருநாள் குழுத் தலைவர் திரு கணபதி ஆகியோர் கலந்து கொண விழாவிற்கு சிறப்பு செய்தனர்.

## கேமரன் மலையில் இளையோர் கருத்தரங்கம் வித்தியாசாகர் சாதனை!

சமூகப் பண்பாட்டு பக்தி இயக்கம் தனது வருடாந்திர தேசிய இளையோர் கருத்தரங்கை கேமரன் மலையில் "அடுத்த தலைமுறையை நோக்கி" என்ற கருப்பொருளில் நடத்தியது. கடந்த 7 ஆண்டுகளாகத் தொடர்ந்து கலந்து கொள்ளும் இந்த இளைஞர்கள் இந்த ஆண்டு சொந்தமாகவே நடத்தினார்கள்.

கருத்தரங்கு மலர், கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி போன்றவை மூன்றுநாள் நடை பெற்றது. மூன்றுநாள் நடைபெற்ற இந்த கருத்தரங்கு முதல் நாள், "இன்னும் முப்பது ஆண்டுகளில் இளையவர்கள் நிலை எப்படியிருக்கும்? அப்போது அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் யாவை? ஏறக்குறைய ஐம்பது வயதை அடைந்திருக்கும் இவர்கள், அப்போதைய இளைஞர்களுக்கு எப்படி வழிகாட்டப் போகின்றார்கள்?" போன்றவை ஆய்வுக் கட்டுரை வழி விவாதிக்கப்பட்டது. சுமார் 70 இளைஞர்கள் கலந்து கொண்ட

இந்தக் கருத்தரங்கு கட்டொழுங்கு முறை முழுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டது. புதிதாக கலந்து கொண்டவர்களுக்கு சற்று சிரமமாக இருந்தாலும் கருத்தரங்கு முடிவடையும் தருவாயில் அது நமக்கு நன்மை என்று உணர்த்திடும் என்று அவர்கள் பேசியது நம்பிக்கை அளிக்கக் கூடியதாக இருந்தது.

இரண்டாம் நாள் நயனம் துணை ஆசிரியர் திரு. வித்யாசாகர் அவர்கள் சுமார் 3 மணி நேரம் ஒரு சிறப்பான பட்டறையை நடத்தினார். பயன்தரும் பகுத்தறிவு கேள்வி பதில், ஒரு கருப்பொருளில் குறு நாடகம் எழுதி இயக்கியும், நடித்தும், திறமையை வெளிப்படுத்தியும் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். வழக்கம்போல் இரவு கலை நிகழ்ச்சியை தவிர்த்து, அவர்கள் நடத்தும் நிகழ்ச்சிகள் பெரிய அளவில் தன் முனைப்பை தரும் என்பதில் ஐயமில்லை.

இக்கருத்தரங்கு இனிதே நிறை வேறியது.




கேமரன் மலையில் நடந்த இளையோர் கருத்தரங்கில் பிடிக்கப்பட்ட குழுப் படத்தைக் காணலாம்.

தமிழில் ஏறக்குறைய பன்னிரெண்டாயிரம் பழமொழிகள் உள்ளன. அவற்றில் நாலாயிரத்துக்கும் மேற்பட்டவை வேளாண் தொழிலைப் பற்றியதாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# நன்முத்து ந. வரதராசன் வழிகாட்டுகின்றார்!



இலக்கிய வீதியில் இன்பம் சேர்க்க முழுமதியின் தென்றலாய் தைப்பிங்கில் மையம் கொண்டுள்ள நன்முத்து ந. வரதராசன் அவர்கள் "மனத்துக்கண் மாசிலான் ஆதல் அனைத்து அறன் ஆகுல நீரபிற" என்னும் குறளின் அமுதக் கருத்துக்களுக்கு இலக் கணமாய்த் திகழும் வெள்ளை உள்ளம் கொண்டவர் எனப் போற்றுபவன் யான்.

என்னுள் நிறைந்திருக்கும் அன்பு நெஞ்சமுடைய தைப்பிங் சு. மேகநாதன் அவர்களை "தென்றலாய் வலம் வரும் மேடைப் பேச்சாளரென" அடையாளம் கண்டு அவர் புகழ் அனைவரும் அறியவே உயர்வோமுக்கு எழுதி அனுப்பி உதவினார் நன்முத்து வரதராசனார்.

அத்தன்மைபோல் தைப்பிங் "சமூக ஒளி விளக்கென" பலரும் அறியவே செ. கணபதி வர்களையும் தாளிகையில் வெளிவர உதவியுள்ளார்.

கரவு நெஞ்சம் கொண்டோர்; கண்ணிய சீலர்களை கறைபடியச் செய்து ஓரங்கட்டுவோர் றைந்திருக்கும் தமிழர் குழாத்தில் ஐயா வரதராசனார் அவர்களின் பேருள்ளம் என்னை வியக்க வக்கிறது. மலைக்க வைக்கிறது.

இவரின் அடி தொட்டு மற்றவர்களும் நல்லுள்ளத்தார்களின் செயல்பாடுகளையும், றப்புக்களையும் உயர்வோமுக்கு தக்கச் சான்றுகளுடன் எழுதி அனுப்புவார்களேயானால் யர்வோம் வெளியிட்டு அவர்களுக்குச் சிறப்பு சேர்க்கும்.

-ஆசிரியர்

## சிறப்புக் கட்டுரை

# மக்கள் தொண்டர் அறிமுகம்!

**தைப்பிங் சமுதாய ஒளிவிளக்கு திரு. செ. கணபதி அவர்களைப் பற்றி சில வைரவரிகளாக வசந்தகால பூந்தென்றலிலே உதிர்ந்த உயர்ந்த எண்ணங்கள்.....!**

**(தொகுப்பு : ந. வரதராசன், தைப்பிங்.)**

ஓசைகளாக ஆலயமணி ஓசைகளாக ர் செவிகளில் விழுந்தன!

குழந்தைகள் இல்லத்திலே இவரின் ாண்டுகள் பனி விழுந்த மலர்கள்தான்! த்தனை கவனம்! ஆதரவு; காட்டும் வுகள் அனைத்தும் மணம் சிந்தும் லிகை மலர்கள்! நான்கூட கடந்த ஐந்து ண்டுகளாக இவரின் நடைமுறைப் ாபுகள் - சேவைகள் - அங்கு குழந்தைகள் ல்லத்திலே காட்டும் தூய அன்பு - ாறுப்புணர்ச்சி - "கடமை - கண்ணியம் - டுப்பாடு" என்ற அறிஞர் அண்ணாவின் துவக் கருத்துக்களிலே நளினம், பயிலும் ல நடைமுறைகள் அனைத்திலும் ஒரு ்மை; புனிதத்தைக் கண்ட பிறகுதான், ;தத் தமிழ்ப் பெரியார் மீது பொது ழ்வில் - சமயத் துறைகளில் இவர் ட்டும் ஆர்வத்தின் மீது எனக்கொரு ப்பார்வை! மாறாத அன்பு! எப்படியும் த நல்லவரை இந்த நாட்டு மக்களுக்கு முகப்படுத்திவிட வேண்டும் என்ற மை உணர்வு இதயத்தில் மலரவே ரைப் பின் தொடர்ந்த போது, கிடைத்த மாண்புகள் இங்கே முரசொலிகளாகத் கின்றேன்!

கமுண்டிங் ஆலய சமயப் பிரச்சாரப் ி தந்த "தொண்டர் மணி" விருதும் சிய இந்துதர்ம மாமன்றம் வழங்கிய மாமணி" சிறப்பும் - கூச்சிங் ஸ்ரீ மகா யம்மன் ஆலயம் அளித்த "சமயச் ்வர்" பட்டமும் பொது மக்கள் த்துறைகளில் திரு. செ. கணபதி ்கள் வழங்கிய சமயத் ண்டுகளுக்குக் கிடைத்த மிகப் பெரிய ீகோரங்கள்! பரிசுகள்! பாராட்டுகள்! லைகள் - நினைவுப் பரிசுகள்! இவை து மக்களின் பூக்கோலங்கள் நக்கு அளித்தவை! இவை மட்டுமா?

31.8.1997-ல் கமுண்டிங் இந்து ாஞர் இயக்கம் - கமுண்டிங் ம.இ.கா. ஜயா கிளை - கமுண்டிங் வாசகர் ம் ஆகிய இயக்கங்கள் ஒன்றாக ணந்து திரு. செ. கணபதி அவர்களின் சமுதாய மற்றும் இளைஞர்களுக்காக த அரும்பணிகளைப் பாராட்டும் வகையில் இவருக்கு "இளைய திலகம்" என விருதளித்து பொன்னாடை அணிவித்துக் கௌரவித்தனர்!

தைப்பிங் நகரின் எழிலை மேம்படுத்திக் காட்டும் வகையில் நான்கு மாடிக்கட்டிடம் கொண்ட குழந்தைகள் இல்லம் தைப்பிங் நகரில் கவனமாகப் பராமரிக்கப்பட்டு வரும் கவின் காட்சிகளும், அதன் தலைவர், தொழில்துறை வல்லுநர், தைப்பிங் இந்து தேவாலய சபா பொருளாளர், குழந்தைகள் இல்ல மாண்புத் தலைவர் திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் நிர்வாகி திரு. செ. கணபதி அவர்கள் மதிப்பிற்குரிய திரு.

நடராஜா அவர்கள், சிறப்புக்குரிய அதிகாரிகளில் ஒருவரான திரு. சிவலிங்கம் அவர்கள், திரு. தனபால் பி.பி.டி. அவர்கள், பொருளாளர் திரு. மா. மணிவண்ணன் ஆகியோரின் ஒட்டுமொத்தமான அன்புப் பார்வைகள் குழந்தைகளைக் கவனிக்கும் முறைகள் அனைத்துமே பாராட்டுக்குரியவை! அவற்றிலே மொட்டு விரித்த செந்தாமரை யாக மிளிரும் திரு. செ. கணபதி அவர்கள்.

தைப்பிங் நகரின் எழிலை இன்றைக் கெல்லாம் வருணிக்கலாம்; அந்த அளவிற்கு இயற்கை அழகு பூத்துச் சிரிக்கும் திருவிடம்! நல்ல கலைஞர்கள் - நாடறிந்த எழுத் தாளர்கள் - பண்பட்ட சேவையாளர் கள் - ஆற்றல்மிகு அரசியல் மேதைகள் - சுந்தரத் தமிழ் மணக்கும் சொல்லின் செல்வர்கள் - சிறப்புமிகு மேடைப் பேச் சாளர்கள், நாவலர்கள், தமிழ்க் காவலர்கள், தமிழ்ச் சீலர்கள் இத்தனை போர்கள் வாழும் திருநகர் தைப்பிங்!

தைப்பிங் நகரில், குழந்தைகள் இல்லத்தில் அதன் ஆற்றல்மிகு - சிறப்புமிகு நிர்வாகியாக இன்று பதவியில் இருந்துவரும் தைப்பிங் சமுதாய ஒளிவிளக்கு "தொண்டர் மணி" திரு. செ. கணபதி அவர்களைப் பற்றி சில வைரவரிகளாக வசந்தகால பூந் தென்றலிலே உதிர்ந்த கருத்துக்களை மக்கள் அவரைப் பற்றி கொண்டுள்ள உயர்ந்த எண்ணங்களை நான் அறிந்தபோது எனக்குள் ஒரு வியப்பு மல்லிகை மொட்டாய் மலர்ந்தது! ஆம், அத்தனை பேர்களும் குறிப்பாக நான் சந்தித்துப் பேசிய அறிஞர் பெருமக்கள் கூறிய கருத்துக்கள் "திரு. செ. கணபதி அவர்கள் நல்ல தொண்டர்! பண்புள்ள - பண்பட்ட சமயத் தொண்டர்! அனைவருக்கும் நல்லவர்!" என்ற மாணிக்க வார்த்தைகள் எதிரொலிகளாக ஆலயமணி கணபதி அவர்களின் பழகும் பாங்கு மக்களின் உள்ளங்களில் ஆழப்பதிகின்றது!

குழந்தைகள் தங்கும் விடுதிகள் - உணவு உட்கொள்ளும் இடங்கள் - குழந்தை இல்ல அலுவலகம் அனைத்தும் காலத்தின் சரித்திர ஏடுகளை அழகுபடுத்துகின்றன! திரு. செ. கணபதி அவர்கள் நமது வணக் கத்திற்கும் வாழ்த்திற்கும் - பாராட்டிற்கும் உரியவர்! அந்த மாமமேதையின் வாழ்க்கை ஏடுகளை மெல்ல புரட்டுகிறேன்! அங்கே ஓர் வசந்தம் பூத்து நிற்கிறது!

16.9.1941-ல் வெள்ளி மாநிலத்தில், சுங்கை சிப்புட் டோவன் பி தோட்டத்தில் பண்புள்ள பெற்றோர்கள் திரு. சோ. செல்லையா, திருமதி பொ. சின்னக்குட்டி தம்பதிகளின் மூத்த மகனாக திரு. செ. கணபதி பிறந்தார். ஆரம்பக் கல்வி தோட்டத் தமிழ்ப் பள்ளியிலும், ஆங்கிலக் கல்வியை சுங்கை சிப்புட் மெதடிஸ்ட் ஆங்கிலப் பள்ளியிலும் கற்றார்!

சுங்கை சிப்புட் வட்டாரத்தில் வாழ்ந்தபோது நிறைய பொது இயக்கங் களில் சேர்ந்து சமூகத் தொண்டுகள் மக்கள் பாராட்டும் வகையில் தமது இளமைக் காலங்களில் செய்தார்.



"தொண்டர் மணி" திரு. செ. கணபதி அவர்கள் வாழ்த்துரை வழங்கும் கவின் காட்சி

மாண்புமிகு அமைச்சர் - நெஞ்சில் ஓர் ஆலயம் துன் வீ. தி. சம்பந்தன் அவர்களின் தீவிர ஆதரவாளர்! அவரின் முயற்சிகளுக்கு அன்று தோள் கொடுத்து நின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது!

16.9.1968-ல் சுங்கை சிப்புட் ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயத்தில் பண்புள்ள குமாரி சந்திரா அவர்களை இல் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார்!

இளமைக் காலங்களில் இவர் இராணுவ சேவைகளில் இருந்து கொண்டு நாட்டிற்கு சேவை செய்த நற்பணியாளர்!!

1975-ல் தைப்பிங் நகரில் கால் பதித்த பிறகு, நிறைய பொதுப் பணிகள் - சமயப் பணிகள் செய்து வரலானார்! இன்று "தொண்டர் மணி" செ. கணபதி அவர்கள் கடந்த 11 வருடங்களாக தைப்பிங் குழந்தைகள் இல்லத்தின் நிர்வாகப் பொறுப்புக்களை விழிப்பாக - செழிப்பாக கவனித்து வருகின்றார்!

தைப்பிங் இந்து வாலிப சங்க தமிழ்ப்பள்ளி பெற்றோர் - ஆசிரியர் சங்கத் தலைவராகவும் பரிணமிக்கின்றார்!

அவருக்குக் கிடைத்த பூமாலைகள் - பொன்னாடைகள் - நினைவுப் பரிசுகள் அதிகம்! இருப்பினும் மக்கள் மத்தியிலே அடக்கமாக - பணிவாக - எளிமையாக காட்சி தரும் அழகே அழகுதான்!

61 - வயது நிறைந்த நல்லார் - பெரியார் - நாடு போற்றும் நல்லவர் - சமயக் காவலர் எனது நெஞ்சில் மட்டுமல்ல; மக்களின் நெஞ்சங்களிலும் நிறைந்த தமிழ்த் தொண்டாற்றி வருபவர்.

"நல்ல மனமும் - தியாக எண்ணங் களும் சமுதாய உணர்வும் - சமய உணர்வும் இலக்கிய ஆர்வமும் இனிய பண்புகளும் நிறைந்த அன்பின் பாசறை - அழகுமிகு தைப்பிங் நகரில் வலம் வரும் தமிழ்த் தென்றல் "தொண்டர் மணி" திரு. செ. கணபதி அவர்களின் அரிய சேவைகளுக்கு தைப்பிங் தமிழ் மக்களின் சார்பில் ஒரு பெரிய பாராட்டு மலர் மாலை என்றும் இவருக்கு உண்டு" என்று கூறி பணிவாக முடிக்கின் றேன், வணக்கம் வாழ்க!



எஸ்.பி.எம்., எஸ்.டி.பி.எம். தேர்ச்சி பெற்ற மாணவர்களுடன் பெற்றோர்களும்.

www.padippakam.com



# வள்ளலார் காட்டிய வாழ்க்கை நெறி

**(ஜே. அறிவு)**

**அருட்பெருஞ் சோதி அருட் பெருஞ்சோதி**
**தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்சோதி**

**5-ம் பாடல்**

**எய்வகை சார் மதங்களிலே பொய் வகைச்**
**சாத்திரங்கள்**
**எடுத்துரைத்தே எமது தெய்வம்**
**எமது தெய்வம் என்று**
**கைவகையே கதறுகின்றீர் தெய்வம் ஒன்று**
**என்று அறியீர்**
**கரிபிடித்துக் கலகமிட்ட பெரியரினும் பெரியீர்**
**ஐவகைய பூத உடம்பழிந்திடில் என்புரிவீர்**
**அழி உடம்பை அழியாமை ஆக்கும் வகை**
**அறியீர்**
**உய்வகை என் தனித் தந்தை வருகின்ற**
**தருணம்**
**உற்றது இவண் உற்றிடுவீர் பெற்றிடுவீர்**
**உவப்பே.**

ஒரு யானையை சில குருடர்கள் தடவிப் பார்த்து ஒரு கலக்கத்தையை உண்டுபண்ணிவிட்டார்கள். காதைத் தொட்டவன் முறம் போன்றது யானை என்றான். காலைப் பிடித்தவன் தூண் போன்றது என்றான். துதிக்கையைப் பிடித்தவன் உலக்கைப் போன்றது என்றான். அதுபோல சமய குருமார்கள் தங்கள் கற்பனைக்கு எட்டிய அளவில் பொய்யான சாத்திரங்களை, புராணங்களை கைவந்த கலையாக உருவாக்கினார்கள். பல தெய்வங்களை உருவாக்கி சம்பிரதாய சடங்குகளை, அபிஷேக ஆராதனைகளை ஏமாற்றும் நிலையில் ஏற்படுத்தினார்கள். அப்படி நம்பி நடந்தால் முத்தி என ஆசை காட்டினார்கள். எதிர்த்துக் கேட்டால் நரகம் என்றும் அச்சம் மூட்டினார்கள். பல தெய்வ வழிபாட்டால், சச்சரவு சண்டைகள் ஏற்பட்டு மாண்டார்களே தவிர ஆன்ம நேயத்தோடு வாழவில்லை.

அருட்பெருஞ் சோதி ஆண்டவர் ஒருவரே என்ற நிலைக்கு வருகிற தருணம் ஆண்டவர் வருகிற தருணமாகும். சமய, மத, சாத்திர பேதங்களை எல்லாம் கைவிட்டு நாம் எல்லாம் ஆன்மநேயத்தோடு வாழ வருகிற தருணமே ஆண்டவர் வருதருணமாகும். ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற முடிவிற்கு வர வேண்டும். ஆகாயம் காற்று, நெருப்பு, நீர், மண் போன்ற ஐம்பூதங்களால் ஆனது உலகம். பெறுதற் கரிய இம்மனித பிறப்பு ஐம்பூதங் களாலும் ஐம்பொறிகளாலும் ஆனது. ஊன உடம்பே ஒளி உடம்பாதல் அழியாத நிலை. உயிருள் யாம் எம்முள் உயிர் என்ற நிலையில் இருக்கும் ஆண்டவரின் அருளைப் பெற உயிர்நலப் பணியில் தீவிரமாக இறங்க வேண்டும். அதுவே நம்மை உய்ய வைக்கும். பேரின்பப் பெருவாழ்வை பெற செய்யும்.


**6-ம் பாடல்**

**உடம்பு வருவகை அறியீர் உயிர்வகையை**
**அறியீர்**
**உடல் பருக்க உண்டு நிதம் உறங்குதற்கே**
**அறிவீர்**
**மடம்புத பேய் மனத்தாலே மயங்குகின்றீர்**
**மனத்தை**
**வசப்படுத்தீர் வசப்படுத்தும் வழி**
**துறை கற்றறியீர்**
**இடம்பெறு பொய் வாழ்க்கையிலே**
**இன்ப துன்பம் அடுத்தே**
**எண்ணி எண்ணி இளைக்கின்றீர்**
**ஏழை உலகீரே**
**நடம்புரி என்தனித்தந்தை**
**வருகின்ற தருணம்**
**நண்ணியது நண்ணுமினோ**
**புண்ணியம் சார்வீரே.**

உயிர்வகை, உடல்வகை என்பது தாவரம், ஊர்வன, பறப்பன, நீந்துவன, மிருகம், மனிதன், மாமனிதன் போன்ற உடல் களில் விளங்கும் உயிர்கள். முன்செய்த நல்வினை, தீவினைகளுக்கு ஏற்ப சிலர் வசதியோடும், சிலர் வசதியற்றும் வாழ்கின்றனர். இருவர் வாழ்க் கையிலும் இன்ப துன்பங்கள் அடுத்தடுத்து வருகின்றன. ஆண்டவரும் உயிர்களை திருத்தவே மறக் கருணையை கையாள்கிறார். அணுவுள் அமைந்த பேரொளி யாக இருக்கிறார். அருட் பெருஞ் ஜோதி ஆண்டவர். உள் ஒளியாக ஒவ் வொரு உயிரிலும் இருந்து இயங்கு கிறார். ஆகவே உடல் பொருள், ஆவி கொடுத்த வரும் அவரே ஆகிறார்.

தினமும் தவறாமல் செய்யும் காரியம் உண்ணுவது, உறங்குவது.

இதுதான் நீங்கள் அறிந்து கொண்டீர் கள். மிருகங்களைட் போல வயிறு புடைக்க உண்டு, பெண்ணாசை சிற்றின் பத்தில் ஈடுபட்டு இனத்தைப் பெருக்கிக் கொள் வதும் தூங்குவதுமாக இருக்கிறீர்கள். வசதியோடு வாழ மண், பெண், பொன் ஆசையிலே மயங்கி மூழ்கி பேயாக அலைகிறீர்கள். இது அறியாமை செயலே, மனப் பேயை வசப்படுத்த வழி சான்றோர் காட்டிய சன்மார்க்கத்தில் ஈடுபடுவதுதான். மூவாசையினால் உங்கள் வாழ்க்கையில் பொய்யான நிலையற்றவைகளுக்கு முதலிடம் தருகிறீர்கள். பொய் பேசுகிறீர்கள். இதனால் முதலில் சிறு இன்பமும் அடுத்து துன்பமும் மாறிமாறி வருகின்றன. இவற்றை நினைத்து நினைத்து உள்ளம், உடல் சோர்வடைகின்றன. இளைக்கின்றன. எல்லாவற்றிற்கும் காரணமான இறைவனை மறப்பது அறிவற்ற செயலாகும். எல்லா உயிரிலும் உள் ஒளியாக ஆண்டவர் உள்ளதால், உயிர்களுக்கு உம்மால் இயன்ற உபகரணங்களைச் செய்து பசிதவிர்த்தல் போன்ற ஜீவகாருண்ய செயலை செய்வதுதான் அருளைப் பெறும் வழி. அப்புண்ணிய செயலால் உள் ஒளி ஓங்கும்,




திருநடம் புரியும். குழந்தைகள் நல்லகாரியங்களை செய்யும் போது பெற்றோர்கள் இன்ப கூத்தாடுவதுபோல இறைவன் நடம்புரிகிற செயல் நடைபெறும். இதுவே இறைவன் வருகிற தருணம். நீங்கள் ஏற்றம் பெறும் தருணமாகும்.

**7-ம் பாடல்**

**நரைமரண மூப்பு அறியா நல்ல**
**உடம்பினரே**
**நற்குலத்தார் என அறியீர் நானிலத்தீர்**
**நீவிர்**
**வரையில் உயர்குலம் என்றும் தாழ்ந்த**
**குலம் என்றும்**
**வதுக்கின்றீர் இருகுலமும் மாண்டிடக்**
**காண்கின்றீர்**
**புரையுறு நும் குலங்கள் எலாம் புழுக்குலம்**
**என்று அறிந்தே.**
**புத்அமுதம் உண்டு ஓங்கும் புனித குலம்**
**பெறவே**
**உரைபெறும் என் தனித் தந்தை வருகின்**
**தருணம்**
**உற்றது இவண் உற்றிடுவீர் உண்மை**
**உரைத்தேனே.**

உலகில் இதுவரையில் கண்ட என்ன? பிறப்பால் உயர்ந் குலம் (சாதி) என்றும், தாழ்ந் குலம் என்றும் வேதங்களி வகுத்துக் காட்டினார்கள் இவ்விரு குலத்தினரும் வகுத் பெரியோர்களும், சாதாரன புழுக்கள் இறப்பது போலவே இறந்து போனதை கண்டீர்கள் மூட நம்பிக்கையினை பழக்கவழக்கங்களை அறியாமையை வளர்க்க, பிறன வஞ்சிக்க உருவாக்கியதுதா கற்பனை கலைகளா கி வேதங்களாகும், சாதி, குல சமயம், மதம் போன் பேதங்களை உருவாக் போரிட்டு இறக்கத்தா பயன்பட்டது. அமைதியை ஆன்மநேயத் தைக் குலைத்த பிறப்பால் உயர்ந்த சாதியின துன்மார்க்க செயல்களை செய்தாலும், உயர்ந்தவர்கே பிறப்பால் தாழ்ந்த சாதியின சன்மார்க்க செயலை செய்தாலும் தாழ்ந்த வர்கே என வகுக்கப்பட்டுள் ள புரையோடிய உலுத்துப் போ கருத்துக்களே மேலோங் உள்ளது.

இவண் உற்றிடு என்பது சுத்த சன்மார்க்கத்த சார்ந்து விடுங்கள் என்பதுதா சத் தான, சத்தியமான, நெறிகள கூறப்படுகின்ற இடம் சன் மார்க்கமாகு ஆன்ம நேயத்தை வளர்க்க எல்லோரு இன்புற்றிருக்க செய் கொள்கையுடையது சன்மார்க்கமாகு உரைபெறும் என் தனித்தந்தை என்ப ஆண்டவர் கூற நான் எழுதினேன். எ விளங்கு கிறது. நான் உரைக்கும் வார்த்தை எலாம் நாயகன் தன் வார்த்தை என்கிற இவ்வுரை கள்படி ஜீவகாருண்ய செயல கடைப்பிடிக்கிற தருணமே இறை வருதருணமாகும். உயிர் நலத்தொண் செய்யும் போது உள் ஒளி ஓங்கும். ப மண்டலத்திலிருந்து புத் அமுது சுரக் உண்டு மகிழ்வர். அவரே நரை திரை மூ மரணம் அற்றவர்கள். ஊன் உடம்பே ஒ உடம்பாக மாறும் நிலையினரே புன குலத்தினர். நற்குலத்தார். தாமும் வாழ்ந்து பிறர் இடுக்கண்களைப் போக் வாழ செய்பவர்கள்.

## எழுத்தாளர்கள் கலந்துகொள்ள அன்பு வேண்டுகோள்!
## சிறந்த சிறுகதைகளுக்கு உயர்வோமின் பரிசளிப்புத் திட்டம்!

**திங்கள் தோறும் ஓராண்டுகளில் வெளியாகும் சிறந்த சிறுகதைகளென நடுவர்களால் தேர்வு செய்யப்படும் 16 படைப்புகளுக்கும் முதலாம் - இரண்டாம் - மூன்றாம் மற்றும் ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்!**

**ஓராண்டுகளில் வெளியாகி தேர்வு செய்யப்படும் பதினாறு சிறுகதைகளையும் தொகுத்துப் புத்தகமாக வெளியிடப்படும்.**

**1.2.02 லிருந்து தொடங்கும் இத்திட்டம் அடுத்தாண்டு மார்ச் 03-ஆம் ஆண்டுக்குட்பட்டதாக இருக்கும். புத்தக வெளியீட்டின் போது முறையே முதல் பரிசுக்கு RM 1000/= ; இரண்டாம் பரிசுக்கு ரிங்கிட் RM 750/= மூன்றாம் பரிசு RM 500/= ஆகவும் மற்றும் சிறுகதைகளுக்கு RM 100/= ம் வழங்கப்படுவதோடு, சிறப்பிக்கவும்படுவர்;**

**சிறுகதைத் தொகுப்பில் இடம் பெறும் அனைவருக்கும் தலா 20 புத்தகங்கள் வழங்கப்படும்.**

**நல்ல முற்போக்கான சிந்தனைகளைக் கொண்டு எழுதப்படும் சிறுகதைகளுக்கே வாய்ப்புகள் அதிகம் உண்டு.**

**8 பக்கங்களுக்கு மேற்போகாமல் முழுப்பக்கத்தாளில் அடித்தல் திருத்தல் பிழையின்றி உண்மையானப் பெயரையும் முகவரியையும் தனித்தாளில் எழுதி இருக்க வேண்டும்.**

**அனுப்ப வேண்டிய முகவரி**

**ஆசிரியர், உயர்வோம்**
**NO. 34 B, JALAN**
**PETALING UTAMA 9,**
**OFF**
**JALAN KLANG LAMA**
**BATU 7,**
**46000 PETALING JAYA**
**SELANGOR D.E.**

www.padippakam.com



# வழிதவறும் தாய்க்குலம்

அன்று மாலை நேரம்

மணி ஐந்து இருக்கும்

டீ நேரம்

அது ஒன்றுதான் எனக்கிருக்கும் கெட்டப்பழக்கம். அந்த நேரத்துக்கு அதைப் போடலன்னா பைத்தியமா இருக்கும். அப்படித்தான் ரொம்ப நாளாக நினைத்துக் கொண்டிருந்தேன்.

ஆனால், டீ குடித்தால் இருதயத்துக்கு நல்லதென்று ஏதோ ஒரு தாளிகையில் அண்மையில் படித்த ஞாபகம். அதனால் அதுவும் தீயப்பழக்கம் இல்லை என்ற முடிவுக்கு வந்ததால் டீ குடிப்பதில் இன்னும் வேகம் அதிகமாகியது.

சாலையைத் தாண்ட் தவிக்கிறேன். வாகனங்கள் நகர்ந்து கொண்டிருந்தன. அதற்கிடையே மோட்டார் சைக்கிள்கள் கார்களைவிட இது ஆபத்து என மனம் சொல்லிக் கொள்கிறது.

எப்படியோ சாலையைக் கடந்து விட்டேன். ஒரு சாதனை போல என்னுள் ஒரு தெம்பு.

அடுத்தக் கடை வீதியில் நின்று அங்கு இருக்கும் ஓர் ஓட்டலைக் கடந்து ஒரு சந்து வழியில் நுழைந்தால் அங்குதான் டீசால் இருக்கிறது. டீ பைத்தியம் நடையில் வேகம் காட்டியது.

என்ன ஆச்சரியம்!

மனம் திக்கென்றது.

கண்கள் அகல விரிந்தன.

ஆணும் பெண்ணும் ஒரு இளஞ் ஜோடி.

என் நடை வேகத்தை மெதுவாக் கியது.

ஓட்டலில் இருந்து கீழே இறங்கி வந்தவர்கள் என் வழியைக் குறுக்கிட்டார்கள்.

நன்றாகப் பார்த்தேன்.

அன்று பேருந்தியில் பார்த்தேனே! டிரைவர், டியூசன் மாணவி - அவர்கள்தான். பின்புறம் ஓட்டலில் பின்புறமாக யாருக்கும் தெரியாமல் போகின்றார்கள் போலும்.

அவர்களின் உருட்டு விழியும் திருட்டுப் பார்வையும் கருவாட்டுப் பூனைகளின் புத்தியை அப்படியே படம் பிடித்துக் காட்டின.

என்னைத் தெரிந்து கொள்ள நியாயமே இல்லை. யாரும் பார்த்துவிடக் கூடாதென்று பயந்து கொண்டு அரக்கப் பரக்க ஓடுகின்றவர்கள் எதையும் நிதானிக்க நேரம் ஏது?

இந்த நாய்களை இங்கேயுமா பார்க்கணும்... என் மனம் வேதனையில் வெறுக்கிறது.

அப்பொழுது திடீரென மழைக் கொட்டியது.

புறக்கடையில் குப்பைத் தொட்டிகள் கிடக்கும் பக்கமாக ஒதுங்கிக் கொண்டது



கள்.

நான் ஒரு டீக்கு ஆர்டர் கொடுத்து விட்டு நாற்காலியில் அமர்ந்தேன்.

ஏறக்குறைய இரண்டு மாதம் இருக்கும். என் நண்பர் ஒருவர் என் வீடு தேடி வந்து திருமண அழைப்பிதழைக் கொடுத்து விட்டு, "நீங்களும் உங்கக் குடும்பமும் கண்டிப்பாகக் கலந்து கொள்ள வேணும்" என்று அன்பு வேண்டுகோள் விடுத்தனர்.

"நீங்க என்ன அப்படி சொல்றீங்க; நீங்கள் சொல்லியா வரணும், நீங்க வேறு, நாங்க வேறா? உங்க வீட்டுக் கல்யாணம் எங்க வீட்டுக் கல்யாணம் மாதிரி குடும்பத் தோடு வந்து விழுந்தற மாட்டோம்; நிச்ச யதார்த்தத்துக்குதான் வரல, இதுக்குமா வராம விட்டிடுவோம்..."

**செங்கதிர்**

"மிக்க.... மகிழ்ச்சி"

"சரி பொண்ணு அவங்க வீடெல்லாம் எப்படி?

"அருமையானக் குடும்பம், பெண்ணு அடக்க ஒடுக்கமானப் புள்ள, குனிந்த தலையை நிமிர்ந்து பார்க்காது. ஒரு தடவைக்குப் பலதடவை அக்கம் பக்கத்ல விசாரிச்சி, நாங்களும் நேரடியாப் பார்த்துத்தான் முடிவு செஞ்சோம்".

"அது சரி பையனுக்கு எப்படி?"

"பல எடத்ல பொண்ணு பார்த்தோம், உங்களுக்கும்தான் தெரியுமே! நீங்களும் தான் ரெண்டு இடம் பார்த்தீங்களே? இந்தப் பெண்ணுதான் அவனுக்குப் பிடிச்சி இருந்தது.கட்டன்னா இததான் கட்டிக்குவேன்னு ஒத்தக்கால்ல நின்னான்."

அதுகளுக்கு எது இஷ்டமோ! அதைத்தான் செஞ்சி வைக்கணும். நாளைக்கு வாழப் போறவங்க, அதுங்கல்ல,"

"பையன் தங்கமானவன். அதுக்கேத்த மாதிரி பொண்ணும் இருக்கணும்"

"நல்லபடியா போய்ட்டு வாங்க"

குடும்பத்தோடு போனோம். மண்டபத்தில் ஏற்பாடுகள் விமரிசையாக இருந்தது. மேள வாத்தியம் எடுப்பாக்கிக் கொண்டிருந்து. மணமகன் பெற்றோரும் உற்றோரும் வாங்க வாங்க வென்று அன்பொழுக வரவேற்றனர்.

தொடக்கத்தில் குறைவாக இருந்த கூட்டம் கொஞ்ச நேரத்தில் மளமளவென மண்டபம் நிறைந்து விட்டது. மாப்பிள்ளைக்கு முதல் மரியாதை செய்து உடைமாற்ற அனுப்பி வைத்தார் ஐயர்.

பெண்ணுக்கு அடுத்த மரியாதை. மணப்பெண் மணவறையில் அமர்ந்தாள்.

என் கண்கள் அந்தப் பெண்ணையே குத்திட்டன. எங்கேயோ பார்த்த நினைவு என் நெஞ்சை வருடியது. ஆனால் மனத்தில் ஊடுருவவில்லை.

கொஞ்ச நேரத்தில் முதல் கட்டம் முடிந்து மணமகன் மணமகள் கழுத்தில் தாலி கட்டப்போகும் படலாம்.

நாதஸ்வரத்தில் கெட்டி மேளம் காதைப் பிளந்தது. மஞ்சள் அரிசியை வாரி இரைத்தனர்.

ஒருவர் கையை ஒருவர் பற்றி அர சாணையை சுற்றி வலம் வரும் போதுதான்.

என் நினைவில் அந்த உண்மைப் புலப்பட்டது. அந்தப் பெண்ணு மாதிரி இல்ல இருக்கு" ஆமாம் அவள்தான், அவளேதான்!

என் உள்ளம் தணலாய்க் கொதித்தது.

என் நண்பனுடைய மகனுக்கு இந்தக் கதியா வரணும். அந்த கண நேரம் என் சிந்தனைகள் எதை எதையோ நினைத்து உரை போட்டது. இப்படியும் நடக்குதே என்று நெஞ்சுக்குள் குமுறிக் கொண்டு இந்த அசிங்கத்தை யாரிடம் சொல்வது; அப்படி சொல்வது நல்லதல்லவே! என் என்னுள் ஏற்பட்ட மனப் போராட்டத்தை அடக்கிக் கொண்டு எப்படியோ இனிமேலாவது ஒழுங்கா வாழ்ந்தாலே போதும் என்று அமைதியானேன்.

மணமகன் பெற்றோர் சாப்பிட்டுத்தான் போக வேண்டுமெனக் கட்டாயப்படுத்தினர். அவர்களுடைய அன்புக்கு மதிப்பளித்துவிட்டு மறுபடியும் உற்றுப் பார்த்தேன். அவளேதான், அவளேதான்! பத்தினித்தனம் ரொம்பப் பிரமாதமாக இருந்தது. விடைபெற்றுக் கொண்ட போது, என்னால் இந்தப் பெண்ணுக்கு எந்தவிதமான இடையூறும் ஏற்படக் கூடாதென உள்ளத்தில் உறுதி எடுத்துக் கொண்டேன்.

ஒரு மாதம் கழித்து அந்தப் பேருந்து நிலையத்தில் கேள்விப்படுகிறேன்.

பேருந்து டிரைவரும் அந்தப் பெண்ணும் ஓடி விட்டார்கள் என்று.

உண்மையா? பொய்யா? என தெரிந்து கொள்ள ஆவலாக இருந்த போது,

ஒரு நாள் மணமகன் தந்தை என் வீடு தேடி வந்து அவர் குடும்பத்துக்கு உண்டான தலைகுனிவையும் அவமானத்தையும் வேதனையுடன் சொன்னார்.

அவருக்கு ஏற்பட்டிருந்த வேதனையில் நானும் பங்கு எடுத்துக் கொண்டேன்.

ஆனால் என் உள்ளம் மட்டும் அட தாய்க்குலமே! தாய்க்குலமே என கடல் அலையைப் போல ஆர்ப்பரித்தது.

---

(24-ம் பக்கத் தொடர்ச்சி)

கழகத் தலைவர் கே. ஆர். சாமியும், தே.தோ.தொ. சங்கத்தின் னாள் பணியாற்றிய ந. லெட்சுமணன் ிய வராவர்.

அவர்கள் இருவரின் பெயரிலேயே ா எழுதிக் கொண்டனர். அந்த மையை வைத்துக் கொண்டு, டுடைமைத் திட்டம் தொடங்கப் வதாக அறிவிக்கப்பட்டது. அதன் முதல் _ மாக (டெவலப்பர்) வீடு கட்டுமானத் றயினரிடம் கொடுக்கப்பட்டதாக வும் ரப்பாகப் பேசப்பட்டது.

ஒரு இடைவெளிக்குப் பிறகு அதைப் ிய பேச்சே எழவில்லை. நாட்கள் லச் செல்ல அதைப் பற்றிய விபரங்கள் ரிவரத் தொடங்கின.

வீடமைப்பாளரிடம் கே.ஆர். ராமசாமி லெட்சுமணனும் முன்பணம் வாங்கிக் ண்டு எழுதிக் கொடுத்து விட்டதாக த் தகுந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

அவ்விருவரும் சேர்ந்து மேவா ார்டன்காரர்களிடம் பணம் வாங்கிக் ண்டு எழுதிக் கொடுத்திருப்பதாகவும் னொரு நம்பத் தகுந்த வட்டாரங்கள் கின்றன. மேலும் தாமதமாக வந்த தி கூறுவதாவது; கே. ஆர். ராமசாமி ட்சுமணனும் இதே நிலக்கைக் காட்டி இன்னும் ஒரு சிலரிடமும் பணம் வாங்கியிருப்பதாகவும் நிலத்தின் மேல் பலர் கேவியட் போட்டிருக்கின்ற உண்மையும் தெரிய வருகிறது.

இவற்றுக்கெல்லாம் மேலாக கே.ஆர். இறந்துவிட்டதால் அந்த நிலம் கே. ஆர். மகன் அன்பழகன் உரிமைக் கொண்டாடுவதாக தகவல்கள் வருகின்றன. 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் இதுவரை எந்தவித மாற்றமும் இல்லாமல் இழுபறி நிலையில்தான் இருந்து வருகிறது.

திராவிடர் கழகத்தையும் அதன் முன்னாள் தலைவர் கே.ஆர். ராமசாமியையும் நம்பி பங்கு வாங்கிய பங்குதாரர்கள் வாய்ப்பொத்தி கை பிசைந்து உள்ளம் கொதிப்படைந்து இருக்கின்றனர்.

தே.தோ. தொழிற் சங்கத்தில் பணியாற்றிவந்த ந. இலட்சுமணனையும், கே.ஆரையும் நம்பியதால் ஏற்பட்ட இழப்பு என பரவலாக வயிற்றெரிச்சலுடன் பேசிக் கொள்கின்றனர்.

நூற்றுக்கு மேற்பட்ட பங்குதாரர்களில் சிலருடைய முகவரி இல்லாமல் இருக்கிறது. ஒரு சிலர் இறந்தும் போயினர். மீதம் இருக்கின்றவர்களிடையேயும் ஒற்றுமையின்றி இருபிரிவினர்களாக இருக்கின்றர்.


இவ்வாறான சூழ்நிலையில் திராவிடர் கழகத்தின் தேசியத் தலைவர் ரெ.சு. முத்தையா இதில் தலையிட வேண்டும் என பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர். அதற்கு அவர்கள் கூறும் காரணங்கள் நியாயமாக இருக்கின்றன. அவர்தான் கே.ஆர். ராமசாமி காலத்தி லிருந்து பொறுப்பில் இருந்து வருகின்றார்.

திராவிடர் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற எல்லா திட்டங்களுக்கும் ரெ.சு. முத்தையா அவர்கள் துணையாக இருந்திருக்கின்றார் என்பதால், அதைப் பற்றி அன்றைய தேசியப் பொறுச் செயலாளர் என்ற முறையிலும் இன்றைய தேசியத் தலைவர் என்ற முறையிலும் தன்னிலை விளக்கம் தர வேண்டும் என கழக உறுப்பினர்களும் பங்குதாரர்களும் பெரிதும் எதிர்பார்க்கின்றனர்.

திராவிடர் கழகத்தால் தொடங்கப்பட்ட எல்லா செயல்பாடுகளுமே தோல்வியில் முடிந்துள்ளதால், பகுத்தறிவுக் கொள்கைக்கு பேரிடியாகவும் அதன் வளர்ச்சிக்குத் தொய்வும் ஏற்பட்டுள்ளதான் இனியும் அந்நிலையைத் தொடர விடாமல் சீரமைப்பு செய்யவும் மக்களுக்கு உண் மையை விளக்கவும் , பங்குதாரர் களுக்கு உரிய பங்கினை பெற்றுத்தரவும் வேண்டும்.

அப்போதுதான் கழகத்தின் மீது பொதுமக்களுக்கு ஒரு நல்ல தோற்றத்தையும் நம்பிக்கையையும் உண்டாக்கும் என்பது அடியேனின் தாழ்மையான வேண்டுகோள்.

**இ. தென்னவன்,**
**காஜாங்.**



**"டாக்டர்.. நீங்க ஊசி போட்ட அப்புறம் கையை அசைக்கவே முடியலை..."**

**"கவலைப்படாதீங்க... எந்த பாக்கெட்டுல பணம் வெச்சிக் கீங்கன்னு சொல்லுங்க... நானே கையைவிட்டு எடுத்துக்கறேன்!"**

படிப்பகம்

www.padippakam.com



# பாவரங்கம்

## வெட்கக் கேடு!

கணமொரு மாற்றங் காட்டும்
கவின்மிகு மலேசி யத்தில்
எனக்கொரு வேலை யில்லை
என்பதேன்? வெட்கக் கேடு...?

சுற்றுலா இடங்கள் இங்கே
சொர்க்கமாய்ச் சிரிக்கப் பார்த்துச்
சொக்கிட இடமே தென்று
சொல்வதேன்? வெட்கக்கேடு...?

திறன்களை வெளிப்ப டுத்தும்
தேவைகள் இருக்கக் கண்டும்
மரமென வானை நோக்கி
வாழ்வதேன்? வெட்கக் கேடு...?

திருத்தமாய்ப் பயணம் போட
சீர்மிகு வழியி ருந்தும்
சறுக்கிடும் வழியில் சென்று
சாய்வதேன்? வெட்கக் கேடு...?

வாட்டிடும் வறுமை யோட்ட
வசதிகள் மிகுந்தி ருந்தும்
சாத்திரப் பொய்யை நம்பி
தாழ்வதேன்? வெட்கக் கேடு...!

-ம.அ. சந்திரன்,
தாசெக், குளுகோர்.

## போற்றுடா தாய்மொழிக் கல்வி

செந்தமிழ்க் கல்வியை
இகழ்பவன்
செந்தமிழர் வழி
வந்தவனா?

தன்மானம் இனமானம் -
தூயத்தமிழர் மொழிமானம்
காக்காத வீணர்கள்,
தென்னவரின் மரபுதானா?

ஆரிய மொழியையும்
ஆங்கில நெறியையும்
போற்றுபவன்
தமிழன்தானா...?

தேவைக்குத்தானே
பிறமொழிகள் வேண்டும்
நம் தேசத்தில்
அதுவே
மெய்ப்பொருள் ஆவதா...?

தேய்பிறையாகுதே
தமிழ்மொழிக் கல்வி
தஞ்சம் கோறுவது
தமிழாகலாமா...?

தேங்கிடும் நீரிலே
நீந்தவா முடியும்
ஏற்றுடா
நெஞ்சில் வேள்வி
தமிழா
போற்றுடா
தாய்மொழிக் கல்வி...!

-செ. குணாளன்,
பட்டர்வொர்த்

## சாதியிலே மகிழ்ச்சி காணும் தமிழ்ச்சாதி

சாதிக்கொரு காட்சியைத்தான் சார்ந்திந்த நாட்டிலும்தான்
மோதுகின்ற மூடர்களை முடக்கினால்தான் உருப்படுவோம்

காட்சிகளை ஒழித்துவொரு கட்சியாக நிமிர்ந்துநின்றால்
மெச்சுகின்ற நிலைவளரும் மேன்மையுறும் தமிழினம்தான்.

சாதிகளும் கட்சிகளும் தமிழினத்தை இங்கேயும்
வீதிநாய்க ளாக்குவதை விளங்கிடாமல் திரிவதும்ஏன்?

சாதிப்பற்று னால்தானே தமிழனேநீ, நிலைமிழந்து
வீதிநாய்போல் கேவலமாய் விளங்குகிறாய் உணர்ந்திடடா,

சீரழிந்த சாதியைநீ சார்ந்தின்னும் வாழ்வதும்ஏன்?
ஊரழிந்த கதையறிந்தும் உனையிழித்துக் கொள்கின்றாய்

சாதிப்பற்றி பேசுவான்தான் தாழ்ந்துஇழி பிறவியாவான்
வீதியிலே திரிகின்ற விலைமாந்தப் பிறப்பாவான்

தமிழினத்தைக் கூறுபோம் சாதிவெறி விட்டால்தான்
தமிழினத்தின் பழம்பெருமை தனிமீட்சி பெற்றுயரும்

சாதிசாதி என்றுபேசி நாய்களிலும் கேவலமாய்
மோதுகின்ற நிலைவிட்டால் மேன்மையுறு வாய்நாட்டில்

சாதிஉன்னை உயர்த்திடாது தமிழ்மகனே உணர்ந்தெழுந்து
சாதியைநீ புரட்டிஎடு சரித்துவிடு அதன்திமிரை

சாதி பற்றி பேசுவோனின் தலையைமண்ணில் உருட்டிவிடு
வீதிதோறும் இழுத்தடித்து விதிமாற்ற வினையாற்று

சாதியைநீ விட்டொழித்தால் தானேநீ உருப்படுவாய்
சாதியினால் வீழ்ந்தபின்னும் சகதிப்புழு வாவதுஏன்?

பெருயாரைப் பற்றிஎழு பெருஞ்சாதி திமிர்ஒடுக்கு
நரியாரின் செயலறுக்க நாளும்பகுத் தறிவைநாடு.

நான்தமிழன் எனநாளும் நடுங்காமல் நெஞ்சுயர்த்து
வீண்சாதிப் பற்றொழித்து வினையாற்று என்றென்றும்

செத்துப்போன சாதியிங்கே பிறப்பெடுத்தே சிரிக்குதடா
நத்துகின்றாய் சாதியைநீ நாசமாகிப் போவதற்கே.

என்னசாதி நீ என்றால் தமிழ்ச்சாதி என்றிடடா
இன்றுமுதல் நீ தமிழன் என்றஉணர்வு கொள்ளடா.

-தமிழீட்டி, மலையகம்

## பெரியார் உலகப் பெரியார்!

முத்தமிழ் மூன்றும்
மூச்சை இயக்கும்
பற்றெனக் கொண்டு விட்டேன்! - தமிழ்ப்
பகைவனைத் துணிந்து வெல்வேன்..!

பாரதி யாரை
பாரதி தாசனை
தீரமாய்த் தழுவி விட்டேன்! - கவிதை
தீட்டியே மடமை கொல்வேன்...!

வள்ளுவன் இளங்கோ
வழங்கிய தமிழினால்
வல்லமை அதிகம் அடைந்தேன்!-மடமை
வாதிகள் கொட்டம் முடிப்பேன்...!

பெரியார் அண்ணா
பேச்சால் எழுத்தால்
அறிவில் தெளிவு நிறைந்தேன்! - ஆரிய
ஆட்டம் விரைவில் தொலைப்பேன்...!

நாணும் அச்சம்
நாய்களுக் கென்றவன்
மானப் பாட்டால் விழித்தேன்!
- பெண்ணை
வதைக்கும் சடங்கை எரிப்பேன்...!

குடும்ப விளக்கில்
கோதையர் எழவழிக்
கொடுத்த கவிஞனால் எழுந்தேன்! மூடக்
கூட்டம் விழிஅடிக் கொடுப்பேன்...!

அரிவை விடுதலை
அடையபோ ராடிய
பெரியார் மகளாய்ப் பிறந்தேன்! - அவர்
பேரைக் காத்துச் சிறப்பேன்...!

என்றே முழங்கிடும்
இந்தப் புரட்சிப்
பெண்ணில் வாழ்கிறார் பெரியார்!
- எங்கள்
பெரியார் உலகப் பெரியார்...!

-ம.அ. சந்திரன்,
தாசெக், குளுகோர்.

## ஏன் இந்தக் கொடுமை

முகிபா நல் உணர்வை
போற்றிப் பேண எண்ணி
முகம்மது வீட்டு உணவை
மிச்சம் மீதி இன்றி
தின்று முடித்து விட்டு
ஆ சோங் வீட்டு மீயை
ருசிப் பார்த்த போது
ஜாதி உணர்வு இல்லை
ஏன் வந்து விடுகிறது
அந்த தீய கொடுமை
சாமி ராமு வீட்டு
விருந் தோம்பல் என்றால்?

-டாக்டர்
எஸ். சுப்பிரமணியம்

## மடமையில் வீழ்ந்து மதியிழக்கின்றனர்!

சாதிவெறி பிடித்தலையும் தறுதலைகள் தான்நாட்டில்
சாதிவழிச் சங்கங்கள் சமைக்கின்றார் மடமையினால்
வீதிநாய்கள் விளையாடும் குப்பைமேடு போலானார்
விளைந்ததமிழ் இனங்கெடுக்க விரைகின்றார் மதிகெட்டே

சாதிக்கொரு சங்கமென சமைக்கின்ற மூடர்களை
சாய்க்காத வரைதமிழன் தலைநிமிர்ந்தே எழமாட்டான்
சாதியைநாம் சரிக்காமல் நான்தமிழன் என்றுதலை
சாயாமல் நிமிர்ந்தாலும் சாதியினால் சீரழிவாய்.

நான்தமிழன் என்சாதி தமிழென்றே நினைத்தால்தான்
நல்லவழி தமிழனுக்கு நாளுமிங்கே பிறந்துவரும்
ஆண்சாதி பெண்சாதி ஆகஇரண் டேசாதி
ஆன்றோர்தம் வாக்கைநீ ஆறறிவில் வைத்தெழடா.

மலந்தின்னும் பன்றிகளாய் மாறுகின்றார் சாதியினால்
மாந்தநேயப் பண்பிழி(த்)ந்தே மாள்கின்றார் தமிழினத்தின்
குலப்பெருமை மானத்தைக் குழிதோண்டிப் புதைக்கின்றார்
குணங்கெட்டார் சமுதாயக் குண்டராவார் கொடுமதியர்

வெறிப்பிடித்த மிருகமென வீணலைந்து கெடுகின்றார்
வெற்றிபெறும் நிலைமறந்து விதியைநம்பி மாள்கின்றார்
அறிவிருந்தும் தேறிடாமல் அழிவைநாடி வீழ்கின்றார்
ஆணவத்தால் நெறிபிறழ்ந்து அடிமைநாய்க ளாகின்றார்

சாதியுணர்வை வளர்த்துதன்னைச் சாணியாக்கிக் கொள்கின்றார்
வீதிச்சேற்றில் புரளும்நாயாய் வீணில்வாழ்ந்து கெடுகின்றார்
நாதியற்ற இனமெனவே நாட்டிலிழிந்து வாழ்கின்றார்
நன்னெறிகள் மறந்துவாழ்வை நாசமாக்கிச் சிதைக்கின்றார்

அறிவிருந்தும் மழுங்கலாகி அழிவைத்தேடிச் செல்கின்றார்
ஆணவத்தை நெஞ்சிலேற்றி அறிவைமாய்த்துக் கொள்கின்றார்
அறிந்ததமிழ் நெறிமறந்து அடக்கமின்றி கெடுகின்றார்
ஆறறிவும் கெட்டுமூடப் பாதையில்தான் செல்கின்றார்

கடவுளையே நம்பிநம்பி களைகளாக வளர்கின்றார்
கற்பனையே உண்மையென்று நம்பிமுட்டா ளாகின்றார்
மடமையினால் மதியிழந்து மண்புழுவாய் நெளிகின்றார்
மமதையினால் மானங்கெட்டு மரமெனவே வளர்கின்றார்.

(மலேசியன்

∴ கனத்தால் சிரிக்கிறாள்
குறைந்தால் சிணுங்குகிறாள்
காதலி (பணம்)

∴ வாக்கும் தேடுவார்கள்
வத்தியும் வைப்பார்கள்
அரசியல்வாதிகள்

∴ கசிந்தேன்
கரைந்தேன்
ஏமாந்தேன்

∴தொண்டும் புரிவார்கள்
துண்டும் போடுவார்கள்
தொண்டர்கள்

∴ போதையும் ஏற்றுவாள்
பாதையும் மாற்றுவாள்
பரத்தை

∴மணியும் அடிப்பார்
மடியும் கரைப்பார்
புரோகிதர்

- வீர. இராமன்,
மாச்சாப்பு, ஜொகூர்.

∴ கடலே அசையாதே....
கொஞ்சம் முகம் பார்க்கிறேன்....
நிலவுப் பெண்!

-காயா

படிப்பகம்

www.padippakam.com



# இயற்கை மூலிகை உடலுக்கு வலிமை

### 5. அகத்தி

வெற்றிலைக் கொடி படர்வதற்காக் கொடிக்கால்களில் பயிரிடப்படும் சிறுமென் மரவகை. தமிழ்நாடு எங்கும் வளர்க்கப்படுகிறது. கீரை, பூ, பிஞ்சு ஆகியவை சமைத்து உண்ணப்படுகின்றன. இலை, பூ, வேர், பட்டை ஆகிய்வை மருத்துவப் பயனுடையவை.

பொதுவாக வெப்பு அகற்றியாகவும், கீரை மலமிளக்கியாகவும், வேர் உடல் பலம் தரும் மருந்தாகவும் பயன்படும்.

1. கீரையை வாரம் ஒரு முறை சமைத்து உண்ண ... அலைவதால் ஏற்படும் வெப்பம், மலச்சிக்கல், காபி, டீ, ... குடிப்பதால் ஏற்படும் பித்தம் ஆகியவை தீரும்.



2. அகத்தி மரப்பட்டையையும், வேர்ப்பட்டையையும் குடி நீராக்கிக் (அகத்திப்பட்டை குடிநீர்) குடித்துவர, சுரம், தாகம், கை கால் எரிவு, மார்பு எரிச்சல், உள்ளங்கால், உள்ளங்கை எரிச்சல், நீர்க்கடுப்பு, நீர்த்தாரை எரிவு, அமைச்சுரம் ஆகியவை தீரும்.



3. இலைச்சாறும் நல்லெண்ணையும் வகைக்கு 1 லிட்டர் கலந்து பதமுறக் காய்ச்சி வடிப்பதற்கு முன் கஸ்தூரி மஞ்சள், கார்போக அரிசி, விலாமிச்சம் ... கிரானி, கிச்சிலிக் கிழங்கு விளாமிச்சம் வகைக்கு 20 கிராம் தூள் செய்து போட்டுக் கலக்கி வடிகட்டி வாரம் ஒருமுறை தலையிலிட்டுக் குளித்து வரப்பித்தம் துணிந்து தலைவலி நீங்கும். கண்கள் குளிர்ச்சி பெறும்.

### 6. அவுரி (நீலி)

கறும்பச்சை இலைகளையுடைய செடியினம். நீலநிறச்சாறு உடைமையால் இதனால் நீலி எனவும் பெயர் பெறும். ... பாசாணங்களையும் கத்தி செய்ய ... இது இலை, வேர் ஆகியவை மருத்துவப் பயனுடையவை.

வேர் நஞ்சுமுறிக்கும் மருந்தாகவும், ..., வீக்கம், கட்டி முதலியவற்றை ...கவும் நஞ்சு முறிக்கவும் நோய் நீக்கி ... தேற்றியாகவும் மலமிளக்கியாகவும் ...ணர்ச்சி அளிக்கும் மருந்தாகவும் ...டும்.

1. அவுரி இலையைக் கொட்டைப் பாக்கு அளவு அரைத்து 250 மி.லி. வெள்ளாட்டுப்பாலில் கலக்கி வடிகட்டி அதிகாலையில் மூன்று நாள் கொடுக்க மஞ்சள் காமாலை. அந்திமாலை தீரும்.

2. அவிரிவேர் 20 கிராம், அறுகம்புல் 30 கிராம், மிளகு 3 கிராம் மையாய் அரைத்து புன்னைக்காய் அளவு காலை, மாலை சாப்பிட்டு இச்சா பத்தியம் இருக்க மருந்து வேகம் அனைத்தும் தீரும். இம்மருந்தை நாள் தோறும் 3 வேளை உப்பு. புளி நீக்கிச் சாப்பிடப் பாம்பு. தேள், பூரான், செய்யான் ஆகியவற்றின் நஞ்சு நீங்கும்.

3. அவுரிவேர் 20 கிராம், மிளகு 10 கிராம், அரைத்து சுண்டைக்காய் அளவு காலை, மாலையாய் 10 வேளை கொடுக்க எட்டி, வாளம், கலப்பைக் கிழங்கு, நாவி, அலரி வேர் ஆகியவற்றில் நஞ்சு தீரும்.

4. வேர் 20 கிராம் பெரேநெருஞ்சில் இலை 50 கிராம் அரைத்து எலுமிச்சை அளவு மோரில் கொடுக்க வெள்ளை தீரும்.

5. ஒரு பிடி இலை 2 சிட்டிகை சீரகம், 6 மிளகு ஆகியவற்றைச் சிதைத்து 1 லிட்டர் நீரில் போட்டு கால் விட்டராக்கி 2 முடக்கு வீதம் தினம் 4 வேளை கொடுக்க வாதக் காய்ச்சல், சன்னிக் காய்ச்சல், கீல் வாதம், குன்மம், மாந்தம், காமாலை தீரும்.

6. அவுரி இலை, வேர்ப்பட்டை, பொரித்த பெருங்காயம், மிளகு சமன் சேர்த்து அரைத்து சுண்டைக்காய் அளவு மாத்திரை செய்து (அவுரி மாத்திரை) ஒரு நாளைக்கு 3 வேளையாகக் கொடுத்து வர நரம்புச் சிலந்தி, ஓடு வாய்கட்டிகள், கீல்வாதம் ஆகியவை தீரும்.

7. அவுரி, கரிசலாங்கண்ணி, குப்பைமேனி, கொட்டைக்கரந்தை, மஞ்சள் கரிசராங்கண்ணி செருப்படை ஆகியவற் றின் இலைகளை சம அளவாக இடித்துப் பொடி செய்து (அவுரி கற்பம்) ஒரு தேக்கரண்டி தேனில் காலை, மாலை நாள் தோறும் 45 நாள்கள் சாப்பிட்டு வரப் பெண்களுக்கான உதிரக் கட்டு நீங்கும். வயிற்றுப் பூச்சிகள், பாம்பு நஞ்சு, மூட்டுவாதம் முதலியவை தீர்ந்து உடல் பொன்னிறமாகும். புகை, புளி, போகம் தவிர்க்க வேண்டும்.

### 7. அரசு

கூரிய இலைகளையுடைய பெருமரம். ஊர் ஏரி, குளக்கரைகளில் புனித மரமாக வளர்க்கப்படுகிறது. தமிழகம் எங்கும் காணப்படுகிறது. கொழுந்து, பட்டை, வேர், விதை ஆகியவை மருத்துவப் பயனுடை யவை.

கொழுந்து வெப்பு அகற்றித் தாகந் தணிப்பானாகவும், விதை காமம் பெருக்கியாகவும், வேர், பட்டை ஆகியவை வீக்கம் குறைக்கும் மருந்தாகவும் பயன்படும்.

1. துளிர் இலையை அரைத்துப் பற்றிடப் புண்கள் ஆறும்.

2. வேர்ப்பட்டை 30 கிராம் 300 மி.லி. நீரில் போட்டு 100 மி.லி.யாகக் காய்ச்சி பால், சர்க்கரை சேர்த்துப் பருகி வர வெட்டைச் சூடு, சொறி, தினவு, நீர் எரிச்சல், சிரங்கு ஆகியவை தீரும்.

3. மரப்பட்டைத் தூள் கருக்கித் தேங்காய் எண்ணெயில் கலந்து புண் சொறிகளுக்குப் பூசக் குணமாகும்.



4. பட்டைத் தூள் 2 சிட்டிகை 2 சிட்டிகை நீரில் ஊற வைத்து வடிகட்டிக் கொடுக்க விக்கல், தொண்டைக் கட்டு, குரல்வளை நோய் தீரும்.


5. அரசு விதைத் தூள் உயிர் அணுக்களைப் பெருக்கி ஆண் மலட்டை நீக்கும்.

6. அரசங் கொழுந்தை குடிநீராக்கிக் குடிக்க சுரம், தாகம் ஆகியவை தீரும்.

7. உலர்ந்த பழத்தை இடித்துப் பொடி செய்து 5 கிராம் வெந்நீரில் காலை, மாலை 20 நாள்கள் கொடுக்க சுவாசக் காசம் தீரும்.

### 8. அமுக்கரா

மாற்றடுக்கில் அமைந்த இலைகளையும் சிறுகிளைகளையும் உடைய ஐந்து அடிவரை வளரக் கூடிய குறஞ்செடிவகை. கோவையிலும் தென் மாவடட்ங்களில் சில இடங்களிலும் தானே வளர்வது, கிழங்கே மருத்துவப் பயனுடையது. ஏற்றுமதிப் பொருளாகப் பயிர் செய்யப்படுகிறது.



உலர்ந்த கிழங்குகள் மருந்துக் கடைகளில் கிடைக்கும். இக்கிழங்கு ஆயுர் வேதத்தில் அகவகந்தி என்றழைக்கப்படுகிறது. அகவகந்தி லேகியம், அசுவகந்தித் தைலம் ஆகியவை பெரும்பாலோர்க்கு அறிமுக மானதே.

நோய் நீக்கி உடல் தேற்றியாகவும், பித்த நீர்ப் பெருக்கியாகவும், குடல் தாதுவெப்பு அகற்றியாகவும், பசி உண்டாக் கியாகவும், காமம் பெருக்கியாகவும் செயற்படும்.

1. வேர்ச்சூரணம் 5 கிராம் தேனில் காலை, மாலை கொள்ளச் சளி கரைந்து (நிமோனியா) கபவாதச் சுரம் தீரும்.

2. சூரணத்தைப் பாலில் கலந்து வீக்கம், படுக்கைப் புண் ஆகியவற்றிற்குப் பூச ஆறும்.

3. வேர்ச்சூரணம் தூதுவேளை சமன் கலந்து 5 கிராம் நெய் அல்லது பால் அல்லது வெண்ணெயில் தினம், மூன்று வேளை பத்தியத்துடன் கொடுத்து வரச் சிலேத்துமக் காய்ச்சல் பக்கச்சூலைக் காய்ச்சல் (Plurasy) தீரும். நீண்ட நாள் கொடுக்க நீடித்த நோய்களுக்குப் பின் வரும் ஆயாசம் களைப்பு தீரும். பலவீனம், காது மந்தம் தோல் நோய் தீரும். (100-150 நாள்கள் சாப்பிடவும்)

4. அமுக்கரா சூரணம் 10 கிராம், கசகசா 30 கிராம், பாதாம் பருப்பு 10 கிராம், சாரப்பருப்பு 5 கிராம், பிஸ்தாப் பருப்பு 5 கிராம் ஊற வைத்துத் தோல் நீக்கி அரைத்து 200 மில்லி பாலில் கலந்து சர்க்கரைச் சேர்த்து வெறும் வயிற்றில் காலையில் மட்டும் 90 நாள்கள் சாப்பிட இழந்த இளமையைப் பெறலாம்.

### 9. அரிவாள்மனைப் பூண்டு

கூர் நுனிப் புற்கள் கொண்ட ஆப்பு வடிவ இலைகளை உடைய மிகக் குறுஞ்செடியினம். மாரிக் காலத்தில் தமிழகமெங்கும் சாலையோரத்தில் தானே வளரும். இலையே மருத்துவப் பயனுடையது. குருதிக் கசிவைத் தடுக்கும் மருந்தாகச் செயற்படும்.

1. இலையைக் கசக்கி வெட்டுக் காயத்தில் பிழிய இரத்தப் பெருக்கு நிற்கும்.

2. இதனுடன் சம அளவு குப்பைமேனி இலை, பூண்டுப்பல் 2, மிளகு 3, சேர்த்து அரைத்து புன்னைக்காய் அளவு உள்ளுக்குக் கொடுத்து, காயத்திலும் கட்ட நஞ்சு முறியும். உப்பு, புளி நீக்கவும்.

### 10. ஆடா தொடை

நீண்ட முழுமையான ஈட்டி வடிவ இலைகளையும் வெள்ளை நிறப் பூக்களையும் உடைய குறுஞ்செடி, சிற்றூர் களில் வேலியில் வைத்து வளர்க்கப்படுகிறது. தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் வளர்கிறது. இலை, பூ, வேர் ஆகியவை மருத்துவப் பயனுடையவை.

சளி நீக்கி இருமல் தணிப்பானாகவும் வயிற்றுப் பூச்சிக் கொல்லியாகவும் இசிவு நோய் நீக்கியாகவும் செயற்படும்.

(தொடரும்)

படிப்பகம்

www.padippakam.com



# நன்னெறியில் விவேக சிந்தாமணி

(கு. பொன்னுசாமி)

**கடந்த இதழின் தொடர்ச்சி**

பகிப்பவருக்கு இல்லை எனாது புசிக்கக் கொடுப்பது மனிதத்தன்மையாகும். அப்படி கொடுப்பதிலும் இன்முகத்தோடும் இரக்க உள்ளத்தோடும் கொடுப்பதுதான் பண்பு நெறியாகும்.

ஆனால், இன்றைய நடைமுறைப் பழக்கத்தில் ஈகை என்பதின் பொருளறி யாமல் உண்டு கொழுத்து தொந்தி வளர்ப் பார்க்கு வலியச் சென்று கொடுப்பதும், பலரின் புகழ் விரும்பும் நோக்கில் மெச்சிக் கொள்வதற்காகக் கொடுப்பதுமே வழக்க மாகிக் கொண்டிருக்கிறது.

அப்படிப்பட்டவர்களிலும் பலருடைய செயல்பாடுகள் வேறு விதமாக அமைந் துள்ளன.

விருப்பமின்மையால் வேண்டா வெறுப்பின் அடிப்படையில் ஒப்புக்கு "சனியன் வந்திட்டான் தொலைந்து போறான்; எதையாவது போட்டு அனுப்பு" என்போரும் இருக்கத்தான் செய்கிறார்கள். அதை விவேக சிந்தாமணியில்,

**ஒப்புடன் முகமலர்ந்தே உபசரி த்துண்மைபேசி**
**உப்பில்லாக் கூழிட்டாலுண்பதே யமிர்தமாகும்**
**முப்பழமொடு பாலன்ன முகங்கடுந் திருவராயின்**
**கப்பிய பசியினோடு கடும்பசி யாகுந்தானே**

வீடுதேடி வருகின்ற ஏழை எளியவர்களாயினும் சரி வறுமையின் வாட்டத்தில் வயிறு ஒட்டி ஒரு கவளம் சோற்றுக்கு ஏங்குபவர்களாக இருந்தாலும் சரி, அல்லது விருந்தினர்களாக இருந் தாலும் சரி,

அவர்களை உவப்புடன் இன்முகத் துடனும் முகமலர்ச்சியுடனும் வரவேற்று உண்மையான மொழிகளைப் பேசி உப்பில்லாக் கூழை வார்த்தாலும், அது உண்பவர்களுக்கு அமிர்தமாகும். அவ்வாறு இல்லாமல்....

மா, பலா, வாழை என் சொல்லப்படு கின்ற முக்கனிகளோடும் பலவிதமான பதார்த்தங்களோடும் அன்பு இல்லாமல் முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக் கொண்டு ஒருவருக்கு உணவு படைப்பார்களேயானால் அது உண்பவருக்கு முன்னிலும் இருந்த பசியைவிட மிகு பசி உண்டாக்குமே அல்லாமல் தணிக்காது.

இதிலிருந்து காண்பது என்ன?

பசி என்று வந்தவர்களுக்கு புசிக்கக் கொடுக்கும் போது, இன்முகத்தோடு உணவு படைப்பது தமிழர் பண்பாடு. அந்தப் பண்பாட்டின் பொருளறியாமல் முப்பழமும் பாலும் அன்னமும் இடுவராயின் முன்பிருந்த பசியைவிட மேலும் பசி உண்டாகும். அதனால் விவேக சிந்தாமணி கூறுவதின் பொருளறிந்து செயல்படுவது அறச் செயல் என உணர வேண்டும்.

**ஆலமரமும் பறவைகளும்**

பெரும்பாலும் செல்வம் உடையவர் களை ஒரு கூட்டம் சுற்றித் திரிந்து கொண்டே இருக்கும். கொடுக்கின்ற மனம் உடையவராயின் அரித்து எடுத்து விடு வார்கள்.

இம்மாதிரியான பாதிப்புக்குள்ளான வர்களில் ஒரு சிலரை மட்டுமே காண முடியும் ஆனால் பெரும் பாலான செல்வந்தர்கள் உதவி செய்யும் மனப்பான்மை இல்லாத வர்களாகவும், பொதுநல உணர்வில்லாத வர்களாகவுமே இருக்கின்றனர். அவர் களைக் கணக்கில் சேர்த்துக் கொள்ள வேண்டியதில்லை.

இவற்றுள்ளும் வெவ்வேறு துறைகளில் பலரும் இருக்கின்றனர். கட்சிகள், சங்கங்கள், இயக்கங்கள், கழகங்கள் போன்றவைகளிலும் மாறுபட்ட சிந்தனைவாதிகளும் தொண்டு செய்யும் உணர்வாளர்களும் நிறைய உண்டு.

அப்படிப்பட்டவர்கள் செல்வந்தர் நிலையை அடையாதவர்கள். ஆனால் யார் சென்றாலும் எதைச் செய்யச் சொன்னாலும் தங்களுக்கிருக்கின்ற சிரமங்களுக்கிடையே ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்ற விசாலமான உள்ளம் உடையவர்கள். அதற்காகத் தங்கள் கைப்பொருளையும் இழக்கின்றவர்கள்; இவர்களில் ஒரு சிலர் பொது நலமே தங்களின் உயர் லட்சியமாகக் கொள்பவர்கள்.

மேற்காணும் இப்படிப்பட்டவர்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளும் சுயகாரியப் புலிகளாக சிலர் செந்நாக்கை சுழலவிட்டுக் கொண்டிருப்பார்கள்.

தலைவர் , தலைவர் என்றும் முதலாளி, முதலாளி என்றும் புகழ்மாலை சூட்டிக் கொண்டே இருப்பார்கள்.

எல்லா இன்பங்களையும் இரவலா கவே அனுபவிப்பார்கள். இவர்களின் புகழுக்குரியவர்கள் தான் செய்து வந்த அளப்பரிய சேவையின் நிமித்தம் கொடுக்கல் வாங்கலில் எதிர்பாராத இழப்பு ஏற்பட்டு தாங்கொண்ணா கடன் தொல்லைகளால் அவதியுற்று அல்லல்பட்டு அனைத்தும் இழந்து ஓட்டாண்டியாகும் போது,

சுற்றி இருந்தக் கூட்டங்கள் கலைந்து போய்விடும். தலைவா! தலைவா! என அன்பொழுகப் பேசியவர்களெல்லாம் இருக்கும் இடம் தெரியாமல் மறைந்து கொள்வார்கள். இவர்களும் மற்றவர்களோடு சேர்ந்து கொண்டு பழி பேசுவார்கள்.

முதலாளி! முதலாளி என்றவனெல்லாம் முதல் எதிரியாகி விடுவான்.

இதை நினைவு படுத்தும்பொருளாக விவேக சிந்தாமணி சிறப்பாக விளக்கு கின்றது.

**ஆலிலை பூவுங்காயு மளிதரு**
**பழமு முண்டேல்**
**சாலவே பட்சியெல்லாந்**
**தன்குடி யென்றேவாழும்**
**வாலிபர் வந்துதேடி**
**வந்திருப்பர் கோடாகோடி**
**ஆலிலை யாதிபோனா**
**லங்குவந் திருப்பாருண்டோ**

(இ.பொ.)

ஆல மரத்தினிடத்து இலை, பூ, கா இனிமை தரும் பழம் முதலியவைக கண்ணுக்குக் கவர்ச்சியாகவும், குளிர் சியாகவும் இருக்குமேயானால் ப பறவைகளும், தமது இடமென்று, பழத்தை தின்னவும், அங்கேயே கூடி வாழும்; இளை ஞர்களும், நடைபாதையில் போவோரு வருவோரும் கூட நிழல் தேடி வந்திருப்பா

ஆனால், இலை முதலியன காய்ந் உதிர்ந்து நீங்கி மரம் பட்டுப் போகுமே னால் ஒரு பறவையும் தங்காது எல்லாமு பறந்து போய்விடும். பொது மக்களி தங்குவதற்கும் ஒருவரும் வரமாட்டார்கள்

அதே போன்று செல்வமுடையோ பொருளை இழக்க நேரிடினும் உண்மை பொது நல வாதிகள் பதவி பட்டம், சு அனைத்தும் இழக்க நேரிடினும், கூ இருந்தோ ரெல்லாம் விலகிப் போ விடுவார்கள் பறவைகளைப் போல,

இதைத்தான் இருக்கின்றவரை ஒட உறவாடுவார்கள். இல்லை என்றால் எட் போய்விடுவார்கள் என்று சுருக்கமா பலரும் கூறி வருவதைக் கேட்டிருப்பீர்க

**-தொட**

# உழைப்பின் அவசியம்!

உழைப்பு இல்லையேல் உலகம் நடைபெறாது. நாம் உலகத்தில் காணும் ஒவ்வொன்றும் உழைப்பின் பிரதிபலிப்பே. தேன், தேனீக்களின் உழைப்பு, இராமா யணம் கம்பரின் உழைப்பு, நெற்கதிர் விவசாயிகளின் உழைப்பு - இப்படி உலகத்தில் எவற்றைப் பார்த்தாலும் எங்கும் உழைப்பு அவசியமாகிறது. உழைப்பு இல்லையேல் உலகம் நடைபெறாது. பிறகு நாம் வாழ்வது மிகவும் கடினம்.

தேனீக்கள், மலர்களில் இருந்து தேனை சேகரிக்க சோம்பல் கொண்டிருந் தால் தேன் கிடையாது. கம்பர் மனம் தளர்ந்து இருந்தால் கம்பராமாயணம் முற்று பெற்றிருக்காது. தமிழ்மொழிக்கே மகுடம் சூட்டிய பெருமையும் அவருக்குக் கிட்டியிருக்காது. அவரது புகழும் இருபதாம் நூற்றாண்டு வரையில் நிலைத்திருக்காது. சூரியன் குறிப்பிட்ட நேரத்தில் உதிக்காமல் இருந்தால் ஆறு, குளம், குட்டைகளில் உள்ள நீர் வாயுவாகப் போயிருக்கும். மழை இல்லையேல் உலக உயிர்கள் வறட்சியின் காரணமாக பாலைவனமாக காட்சிதரும். ஆகவே, ஒவ்வொரு செயலுக்கும் உழைப்பு அவசியம்.

ஒரு மாணவன் தேர்வில் நல்ல புள்ளிகளைப் பெற வேண்டுமானால், விடா முயற்சியுடன் படிக்க வேண்டும். கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் நல்ல முறையில் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். வள்ளுவர்,

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு"(குறள். 396) எனும் குறளின் வாயிலாக படிப்பைப் பற்றி ஒரு மிகச் சிறந்த கருத்தைக் கூறியுள்ளார். தேர்வில் தேர்ச்சிப் பெற ஒரு மாணவன் எந்தளவிற்கு அதிகமாக அவன் படிக்கின்றானோ அந்தளவிற்கு அவனது அறிவு பெருகிக் கொண்டே போகும். ஆழமாகத் தோண்டத் தோண்ட மணற்கேணியில் நீர் சுரப்பது போலத்தான் கல்வியும். ஆகவே, மணற்கேணியைத் தோண்டுவதற்கும், அதிகம் படித்து அறிவை வளர்த்துக் கொள்வதற்கும் உழைப்பு முக்கியப் பங்கு ஆற்றுகிறது. இங்கு உழைப்பு மாணவரின் ஒளிமயமான எதிர்காலத்தைத் தருகிறது.

மாணவனுக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு மாந்தனுக்கும் தனது இலட்சியத்தை அடைய உழைக்க வேண்டியது அவசியம். சோம்பலை எதிரிபோல் நினைக்க வேண்டும். மருத்துவர் ஆகவேண்டும், ஆசிரியர் தொழில் செய்ய வேண்டும், உலக கின்னஸ் போட்டியில் சாதனை படைக்க வேண்டும் என்று எண்ணம் மட்டும் இருந்தால் போதாது. அவற்றை அடைய அயராது உழைக்கவும் வேண்டும். தகுந்த உணவு வகைகளைச் சாப்பிட வேண்டும்.

எறும்பு நம்மைவிட சிறுசுதான். இருப்பினும் எதிர்காலத்திற்காக உழை உணவு சேமிக்கிறது. எப்பொழுதும் சுறுப்பாக செயல்பட்டுக் கொ இருக்கும். எறும்பே எதிர்காலத்திற் உழைக்கும் போது நாம் உழை முடியாதா?

நல்ல வசதியான வாழ்க்கை உழைப்பு அவசியம். குறுக்கு வழி கையால்வதைத் தவிர்த்து நேர்வழி வியர்வை சிந்தி உழைத்த உழைப்புக்கேற்ற ஊதியம் நிச் கிடைக்கும்.

**-அனிதா முனியாண்டி,**
**லீ லேடெக்ஸ், சுங்கை தோ யோவா**
**கெடா.**



கடந்த 16.12.2001-ல் கோலா லம்பூர் டேவான் விஸ்மா பெரியாரில் நடைபெற்ற மலேசிய திராவிடர் கழக ஆண்டுவிழாவில் தைப்பிங் திராவிடர் கழகத் தலைவர் திரு. சி. சின்னப்பன் பி.ஜெ.கே. அவர் களுக்குப் "பெரியார் பெருந் தொண்டர்" என்ற விருது வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக் கப்பட்டது.



**"வெளிநாட்டுக்குப் போற கவர்ச்சி நடிகை கையிலே வெத்தலைப் பெட்டி வெச்சிருக்காங்களே?"**
**"அது வெத்தலைப் பெட்டி இல்லை... அவங்க டிரஸ் எடுத்துட்டுப் போற பெட்டி!"**

## கல்வியின் முக்கியத்துவம்

உலகிலுள்ள செல்வத்திலெல்லா கல்விச் செல்வமே அழியாச் செல்வம்.

"கற்றவனுக்கு சென்றவிடமெல்ல சிறப்பு" என்பற்கேற்ப நாம் கல்வி பயின்றா சென்ற இடமெல்லாம் சிறப்படைவோம்

இளமைப் பருவத்திலே கல்வியைக் கரைத்துக் குடிக்க வேண் "கல்விக்கு அழகு கசடற மொழித என்பதுபோல் அருவனுக்கு அழகு கல்வி நாம் வாவாசான் 2020-ஐ நோக்கிப் போ கொண்டிருக்கிறோம். நாட்டுக்கு சமுதாயற்றிற்கும் பயன்படும் வகையில் க அமைய வேண்டும்.

"ஓதாமல் ஒருநாளும் இரு வேண்டும்" என்பது அவ்வை வாக்கு.

"கற்க கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக" என்பது வள்ளு வாக்கு. நன்கு கல்வி கற்று, அதன்படி ஒ வாழ்தலே நல்ல வழியாகும்.

**-நளினி, சுப்பிரமணி**
**ஹா ஆலம், சிலாங்க**

www.padippakam.com



# சங்ககால நாணயங்கள்

கடந்த சில ஆண்டுகளாக, சங்ககால நாணயங்கள் துரை ஒட்டியுள்ள வைகை ஆற்றங்கரையிலும் கரூர் கரை அடுத்துள்ள அமராவதி ஆற்றங்கரையிலும், ிருக்கோவலூரைச் சார்ந்த தென்பெண்ணை ஆற்றங்கரையிலுமே கிடைத்துள்ளன. துறைமுகப் ட்டினமான காவிரிப் பூம்பட்டினத்தில் சங்ககாலச் சோழர் ாணயங்கள் கிடைத்துள்ளன; தங்க நாணயம் எதுவும் டைத்ததாகத் தொியவில்லை.

**முத்திரை நாணயங்கள்**


முத்திரை நாணயங்கள் தாம் இந்தியாவில் முதல் தலாக வெளியிடப்பட்ட நாணயங்களாகக் ந்தப்படுகின்றன. இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் வை பரவியிருந்தன. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வை கண்டெடுக்கப்பட்டுள்ளன. வடமேற்குப் நதியிலிருந்து தென்கோடியிலுள்ள திருநெல்வேலி வட்டம் வரை முத்திரை நாணயப் புதையல்கள் டைத்துள்ளன. அப்புதையல்கள் கிடைத்த பகுதிகளில் ந்நாணயங்கள் புழக்கத்திலிருந்தன என்பதை உணர கிறது.

இந்த முத்திரை நாணயங்களின் தோற்றம் குறித்து மித்த கருத்து இல்லை. கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு ாபே அவை வெளியிடப்பட்டிருக்க வேண்டும் என்று சில ஞர்கள் கருதுகின்றனர்.

முத்திரை நாணயங்களில் பலவகைக் குறியீடுகள் ளன. அவற்றுள் கதிரவன், மலை, மரங்கள், கிளைகள், த வடிவங்கள், முயல், நாய், தேள், பாம்பு முதலியன ப்பிடத்தக்கவை.

பண்டைக் காலத்தில் நம் முன்னோர் கதிரவன், ல, மரம், விலங்கு, பாம்பு போன்றவற்றை வழிபட்டு னர்.

மௌரியப் பேரரசின் முத்திரை நாணயங்களைத் உள்ளூர் முத்திரை நாணயங்களும் அந்தந்தப் திகளில் வழங்கி வந்தன. வடக்கே பேரரசன் அசோகன் சி செய்தபோது தெற்கே தமிழகத்தில் சேர - சோழ - டியர் என்ற மூவேந்தர் ஆட்சி புரிந்தனர். இம்மூவரில் ண்டியரே வெள்ளி முத்திரை நாணயங்களை ியிட்டுள்ளனர். இதுவரை சேரர்களோ, சோழர்களோ ியிட்ட வெள்ளி முத்திரை நாணயங்கள் க்கவில்லை.




**1. பாண்டியர் நாணயம் (வெள்ளி)**

நந்தர்களும் மௌரியர்களும் வெளியிட்ட வெள்ளி ரை நாணயங்களுக்குக் "கர்ஷ்ப்பண" என்று பெயர். ம்பாலும் அவற்றின் எடை 3.4 கிராம். அவற்றின் றத்தில் ஐந்து சின்னங்களும், பின்புறத்தில் பல சிறு த்திரைகளும் இருக்கும்.

சங்ககாலப் பாண்டியர் வெளியிட்ட வெள்ளி ரை நாணயங்களில் முன்புறம் ஐந்து சின்னங்கள் தாலும் பின்புறம் ஒரே சின்னம்தான் உள்ளது. மேலும் ஐந்து சின்னங்களும் தனித்தன்மையுடையனவாக ன.

படம் 1-ல் காணப்படும் நாணயத்தின் 2.8 கிராம் பளவை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் , பாண்டியர் வெளியிட்ட நாணயம், நந்த, மௌரியர் பிட்ட நாணயங்களிலிருந்து வேறுபட்டுள்ளதை லாம். இந்த நாணயத்தின் காலம் கி.மு. 3 ஆம் ண்டினதாக இருக்கலாம் என்று நாணயவியல் ர்கள் கருதுகின்றனர்.





நாணயத்தின் முன்புறம் சூரியன், ஆறு கை ட சதச்சக்கரம் (இதில் இரண்டு கைகள் தாம் ன்றன), மரக்கிளை, பாம்பு, வாத்து முதலிய கள் உள்ளன.

பின்புறத்தில், கோட்டு வடிவுடைய மீன் சின்னம். இக் காசு வைகை ஆற்றில் கிடைத்தாகும்.

**2. பெரு வழுதி நாயணம் (செம்பு)**

பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி பாண்டிய மரபில் மிகத் தொன்மையானவன் என்பதையும், பெருவழுதி மன்னர் பலர் இருந்தமை குறித்தும் சங்க இலக்கியங்கள் விரிவாகப் பேசுகின்றன. சங்ககாலச் செப்பேடுகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. மதுரை மாவட்டம் மாங்குளத்திலுள்ள குகைத் தளத்தில் கடலன் வழுதி என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு ஒன்று மட்டும் கிடைத்துள்ளது. இக்கல்வெட்டைத் தவிர வழுதி பரம்பரையைக் குறிக்கப் படம் 2-ல் விளக்கப்படும் நாணயம்தான் முக்கியமான சான்று. இந்த நாணயமே பெருவழுதி மன்னர்களின் கால ஆய்விற்கு அரியதோர் ஊன்றுகோலாக உதவி வருகிறது.



இந்த நாணயத்தின் முன்புறத்தில் இடப்புறம் நோக்கி ஒரு குதிரை நின்று கொண்டிருக்கிறது. அக்குதிரையின் முகத்திற்குக் கீழே இரண்டு தொட்டிகள் உள்ளன. குதிரை முகத்தின் அருகிலிருந்து பெருவழுதி என்ற சொல் தொடங்குகிறது. அச்சொல் தொன்மையான தமிழ் - பிராமி எழுத்து வடிவில் இருமுறை பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் கோட்டு வடிவுடைய மீன் சின்னம்.


இந்த நாணயத்தின் காலம் கி.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம். இக்காசு வைகை ஆற்றில் கிடைத்ததாகும்.

**3. மங்கலச் சின்னங்கள் கொண்ட நாணயம் (செம்பு)**

நாணயத்தின் முன்புறத்தில் வலப்பக்கம் நோக்கி யானை நின்று கொண்டிருக்கிறது. அதற்கு முன் ஒரு சூலாயுதம். அதனை அடுத்து ஒரு மனிதன் நின்று கொண்டிருக்கிறான். யானையின் மேல் இடப்பக்கத்திலிருந்து வலப் பக்கமாக வேலியிட்ட மரம், உடுக்கு போன்ற ஒரு சின்னம். இலைகளுடன் கூடிய கும்பம், பிறைச் சந்திரன், திருவஸ்தம், சங்கு சக்கரச்சின்னங்கள். பின்புறம் கோட்டு வடிவமுடைய மீன் சின்னம்.

இந்த நாணயத்தின் காலம் கி.மு. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம். இக்காசு வைகையாற்றில் கிடைத்ததாகும்.


**4. மன்னர் தலைபொறிக்கப்பட்ட நாணயம் (செம்பு)**




நாணயத்தின் முன்புறத்தில் பாண்டிய மன்னனின் முகம் பொறிக்கப்பட்டுள்ளது. நீண்ட மூக்கும், தடித்த உதடுகளும் கொண்ட முகம்.

நாணயத்தின் பின்புறத்தில் நீண்ட சதுரத் தொட்டி இருக்கிறு. அதில் நான்கு ஆமைகள் உள்ளன. அத்தொட்டியின் மேல் ஓர் யானை உள்ளது. இவை போன்ற சின்னங்களைத் தொன்மையான வெள்ளி முத்திரை நாணயங்களில் காணலாம். இந்த நாணயத்தின் காலம் கி.பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கொள்ளலாம். இக்காசு . வைகையாற்றில் கிடைத்ததாகும்.

5. சங்ககாலச் சேரர் நாணயம் (செம்பு)



1986- ஆம் ஆண்டில் முதன் முறையாகச் சங்ககாலச் சேரர் நாணயம் கரூரில் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின் சங்ககாலச் சேரர்களின் எழுத்துப் பொறிக்கப்பட்ட செப்பு, வெள்ளி நாணயங்கள் கிடைக்கத் தொடங்கின. கீழே கூறப்பட்டுள்ள எல்லா நாணயங்களும் கரூர் அமராவதி ஆற்றில் கண்டெடுக்கப்பட்டவையாகும்.

நாணயம் - 1


முன்புறம் : இடப்பக்கம், வளைந்த வடிவில் பாம்பின் வடிவம், அதற்கடுத்து வில் அம்பு; அதற்கடுத்து கோடரி; கோடரியின் கீழ் யானையின் உருவம் தெளிவாக இல்லை. இச்சின்னங்களின் ஊடே "டவரின்" என்றழைக்கப்டும் சின்னங்கள். நீரில் மீன் மிதப்பது போல் எல்லாப் பகுதிகளிலும் பரவிக் காணப்படுகிறது.

**பின்புறம் : வில், அம்பு.**

இவ்வகையான நாணயங்கள் தொன்மையான வெள்ளி முத்திரை நாணயங்களில் காணப்படும் சின்னங்களை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டவை. இந்நாணயத்தின் காலம் கி.மு. 2 ஆம் நூற்றாண்டு.

**நாணயம் - 2**

முன்புறம் : கீழ்ப்பகுதி இட ஓரம், வேலியிட்ட மரம்; அதற்கடுத்து வலப்பக்கம் நோக்கி நின்று கொண்டிருக்கும் யானை; யானையின் தலைக்கு மேல் ஆறு இதழ்களைக் கொண்ட பூப்போன்ற சின்னம்.




நாணயத்தின் தலைப் பகுதியில் இடமிருந்து, முதலில் ஆமை, அதனை அடுத்து மூன்று வளைவு கொண்ட முகடு. அதன் மேல் ஒரு பிறைச் சந்திரன். அதற்கு அடுத்துக் கொடிச் சின்னம். அதற்கு அடுத்துக் கோடரிச் சின்னம். அதற்கு அடுத்துச் சங்கு. மூன்று வளைவு மகட்டிற்குக் கீழ் ஏர் வடிவம்.

இந்த நாணயத்தில் காணப்படும் மூன்று வளைவு முகடும், அதன்மேல் பிறைச் சந்திரனும், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை. இச்சின்னம் மௌரிய அரசின் சின்னம் என்று கருதப்படுகிறது. யிராம்பூர்வா என்ற இடத்தில் அசோகர் நிறுவிய தூணில், தூணையும் அதற்குமேல் வைக்கப்பட்டு இருந்த பெரிய சிங்க உருவத்தையும் இணைப்பதற்குப் பயன்பட்ட செபபு ஆணி ஒன்று கிடைத்துள்ளது. அந்த ஆணியின் தலைப் பகுதியில், பிறையும் மூன்று வளைவு முகடும் கொண்ட சின்னம் பொறிக்கப்பட்டு இருந்ததால் அச்சின்னம் மௌரியரின் சின்னம் என்று உறுதிப்படுத்தப்பட்டது. சங்ககாலச் சேரரின் இந்த நாணயத்தில் மௌரிய இலச்சினையைப் பதித்து உள்ளமை மௌரியர்களுடன் ஏற்பட்ட இறுகிய நட்பின் அடையாளமாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. மௌரியரின் ஆட்சிக்காலம் கி.மு. 320 முதல் கி.மு. 175 வரையிலான காலமாகும். இதனால் இந்த நாணயத்தின் காலத்தைக் கி.மு. 2 ஆம் நூற்றாண்டு என்று கொள்ளலாம்.

**நாணயம் - 3**

**6. கொல் இரும்பொறையன் நாணயம் (செம்பு)**


முன்புறம் : ஒரு தோரணவாயில் வாயிலின் நடுவே ஒரு போர்வீரன். வீரன் அணிந்திருக்கும் குல்லா மேலை நாட்டுப் பாணியில் உள்ளது. இரு வகைகளையும் இடுப்பில் வைத்திருக்கிறான். சுற்றி விளிம்பில் தமிழ் பிராமி எழுத்து முறையில் "கொல் இரும்புறைய்" என்று பொறிக்கப்பட்டுள்ளது. தோரணவாயில் அருகே வேலியிட்ட மரச்சின்னம்.

பின்புறம் : நாணயத்தின் அடிப்பகுதியில் வில்லும் அம்பும் காணப்படுகின்றன. இதன் அருகே இடப் பக்கத்தில் ஆறு வளைவு முகடுகள் உள்ளன. வில்லின் அருகே வலப்பக்கத்தில் ஒரு சதுரத் தொட்டியும் அதில் இரண்டு மீன்களும் உள்ளன. நாணயத்தின் இடப்பக்கத்தின் மேல் பகுதியில் ஓர் ஆற்றின் கரை போன்ற கோடு உள்ளது. ஆற்றில் இணையாக இரண்டிரண்டு மீன்கள் ஒவ்வொன்றும் ஒன்றையொன்று பார்க்கும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளன.

**நாணயம் - 4**

**7. கொல்லிப்புறை நாணயம் (செம்பு)**

முன்புறம் : ஒரு தோரணவாயில். வாயிலின் நடுவே ஒரு போர் வீரன் அணிந்திருக்கும் குல்லா மேலை நாட்டுப் பாணியில் உள்ளது. அவனது உடையும் அவ்வாறே உள்ளது. ஒரு கையில் வாளும், மறு கையில் கேடயமும் இருக்கின்றன. சுற்று விளிம்பில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வழக்கிலிருந்த தமிழ் - பிராமி எழுத்து முறையில் "கொல்லிப்புறை" என்னும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.



பின்புறம் : வில்லும் அம்பும் நடுவில் காணப் படுகின்றன. இடப்பக்கம் மீன் சின்னங்களும், ஆமைச் சின்னமும் உள்ளன. வலப் பக்கத்தின் தலைப் பகுதியில் ஆறு வளைவுகள் கொண்ட முகடு வில்லின் அருகே கீழ்ப்பகுதியில் வலப்புறமாக "டவரின்" இலச்சினை.

சங்கத் தமிழ் இலக்கியங்களில் சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ள கொல்லிமலையின் காவலனான பொறையனின் நாணயம் இஃது என்பது தெரிகிறது. இலக்கியத்தில் தோன்றும் "பொறை" என்னும் சொல் நாணயத்தில் "புறை" என்று பொறிக்கப்படுள்ளது.

**நாணயம் - 5**
**8. மாக்கோதை நாணயம் (வெள்ளி)**

முன்புறம் : வலப்புறம் நோக்கிய அரசனின் மார்பளவுத் திருவுருவமும், நாணயத்தின் தலைப் பகுதியில் தொன்மையான தமிழ் - பிராமி எழுத்தில் "மாக்கோதை" என்ற சொற்றொடரும் உள்ளது. நீண்ட மூக்கும், மேட்டு நெற்றியும் உள்ளன.




(22-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# அவன்!

சிறுகதை :
வெ. தேவராஜலு,
பினாங்கு.

**அ**வன் அழகில் அவள் மயங்கிப் போனாள்!

அவனது சுருண்டு நெளியும் கேசமும், மஞ்சள் நிறத்தில் முகமும், நீண்ட மூக்கும், திரண்டு நிற்கும் தோள்களும், கூரிய பார்வையும் எந்தப் பெண்ணையும் எளிதில் மயக்கிவிடும் என்பதில் சந்தேகமில்லை தான். அதனால்தானோ என்னவோ அவளும் மயங்கிப் போனாள்.

அவன் மட்டும் அந்த அற்புதமான ஆசைக்கு அடிமையில்லை. அவன் பேச்சில் பணிவு இருந்தது. நேர்மையும் இருந்தது.

"மேடம் படுக்கையறையிலிருந்து எதையோ தூக்கி வைக்க வேண்டுமென்று அழைத்தீர்கள். உதவி செய்ய வந்த என்னிடம் ஏதேதோ பேசுகிறீர்கள்! வேலையைச் சொல்லுங்கள். செய்து விட்டுப் போகிறேன். மற்றவற்றை நாளை பேசலாம்".

"கண்ணன்" எவ்வளவு அழகான பெயர். கண்மணி என்ற பெயரும் அதனுடன் இணையக் கூடாதா என்ன! நம் இருவர் உள்ளமும், உடலும் இணைவதிலே உள்ள மகிழ்ச்சி வேறு எதிலும் கிடைக்காது கண்ணன். நாளை என்பது நம்முடையதல்ல! இன்றே இந்த இன்பமான இரவின் நிமிடங்கள் ஒவ்வொன்றும் நம்முடையவை. கோலாலம்பூர் சென்றுள்ள என் கணவர் நாளைக்கே திரும்பி வந்து விட்டால் இது போன்ற சந்தர்ப்பம் இனிமேல் வராமலே போகலாம் கண்ணன்" என்று கூறியவாறே அறைக் கதவின் தாழ்ப்பாளை இழுத்து மூடி, அவனை அவள் அணைக்க முயன்ற போது, அவன் தடுமாறி ரேடியோ வைத்திருந்த மேஜை மீது, விழுந்து எழுந்து நின்று, கை, கால்கள் வெட வெடக்க, "மேடம் பொறுங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள். வேலையில்லாமல் அலைந்த என்னை தங்கள் கணவர் கண்டு, அழைத்து வந்து, உங்கள் வீட்டில் டிரைவர் வேலையும் கொடுத்து, படுக்க இடம் கொடுத்து, தங்களுக்கு உதவியாய் இருக்கும்படியாய்க் கேட்டுக் கொண்டார். அவருக்கும் அவர் குடும்பத்திற்கும் "நன்றிக் கடமைப் பட்ட நான் இந்த தவறை எப்படி செய்ய முடியும், சிந்தித்துப் பாருங்கள். மனிதனுக்கு மட்டுமல்ல, கடவுளுக்கும் பயப்படுகிற மனிதன் நான், "கற்பு, ஒழுக்கம் என்பது பெண்களுக்கு மட்டுமல்ல, ஆண்களுக்கும் தான் என்று நினைப்பவன். ஆகவே நீங்கள் விரும்பும் பொல்லா வழிக்கு நான் உடன் பட மாட்டேன்" என்று கண் கலங்க கூறினான் கண் ணன்.

"என் பைத்தியக்கார கண்ணா... நான் என்ன என். கணவரை கை கழுவியா விட்டேன். நான் என்றும் அவர் மனைவிதான். அவர் மிகவும் நல்லவர்தான். ஆனால் என்னை சரீர சுகத்தில், நான் எதிர் பார்க்கிற அளவுக்கு சுகப்படுத்த அவரால் முடியவில்லையே....



இல்லையானால் நான் ஏன் உன்னிடம் இப்படி நடந்து கொள்கிறேன். எனக்கு மட்டும் கற்பு ஒழுக்கத்தைப் பற்றி தெரியாதா... என்ன? தயவு செய்து என்னோடு...."

"முடியாது மேடம்.... நான் இத்தனை பொல்லாங்குக்கு உடன் பட்டு கடவுளுக்கும், உன் கணவருக்கும் விரோதமாய் பாவம் செய்ய மாட்டேன்" என்று கதவைத் திறந்து கொண்டு வெளியேற முயன்ற போது, கண்மணி வீரிட்டு கூச்சலிட்டாள். விமானத்தில் போவதற்கு ஏதோ தடை ஏற்பட்டதினால், அப்போதுதான் வாசலடிக்கு திரும்பி வந்த அவளது கணவன் அந்த இடத்தை அடைவதற்கும் நேரம் சரியாக இருந்தது.

கண்மணி சப்தமிட்டு அழுது "இதோ பாருங்க... இதுக்குத்தான் இளைஞர்களை வேலைக்கு வைக்காதீங்க இந்த படுவா... ராஸ்கல் என்னை கற்பழிக்க முயற்சி பண்ணினாங்க.... நான் சத்தம் போட்ட உட னேயே கதவைத் திறந்து கொண்டு ஓடு கிறான்... அதற்குள் நீங்கள் வந்து விட்டீர்கள் என்று கூறிக் கொண்டே கணவனை கட்டிப் பிடித்துக் கொண்டு கதறிக் கதறி அழுதாள் கண்மணி.

அவள் வேதனைப்படு வதைப் போல நடித்ததை நம்பிய அவள் கணவன், மக்கு போல் அங்கு நின்று கொண்டிருந்த கண்ணன் மீது புலியைப் போல் பாய்ந்து, அவனைக் குதறி அடித்து நொறுக்கி, காலால் உதைத்து அவனை கேட்டுக்கு வெளியே தள்ளி விட்டு, வீட்டினுள் வந்து சோபாவில் மிக வேதனை நிறைந்த உள்ளத்துடன் சாய்ந்தான்.

"இந்த உலகத்தில் உதவி செய்வதே
பாவம்..." என்று அவன் நெஞ்சு கருவியது
இனி வாழ்நாளில் ஒரு மனிதனுக்கும் உத
செய்யவே மாட்டேன் என்று உறுதிப் பூண்
வனாய் குளியலறைக்குச் சென்று கோப
தணிய, குளித்து விட்டு அறைக்குத் திரும்பி
போதும் அவனது மனவேதனை கொஞ்சமு
குறையவில்லை அவனுக்குத் தூக்க
வராமல் படுக்கையில் படுத்துப் புர
ஆரம்பித்தான். மேல் மாடிக்குச் சென்
கண்மணி அங்கேயே படுத்து
கொண்டாள். அவளை அழைப்பதற்கு
மனமற்ற நிலையில் மனம் குழம்பியிருந்தா
அவள் கணவன்....

தூக்கம் அவனை அணுக மறுத்தத
என் பெயர் ஆனந்த், என்றிருந்தும் என
ஆனந்தம் எல்லாம் யாவும் என்னைவிட்டு
பறந்து போய்விட்டது என்று புலம்பினா
நடு இரவு. ஆகியும் நித்திராதேவி அவ
அணைக்க மறுத்ததால், பக்திப் பாட
களைக் கேட்டாலாவது மனம் ஆறுத
அடையுமா என்றெண்ணியவனா
வானொலி பெட்டியில், ஒலி நாடாவை
கேட்கும்படி, பட்டனைத் தட்ட முயன்
போது, பதிவு பட்டன் அமுங்கிக் கிடந்
தைக் கண்டு "எப்படி இது அமுங்கி
கிடக்கிறது... பாடல்கள் அழிந்து போ
விட்டதா" என்று எண்ணியவாறே பட்ட
யும் ஒலி நாடாவையும் சரி செய்
பாடல்களைக் கேட்பதற்குரிய பட்ட
அழுத்தியபோது, கண்ணனும் கண்மணி
பிரச்சினைக்கு முன்பாகப் பேசிய பேச்
பதிவாகி இருந்ததைக் கேட்டு ஆனந்
அதிர்ந்து போனான்.

விஷயமே வேறு விதமாய் இருக்கிற
என்று துடித்துப் போனான்.

கண்ணன் குற்றமற்றவன் என்ப
அறிந்து துடி துடித்தவனாய், "கண்ம
என்று கத்தினான். அவள் இறங்கி
வில்லை. அவள் என்னவானாள்?

ஆனந்த் தாமதியாமல் வெளியி
சென்று "கண்ணன்... கண்ணன்" என்
கத்தியவாறே அவனை அடித்துத் தள்ளி
சாலையை நோக்கி ஓடினான். ஆனந்தி
உதடுகள் "கண்ணன்... கண்ணன்..." என்
துடித்தது. கண்கள் கண்ணீரை நிற்கா
ஊற்றியது.

கண்ணனை சாலையில் கா
வில்லை.

ஆனந்த் "கண்ணன்... கண்ணன்..
என்று பிதற்றிக் கொண்டு, சாலையி
அவனைத் தேடிய வண்ணம் நடந்
கொண்டிருந்தான்.

---

**(நாணயங்கள்**
**21-ம் பக்கத் தொடர்ச்சி)**

(நாணயங்கள் 21-ம் பக்கத் தொடர்ச்சி)


பின்புறம் எந்தவித சின்னமும் பொறிக்கப்படாமல் வழுவழுப்பாக உள்ளது.

ரோமானிய நாணயங்களில் காணப்படும் மன்னரின் தலை உருவத்தைப் போன்ற அமைப்பு இந்த நாணயத்தில் உள்ளது. கி.பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்த ரோமானியப் பேரரசர்களான அகஸ்டஸ், டைபீரியஸ் ஆகியோரது வெள்ளி நாணயங்கள், கோவை அருகிலும், கரூரிலும் பெருமளவு கிடைத்துள்ளன. அவர்கள் வெளியிட்ட நாணயங்களில் அணிகலன்களே இல்லை. அதைப் போன்றே இந்த நாணயமும்



அணிகலன்கள் இல்லாமல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த நாணயத்தின் காலத்தை கி.பி. முதலாம் நூற்றாண்டு என்று கூறலாம்.

**நாணயம் - 6**



**9. குட்டுவன் கோதை நாணயம் (வெள்ளி)**

முன்புறம் : வலப்டக்கம் நோக்கிய அரசனின் மார்பளவுத் திருவுருவம். நாணயத்தின் தலைப் பகுதியில் தொன்மையான தமிழ் பிராமி எழுத்தில் "குட்டுவன் கோதை" என்னும் சொற்றொடர் உள்ளது. இச்சொற்றொடரில் உள்ள ஐந்தாவது எழுத்தான "ன்" தலை கீழாக பொறிக்கப்பட்டுள்ளது. இந்த நாணயத்திலும் மன்னன் தலை முழுமையாக மழுக்கிய நிலையில் உள்ளது. அகன்ற கண்ணும், நெடிய மூக்கும், தடித்த உதடும் தெளிவாகத் தெரிகின்றன. கழுத்தில் ஆடை காணப்படுகிறது.

பின்புறம் : எந்தச் சின்னமும் பொறிக்கப்படாமல் வழு வழுப்பாக உள்ளது. இந்த நாணயத்தின் காலம் கி.பி. முதலாம் நூற்றாண்டாக இருக்கலாம்.

**10. சங்ககாலச் சோழர் நாணய் (செம்பு)**

சங்ககாலச் சோழர் வெளியிட்ட ஈய, செப்பு நாணயங்கள் பல கிடைத்திருப்பினும் பெயர் பொறிக்கப்பட்ட நாணயம் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.




**நாணயம் - 1**

முன்புறம் : இடம் பக்கம் நோக்கி யானை நிற்கிறது. அதன் மேல் சதுர வடிவில் ஒரு தொட்டி. தொட்டியில் நான்கு மீன்கள் உள்ளன. தொட்டியின்




மேல், தலை கீழாக மூன்று வளைவு முகடு. யானைச் சின்னத்தின் கீழ் இடமிருந்து வலமாக வரிசையாக மீன்கள். நாணயத்தின் இடது ஓரத்தில் வேலியிட்ட மரம். அதற்கு மேலே மற்றொரு மூன்று வளைவு முகடு. அதன் அடிப்படை பாகமான இரண்டு வளைவுகள் மட்டும் தெரிகின்றன.

பின்புறம் : வாலை உயர்த்திய நிலையில் உள்ள
முத்திரை நாணயங்களில் காணப்படும் சின்னங்கள் இ
நாணயத்திலும் இருப்பதால் இது தொன்மைய
நாணயம் என்பது உறுதியாகிறது. இதன் காலம் கி.மு
ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்.

**நாணயம் - 2**

முன்புறம் : வலப்பக்கம் நோக்கி நிற்கும் கொம்
யானை. அதன் முன்னே குதிரை பூட்டிய தேர்.

பின்புறம் : இடப்பக்கம் நோக்கிப் பாயும்
முன் வலக்கால் தூக்கி, வாய்ப் பிளந்து, வால் உயர்
நிற்பதைக் காணலாம்.

**11. சங்ககால மலையமான் நாணயம் (செ**

நாணயத்தின் முன்புறத்தில் குதிரையொ
வலப்பக்கம் நோக்கி நின்று கொண்டிருக்கி
மலையமான் என்ற பெயர் தொன்மையான தமிழ் - பி
எழுத்து முறையில் காணப்படுகிறது. மலைய என்ற ப
குதிரைக்கு மேலும் மான் என்ற பகுதி கீழ்ப்பகுதியி
உள்ளன "மா" என்ற எழுத்து முன்னங்காலுக்கு அருகி
"ன்" என்ற எழுத்து குதிரையின் வாலுக்குப் பக்கத்தி
உள்ளன.

இந்த நாணயம் திருக்கோவலூரு
அருகிலுள்ள தென்பெண்ணை ஆற்றங்கரை
கிடைத்ததாகும்.

சங்ககாலச் சேர, சோழ, பாண்டிய மன்னர்க
நாணயங்களும் அதிக எண்ணிக்கையில் பல நாண
சேகரிப்பாளர்களிடமும், அருங் காட்சியங்களி
உள்ளன.

நன்றி: திருக்கோவலூர் பண்பாட்டுக் கழகம்.

படிப்பகம்

www.padippakam.com



# KINOTAKARA PENYEDUT TOKSIN TERUNGGUL
# கினோதக்காரா நச்சு உள்வாங்கி



**ஒட்டல்**
உறங்குவதற்கு முன்பு வெள்ளை நிற பாக்கெட்டிலான கினோதக்ரா நச்சு உள்வாங்கியை பாதத்தின் அடியில் ஒட்டி விடவும்.

**ஈர்த்தல்**
விடிந்ததும் பாதத்தின் வழியாக உடலில் உள்ள நச்சுத்தன்மையினை கினோதக்காரா உள்வாங்கிக் கொண்டிருப்பதைக் காணலாம். வெள்ளை நிற பாக்கெட் கருப்பு நிறமாகவும் நனைந்தும் காணப்படும்.

* மரம், செடி, கொடிகளின் உயிர் அதன்வேர் எனலாம். இந்த பூமி தோன்றியது முதல், காட்டில் வளரும் செடி கொடிகள் யாவும் தமக்கு வேண்டிய உணவினை இப்புவியிலிருந்து சுயமாகவே பெற்றுக் கொங்கின்றன. இவ்வாறு அவை தமக்கு வேண்டிய உணவினை பெற்றுப் பல நூறு ஆண்டுகள் உயிர் வாழ்வதற்கு மரங்களில் இயற்கையாகவே காணப்படும் "Wood Vinegar" எனப்படும் ஒருவகை மரத்திரவம் உதவுகிறது.

* ஜப்பான் எரிசக்தி ஆய்வுக் கழகத்தின் தலைவரான டாக்டர் தகாவோ மட்சுசிதா, முதன் முறையாக இந்த மரத்திரவத்தின் மீதான ஆய்வினை தொடக்கி வைத்து, கடந்த 26 ஆண்டுகாலமாக ஆய்வுகள் நடத்தி உடலில் உள்ள நச்சுத்தன்மையை வெளியேற்றுவதன் மூலம் உடல் ஆரோக்கியத்தை பேணிக் காக்கும் ஒரு சிறந்த சிகிச்சை முறையை கண்டுபிடித்தார்.

* காலின் அடிப்பாதம் ஒரு மனிதனின் இரண்டாவது இருதயமாக கருதப்படுகின்றது. அதில் 60-க்கும் மேற்பட்ட அக்குபஞ்சர் துளைகள் இருக்கின்றன. இந்தத் துளைகளின் வழியாக உடலில் உள்ள நச்சுத்தன்மையினை கினோதக்காரா உள்வாங்கிக் கொள்ளும்.

* நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் என்னவென்றால், இரவு உறங்கச் செல்லும் முன் கினோதக்காராவை உங்களின் இரு பாதங்களுக்கு அடியிலும் ஒட்டிக் கொள்ளுங்கள். விடிந்ததும் அதன் பலனை நீங்களே உணர்வீர்கள்.

* 7 விதமான மருத்துவ குணம் கொண்ட கலவைகளை உள்ளடக்கிய இந்தக் கினோதக்காரா மனிதனின் ஆரோக்கியத்தை பேணிக் காக்கவல்லது.

**அஸ்ட்ரா ஜப்பான் கார்ப்பரேஷன் நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட கெ-லின்க் சென்டிரியான் பெர்ஹாட் நிறுவனம் ஆசிய பசிபிக்கின் 15 நாடுகளை பிரதிநிதிக்கும் ஒரே ஏஜெண்டாக செயல்பட்டு வருகிறது. மேலும் நமது நாட்டிலுள்ள இந்நிறுவனம் முதன் முறையாக ஜப்பான் எரிசக்தி ஆய்வுக் கழகத்தின் அங்கத்தினராகவும் நியமிக்கப்பட்டுள்ளது.**

**ஆசிய பசிபிக்கின் ஒரே ஒரு ஏஜெண்ட் :**
கெ-லின்க் சென்டிரியான் பெர்ஹாட் (496046-H)
Suite 8, 04-8, 15, 8th Floor, Pudu Plaza Office Tower
Jalan Landak Off Jalan Pudu, 55100 Kuala Lumpur, Malaysia,
தொலைபேசி : 03-2143 6333 தொலைநகல் : 03-2143 1889
மின்னஞ்சல் : K. link@tm.net.my

**மேலும் விபரங்களுக்கு, அழையுங்கள் 03-2143 6333 அல்லது தொலைநகல் : 03-2143 1889**

பெயர் : .................................... தொலைபேசி :.................................... முகவரி :....................................

........................................................................................................................

☐ இந்தப் பொருளைப் பற்றி மேலும் விவரங்கள் அறிய விரும்புகிறேன் ☐ கெ-லின்க் நிறுவனத்தின் விற்பனை ஏஜெண்டாக விரும்புகிறேன்

Published by : R.G. Centre, No : 34-B, Jalan Petaling Utama - 9, Taman Petaling Utama, Batu 7, Off Jalan Klang Lama, 46000 Petaling Jaya, Sel.D.E.
Tel & Fax : 03-77855767 E.mail: uyarvom@yahoo.com - Editor R.G. Raju. & Editor Incharge : Komakal A/P Alagan @ S. Alagason
Printed by : km, No: 9, Jalan Murai Dua, Batu Compex, 51200 Kuala Lumpur.

படிப்பகம்

# திராவிடர் கழகத் தலைவர் ரெ.சு. முத்தையா தலையிட வேண்டும்

திராவிடர் கழகம் பொருளாதாரத் திட்டத்தில் அடி வைத்த போதுதான் திராவிடர் கழகத்தின் தனித்தன்மை சின்னா பின்னமானது.

ஒரு இயக்கத்திற்கு பொருளாதார பலம் என்பது மிக மிக முக்கியம் என்பதை அனைவரும் அறிவர்.

அதே சமயத்தில் கண்கெட்டு சூரிய வணக்கமாக இருந்துவிடக் கூடாது; இயக்கக் கொள்கையின் வளர்ச்சிக்கு வலுவை ஊட்ட வேண்டும்.

ஆனால், திராவிடர் கழகத்தின் துரதிர்ஷ்டம் எதிர்மாறான விளைவை ஏற்படுத்தியுள்ளது.

பொருளாதாரத்தில் முனைப்புக் காட்டாதவரை கழகக் கொள்கையில் பிடிப்பும் வளர்ச்சியும் இருந்து வந்தது.

பொருளாதாரத்தில் நாட்டம் மிகுதியாகி அதைப் பற்றிய செயல்பாடுகளில் கழகத்தவர்கள் தீவிரம் காட்டியதும் எல்லாமும் தலைகீழாக மாறிவிட்டது.

கழகம் மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கைகள் என்ன என்பதைக் கவனிப்போம் :-




**1. தமிழ் முரசு பங்குத் திட்டம்**

கழக உறுப்பினர்களும் பொது மக்களும் ஒரு பங்கு 100 வெள்ளிக் கொடுத்து வாங்கினர். அது என்ன ஆனது என்ற நிலவரம் இன்றளவும் யாருக்கும் தெரியாத மர்மமாகவே இருந்து வருகிறது.

## தமிழர்களால் தொடங்கப்படும் கூட்டுறவுக் கழகங்கள் தோல்வி அடைவது ஏன்?

**2. பில்மோர் நிலத்திட்டம்**

10 ஏக்கர் நிலத்தை ஏறக்குறைய 104 பேர்கள் வாங்கியதாக அறிகின்றோம். 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னமும் இழுபறி நிலை.

**3. பெர்டிக்காரி காப்புறுதித் திட்டம்**

இத்திட்டத்திற்கு கழகத்தினரும் பொதுமக்களும் பணம் செலுத்தினர். அதன் விபரம் இன்றளவும் புரியாத புதிராகவே இருந்து வருகிறது.

**4. பெரியார் இண்டஸ்ட்ரீஸ்**

இத்திட்டம் செயல்படத் தொடங்கியது. ஆனால், அதன் இன்றைய நிலை என்ன? இதுவும் கேள்விக் குறியாகவே இருக்கிறது.






**5. டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் மலேசிய வருகை**

கலைஞர் கருணாநிதி அவர்களை மலேசியாவிற்கு வரவழைத்து சிறப்பு செய்யும் பொருட்டு அழைப்பிதழ் அடித்து நாடு முழுவதும் விற்பனை செய்து பணம் வசூலிக்கப்பட்டது. இன்றளவும் அதன் முடிவுகள் தெரியாமல் இருக்கிறது.

**6. காஜாங் வீட்டுமனைத் திட்ட**

ஏறக்குறைய 10 ஏக்க நிலத்தை 120 பேர்களுக் மேற்பட்டோர் பங்குதாரர் களா சேர்ந்து RM 3 லட்சத்து 6 ஆயிரத்துக்கு மே வாங்கப்பட்டது.ஒரு ஆளுக்கு ஆயிரம் வெள்ளி வீதம் வாங்குவதர் முன்னோடிகளாக இருந்த வர்க காலஞ் சென்ற முன்னாள் திராவிட

(17-ம் பக்கம் பார்க்

## சீனர்களால் அந்நிலத்தில் மீது கேவியட் போடப்பட்டிருக்கிறதே! ஏன்?

## முன்னாள் தே.தோ. தொழிற்சங்கம்; சிலாங்கூர் மாநிலத்தில் பணியாற்றிய இலட்சுமணனும் முன்னாள் திராவிடர் கழக தேசியத் தலைவர் கே.ஆர். ராமசாமியும் காஜாங் நிலத்தை அடகு வைத்துப் பணம் வாங்கினார்களா?




Published by : Sengathiron No : 34-B, Jalan Petaling Utama - 9, Taman Petaling Utama, Batu 7, Off Jalan Klang Lama, 46000 Petaling Jaya, Sel.D.E.
Tel & Fax : 03-77855767 E.mail: uyarvom@yahoo.com - Editor & Editor Incharge : Sengkathiron
(Jacob A/L Ponnusamy) Printed by : 5076 Lorong 18/64A, Sri Serdang Industial Park, 43300 Seri Kembangan, Sel. Tel : 03-894538